விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 02 வெள்ளிக்கிழமை (15.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118

## ஊழல் # சித்திரவதை # பாலியல்


# குற்றமிழைத்தவர்கள் தொடர்ந்து தப்பிப்பு

## இலங்கையை சாடுகிறது அமெரிக்கா

(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற போரின் போதும், போருக்குப் பின்னரும் ஊழல், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் தொடர்பில் குற்றமிழைத்தவர்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி குற்றஞ்சாட்டியுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....



## பாக்.மரக்கறிகள் இறக்குமதி –ரிசாத்

(கொழும்பு)

பாகிஸ்தானில் இருந்து மரக்கறிகளை அதிகளவில் இறக்குமதி செய்யவுள்ளதாக அரசாங்கம தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள, வர்த்தக, கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் இதனைத் தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## வாகன சாரதிகள் 818 பேர் கைது

(கொழும்பு)

புத்தாண்டுக் காலத்தில் நேற்று மட்டும குடிபோதையில் வாகனம் செலுத்திய 130 பேர் பொலிஸாரால கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை குடிபோதையில் வாகனம் செலுத்திய 818 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் மோட்டார் சைக்கிளில

24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையில் முதலீடு செய்ய சவுதி இளவரசர் இணக்கம்

(கொழும்பு)

சவுதி இளவரசர் அப்துல் அஸீஸ பின் பைசல் இலங்கையில் முதலீடு செய்யவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அவர் விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு அரச மட்ட உயர் அதிகாரிகளுடன் இருதரப்பு பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சவுதி அரேபிய சென்றுள்ள இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நேற்று முன்தினம் சவுதி இளவரசர் அப்துல் அஸீஸ் பின் பைசல் பின்

24ஆம் பக்கம் பார்க்க....

## கரையொதுங்கிய படகால் பரபரப்பு

(சென்னை)

தமிழகத்தின் ராமேஸ்வரம், தனுஷ்கோடி பகுதிக்கு இலங்கையிலிருந்து சென்றதாகக் கூறப்படும மர்மப் படகால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த மர்மப் படகில் இருந்தவர்கள் குறித்து இந்திய மத்திய, மாநில உளவுப் பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பி

24ஆம் பக்கம் பார்க்க....

## குளத்து நீரில் மூழ்கி 7 வயது சிறுவன் மரணம்

(வவுனியா)

புதுவருட தினத்தில் நீராடச் சென்ற வேளை வவுனியா, கனகராயன் குளத்தில் மூழ்கி ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் நேற்று மரணமடைந்துள்ளான்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புதுவருட தினமான நேற்றைய தினம் வவுனியா, கனகராயன் குளம் பகுதியில் உள்ள ஐயனார் ஆலயத்திற்கு பின்புறமாக அமைந்துள்ள கனகராயன் குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவர்களில் ஏழு வயது நிரம்பிய நிதுசன் என்ற சிறுவன்

24ஆம் பக்கம் பார்க்க....

## மின்கம்பத்துடன் மோதுண்டு மோ.சைக்கிள் விபத்து!

### பாடசாலை மாணவர்கள் இருவர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு பாடசாலை மாணவர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

டிஸ்கவர் மோட்டார் சைக்கிளில் அதிக வேகமாக பயணித்த 17 வயது பிரஸ்தப மாணவர்கள் இருவரும் வீதி வளைவு ஒன்றில் திருப்ப முற்பட்டவேளை வேகத்தை

23ஆம் பக்கம் பார்க்க....

## சமஷ்டியை பிரிவினைவாதம் எனக்கூறும் தினேஷின் கருத்து விந்தையாகவுள்ளது

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

சமஷ்டி தீர்வை பிரிவினைவாதம் என தினேஸ் குணவர்த்தன போன்ற படித்தவர்கள் கூறுவது மிகவும் விந்தையாக உள்ளது என தெரிவித்த வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,

தினேஷ் குணவர்த்தனவின் தந்தை, பிலிப் குணவர்த்தன சமஷ்டி தீர்வை சரியான தீர்வு என்ற நிலையில் அவருடைய மகன் அதை பிரிவினைவாதம் என்கிறார் எனவும சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாண சபையினால் முன்வைக்கப்பட்ட தீர்வு திட்ட முன்

24ஆம் பக்கம் பார்க்க....



## 800க்கும் அதிகமான வீடுகள் முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளது

(கொழும்பு)

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து 2015-ம் ஆண்டு தொடக்கம் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றப்படும் மக்களுக்காக மீள்குடியேற்ற அமைச்சினால் 800றகும் அதிகமான வீடுகள் முதலாம் கட்டத்தில் வழங்கப்படவுள்ளதாகவும், இதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்

23ஆம் பக்கம் பார்க்க....




## அரச சேவைக்கான வயதெல்லையை அதிகரிக்கும் பிரேரணை


(கொழும்பு)

பட்டதாரிகளை அரச சேவையில் சேர்த்துக்கொள்ளும் வயதெலலையை 45 ஆக அதிகரிப்பதற்கான பிரேரணை, அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு குறிப்பிட்டது.

அரச சேவையில் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும் வயதெ

24ஆம் பக்கம் பார்க்க....

## கேப்பாப்பிலவு மக்களின் காணியை வெகுவிரைவில் மீட்டுத் தருவேன்




### மக்களுடனான சந்திப்பில் சம்பந்தன் உறுதியளிப்பு

(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவில் உள்ள பொது மக்களின் காணியை வெகுவிரைவில் மீட்டுத்தருவேன் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அப்பகுதி மக்களிடம் நேற்றைய தினம் உறுதியளித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவ

23ஆம் பக்கம் பார்க்க....

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மயக்கமடைந்த குடும்பஸ்தர் வீதி விபத்தால் மரணம்

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை கொண்டாடும் வகையில் நண்பர்கள் இணைந்து நண்பர் ஒருவரின் வீடு ஒன்றிற்கு அருகில் மது அருந்தி கொண்டிருந்த வேளையில் போதை அதிகமானதால் நபர் ஒருவர் தவறி வீழ்ந்து சுயநினைவை இழந்துள்ளார்.

இந் நிலையில் அவரை வைத்திய சாலைக்கு கொணடு சென்ற முச்சக்கர வண்டியும் வீதியில் உள்ள மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் சுயநினைவு இழந்த மேற்படி நபர் விபத்தில் அடியுண்டு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் பூண்டுலோயா நாவலப்பிட்டி பிரதான வீதியின் கலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் இராவண கொட மல்தெனிய பிரதேசத்தை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 42 வயதுடைய எம்.டபிள் யூ.டீ குமாரபால என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மல்தெனிய வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (செ-12)


WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
(C-4302)



## ஹோட்டல் இரவு நேரகாவல் பணியாளர் பதவி

**இரவு நேர காவல் பணிபுரிய பணியாளர் ஒருவர் தேவைப்படுகிறார்.**

**தகைமை :** க.பொ.தராதர (சாதாரணம்) கற்றிருத்தல். ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நன்கு உரையாடக் கூடியவராய் இருத்தல். வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவகரின் நற்சான்று பத்திரம்.

அடையாளஅட்டையின் போட்டோ பிரதி, பிறப்பு அத்தாட்சிப் பத்திர பிரதி ஆகியவற்றுடன் 18.04.2016 மு.ப. 10.00 மணிக்கு சமுகம் தரவும்.

**வயது :** 40-50 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல்
**சம்பளம் :** பேசி தீர்மானிக்கப்படும்.

**முகாமையாளர், யாழ்.கொலிடே இன் ரூர்ஸ் அன் ரவல்ஸ்**
**(Jaarl Holiday Inn Tours and Travels)**
**இல. 19, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**

(4196)

021 221 7858 / 077 06 94 086 / 077 97 83 179


# அந்தியேட்டி சபீண்டிகரண அழைப்பு

அன்னை மடியில் மண்மகிழ 1956.10.29

17.03.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

ஆண்டவன் அடியில் விண்மகிழ 2016.03.17



## அமரர் சுந்தரலிங்கம் தவமணிதேவி (சுசிலா)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.04.2016 (சனிக்கிழமை) அதிகாலை 4.30 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தத் தலத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரை ஊறணி வைத்தியசாலையில் வைத்திருந்தபொழுது மருத்துவ சிகிச்சைகள் அளித்த வைத்தியர்கள், தாதியர்கள், காவல் துறையினர், அன்னாரது இறுதிச் சடங்குகளின் பொழுது உதவிகள் புரிந்தும், இரங்கல் செய்திகளை அனுப்பியும் எமது துயரத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்,**
**த.சுந்தரலிங்கம், பிள்ளைகள், மருமக்கள் மற்றும் குடும்பத்தினர்.**
**T.P. No : 0774503370**
**UK தொடர்பு இல. :- 00447852494640**

**தீருவில்,**
**வல்வெட்டித்துறை.**

(C-4345)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை சிவசங்கர் (சங்கர்)



பளையைப் பிறப்பிடமாகவும் புலோலி வடகிழக்கு உத்திராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவசங்கர் (சங்கர்) 13.04.2016-ம் திகதி அகால மரணமானார்.

அன்னார் செல்லத்துரை சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், தனபாலசிங்கம் - அற்புதராணி தம்பதியரின் மருமகனும், தயாநந்தினியின் பாசமிகு கணவரும், பிரவீனனின் அருமைத் தந்தையும், நல்லம்மா, கமலா, பவளம், (டென்மார்க்), குமரேஸ்வரன் (பிரான்ஸ்), றாகினி, ரதீஸ்வரன் (சம்மங்கி அவுஸ்திரேலியா), வசந்தகுமாரி, வனஜா (பிரான்ஸ்), அமரர் நாகேஸ்வரன் ஆகியோரது அருமை சகோதரனும், சிவலிங்கம், விநாயகமூர்த்தி, வரதராஜா, பெமலாஸ், பாஸ்கரன், சாந்தி ஆகியோரது மைத்துனரும், யோகேஸ்வரன் (துரை), சிவஞானம் (ஞானம்) ஆகியோரது பாசமிகு ஒன்றுவிட்ட சகோதரனும், சதீஸ், மதீஸ், ஆகியோரது சித்தப்பாவும், அஜிதா, சுபாகரன், குயின்ஷிகா, பிறின்ஷிகா ஆகியோரது பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 15.04.2016ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உத்திராவத்தை,**
**புலோலி வடகிழக்கு,**
**புலோலி.**
**தொ.பே.இல : 0775869607**


**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(4209)

# அன்னை தையற்பிள்ளை

**ஆன்ம ஈடேற்றப் பிரார்த்தனையும் ஈமக்கடன் நிறைவேற்றலும்**
**கீரிமலை - 17.04.2016**

## நன்றி நவிலல் அழைப்பு



**அன்புடையீர்!**

எம் தாயார் தையற்பிள்ளை 18.03.2016 அன்று காலமாகிவிட்ட செய்தி முதல் அன்னார் இறுதி நிகழ்ச்சிகள்வரை கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய, செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எம் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

17.04.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணி முதல் கீரிமலை "சிவபூமி" மண்டபத்தில் ஆன்ம ஈடேற்றப் பிரார்த்தனை இடம்பெறும், தொடர்ந்து மு.ப. 10.00 மணிக்கு சிவபூமியில் கல்வெட்டு (நினைவு மலர்) வெளியீடும் நீத்தார் பெருமை, ஈமக்கடன் தொடர்பில் தமிழ் பண்பியல் கருத்துரைகள் இடம்பெறும். கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் நிகழ்வுகளை வழிநடத்தி வைப்பார்.

நிறைவாக பி.ப. 1.00 மணிக்கு சிவபூமி மண்டபத்தில் மதிய உணவு பகிர்வோம்.

இவ் அனைத்து நிகழ்ச்சிகளிலும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு நன்றியுடன் அழைக்கின்றோம்.

**0777373377**
**0212228776**
**0779288461**

**ஆச்சியின் பிள்ளைகள்**
**குடும்பத்தினர் சார்பில்**
**மாவை.சோ.சேனாதிராசா**

(C-4344)

# மாத்தளை லக்கல பொலிஸ் நிலையத்தில் அதிகாலை வேளை ஆயுதங்கள் திருட்டு

(கொழும்பு)

மாத்தளை லக்கல பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த பல ஆயுதங்கள் மர்ம நபர் ஒருவரால் நேற்று வியாழக்கிழமை அதிகாலை திருடப்பட்டுள்ளது. ரி-56 துப்பாக்கி ஒன்றும் கைத்துப்பாக்கிகள் ஐந்தும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


சாரம் மற்றும் மேலாடை அணிந்த ஒருவரினாலேயே திருட்டு இடம்பெற்றுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பொலிஸ் நிலையத்தில் 4 பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடமையில் இருந்த அவர்கள் மது போதையில் இருந்தனரா? என்பது தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை சம்பவம் தொடர்பில் விரைவில் விசாரணைகள் நடத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபர் எஸ்.என் விக்கிரமசிங்க மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.(இ)

## இயந்திரக் கோளாறால் விமானம் விழுந்து நொறுங்கி 12 பேர் பலி



பப்புவா நியூ கினியாவின் ஒக்சப்மின் பகுதியில் இருந்து கியூங்கா நகருக்கு நேற்று முன்தினம் இலகுரக விமானம் புறப்பட்டு வந்தது. கியூங்காவில் தரையிறங்க முற்பட்டபோது, திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டது.

இதனால், தலைகீழாக விழுந்து விமானம், ஓடுபாதைக்கு அருகில் உள்ள நிலத்தில் விழுந்து நொறுங்கியது.

இதில் விமானத்தை இயக்கிய அவுஸ்திரேலிய விமானி மற்றும் 3 குழந்தைகள் உள்ளிட்ட 12 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பிஎன்ஜி செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

தனது நாட்டைச் சேர்ந்தவர் பலியானதை அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை உறுதிசெய்துள்ளது. ஆனால, அவர் அந்த விமானத்தின் விமானி என்பதை உறுதி செய்யவில்லை.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே விபத்து நேரிட்டுள்ளது என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மர்மமான முறையில் விகாராதிபதி மரணம்

(கொழும்பு)

வெலிகம, ஜம்புருகொட போதிருக்காராம விகாரையின் விகாராதிபதி உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை விகாரையின் அறையொன்றிலிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த விகாராதிபதி கடந்த சில தினங்களுக்கு முன்னர் மரணமடைந்திருக்க வேண்டும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது ஒரு மர்ம மரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (இ)

## புத்தாண்டின் போதும் கூடாரங்களில் பல்கலை.மருத்துவபீட மாணவர்கள்

(கொழும்பு)

அனைத்து பல்கலைக் கழகங்களிலுமுள்ள மருத்துவ பீட மாணவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக வளாகத்தில் கூடாரங்களை அமைத்து தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக கடந்த சில மாதங்களாக மருத்துவபீட மாணவர்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்பிரகாரம், இராகம, கராபிட்டிய, ரஜரட்ட உள்ளிட்ட பல்கலைக்கழகங்களிலும் இவ்வாறு கூடாரங்கள் அமைக்கப்பட்டு மாணவர்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாம் எமது கோரிக்கைகளுக்காக இவ்வாறான பண்டிகை தினங்களிலும் எமது குடும்பங்களை விட்டு பிரிந்து நாட்டின் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக போராடி வருவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவரான லகிரு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுத் தரக்கூடிய அதிகாரிகள் உரிய தீர்வினை இதுவரை எடுக்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமெனவும் தெரிவித்தார்.

மேலும், இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு அருகில் உள்ள மக்கள் உணவுகளை வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது. (இ)

## நல்லிணக்கத்துக்கு அமெரிக்கா உதவும்

இலங்கையில் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை அமெரிக்கா மேற கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் ஜனநாயகம் தொடர்பான அமெரிக்காவின் செயலகப் பணியகத்தின் செயலாளர் டொம் மாலினொஸ்கி இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பான அமெரிக்கா 2015 ஆம் ஆண்டுக்கான அறிக்கை வெளியிட்ட பின்னர் செயலாளர் டொம் மாலினொஸ்கி தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதன்படி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையும் இலங்கையும் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றிக் கொண்ட யோசனையை நடைமுறைப் படுத்துவதற்கு அமெரிக்கா உதவும் என்று டொம் மாலினொஸ்கி தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் தொடர்பான அமெரிக்காவின் அறிக்கையில் இலங்கையில் இன்னமும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மீண்டும் வர்த்தக உறவுகளில் பாகிஸ்தானுடன் இலங்கை

### இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

பாகிஸ்தானுடன் வர்த்தக உறவுகளை அதிகரிக்க இலங்கை உறுதி அளித்துள்ளதாக பாகிஸ்தானிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் ஜயனத் லொக்குகொடகே மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிக்க தன்னுடைய நாடு ஆதரவுவழங்க இருப்பதாக அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற பாகிஸ்தான் - இலங்கை நட்பு வர்த்தக மற்றும் முதலீட்டு சங்க திறப்பு விழாவில் உரையாற்றிய போது பொருளாதார ஒருங்கிணைப்பு, பிராந்திய வர்த்தக இணைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் உறுதிப்பாடு அவசியம் என்றும் கூறியுள்ளார்.

இராஜதந்திர, பொருளாதார, வர்த்தக உறவுகள் இவை அனைத்தும் இந்த இரு நாடுகளுக்கும் இடையே பல தசாப்தங்களாக இருந்து வந்துள்ளமை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (இ)

## இத்தாலியில் 2 நாட்களில் 4 ஆயிரம் அகதிகள் மீட்பு!

(கொழும்பு)

போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து ஐரோப்பாவில் தஞ்சம் தேடி கடல் வழியாக ஆபத்தான பயணம் மேற்கொண்ட 4,000 அகதிகளை கடந்த இரண்டு நாட்களில் மீட்டதாக இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்நாட்டுச் சண்டை நடைபெற்று வரும் சிரியா, ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து வரும் அகதிகளுடன், லிபியாவிலிருந்தும் ஏராளமான அகதிகள் வரத் தொடங்கியுள்ளதால், ஐரோப்பிய நாடுகளை நோக்கி வரும் அகதிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்றும் நேற்று முன்தினமும் 4 ஆயிரம் அகதிகளை மீட்டுள்ளதாக இத்தாலிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (இ)

## விமான நிலையத்தில் பெண் கைது ரூ.40 லட்சம் பெறுமதியான தங்க நகைகள் அரசுடைமை

(கொழும்பு)

தனது பிரயாணப் பொதியில் 40 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை எடுத்துக் கொண்டு இந்தியா செல்ல முற்பட்ட பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கத்திணைக்களத்தினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான இவர் கொழும்பை வசிப்பிடமாக கொண்டவர் என தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்களில் தங்க பிஸ்கட் மற்றும் நகைகள் என்பன காணப்படுவதாக சுங்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட தங்கம் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டதுடன், சந்தேக நபருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(இ)

## ஐ.தே.கவின் மேதினக் கூட்டத்திற்கு இம்முறை 4 லட்சம் ஆதரவாளர்கள்

(கொழும்பு)


ஐக்கிய தேசியக் கட்சியினால் கொழும்பு கெம்பல் மைதானத்தில் நடத்தவுள்ள மே தினக் கூட்டத்துக்கு கட்சியின் ஆதரவாளர்கள் 4 இலட்சம் பேரை ஒன்றுதிரட்டுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்தின் எதிர்க் கட்சித் தலைவர் மஞ்ஜு ஸ்ரீ அரங்கல தெரிவித்துள்ளார்.

ஒரு தொகுதியிலிருந்து குறைந்தது 1500 பேரை கலந்துகொள்ளச் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தொகுதி அமைப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களின் அமைப்பாளருடைய நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# ஷாருக்கானுக்காகவும் ஒரு வீடியோ; அடங்காத பாகிஸ்தான் மொடல் நடிகை





அப்ரிடி, ஹோலிக்காக வீடியோவை வெளியிட்டுக் கொண்டிருந்த பாகிஸ்தான் டிவி நடிகை குவாண்டீல் பலூச்சின் பார்வை தற்போது பாலிவுட் நடிகர் ஷாரூக்கான் மீது திரும்பியுள்ளது.

முன்னதாக இருபது-20 உலகக்கிண்ணப் போட்டிகளில் இந்தியாவை பாகிஸ்தான் வீழ்த்தினால் முழு தேசத்திற்காகவும் நிர்வாண நடனம் ஆடத் தயாராக இருப்பதாக கூறி குவாண்டீல் ஒரு வடியோவை வெளியிட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து இந்திய அணியின் துணைத்தலைவர் விராட் ஹோலியை காதலிப்பதாக கூறி ஒரு வீடியோவை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் தற்போது குவாண்டீல் பலூச், ஐபிஎல் போட்டிகளில் விளையாடி வரும் கொல்கத்தா அணியின் உரிமையாளர் மற்றும் பாலிவுட் நடிகரான ஷாருக்கானை குறிவைத்துள்ளார்.

ஷாருக்கானுக்காக அவர் வெளியிட்டுள்ள வீடியோவில், பாலிவுட் சினிமாவின் கிங் கானுக்காக நான் ஒரு சிறப்பு தகவல் வைத்திருக்கிறேன்.

தற்போது நடைபெற்று வரும் ஐபிஎல் போட்டியில் உங்களின் கொல்கத்தா அணி வெற்றி பெற்றால் நீங்கள் மகிழ்ச்சியடையும் வகையில் அந்த வெற்றியை கொண்டாடுவேன் என வாக்குறுதி அளிக்கிறேன் என்று கூறியுள்ளார். (க)

# டோனியின் புனேயை வீழ்த்தி குஜராத் அசத்தல் வெற்றி




ரைசிங் புனே சுப்பர் ஜெயிண்டஸ் அணியை குஜராத் லயன்ஸ் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். சீசன் 9-ன் நேற்றைய போட்டியில் ரைசிங் புனே சுப்பர் ஜெயிண்ட்ஸ் அணி குஜராத் லயன்ஸ் அணியை எதிர்கொண்டது.

நாணய சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை முதலில் தேர்வு செய்த புனே அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை குவித்தது. துடுப்பாட்டத்தில் டுபிளசிஸ் 69 ஓட்டங்களைப் பெற்றார்.

இதனையடுத்து 164 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என களமிறங்கிய குஜராத் அணி 18 ஓவர்களில் 3 விக்கெட்டை இழந்து 164 ஓட்டங்களை எடுத்து எளிதாக வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் பின்ச் 50 ஓட்டங்களையும் மக்கலம் 49 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டநாயகனாக பின்ச் தெரிவானார். (க)

# புதிய கிரிக்கெட் அணியை வாங்கிய தொழிலதிபர் விஜய் மல்லையா




இந்திய வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி கடன் பாக்கி வைத்துவிட்டு தலைமறைவாக உள்ள பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா, கரீபியன் பீரிமியர் லீக் தொடரில் பார்படோஸ் அணியை விலைக்கு வாங்கியுள்ளார்.

ஐ.பி.எல் தொடரில் பெங்களூர் றொயல்சேலஞ்சர்ஸ் அணியின் முக்கிய பொறுப்புகளிலிருந்து விலகியதையடுத்து, கடந்த பெப்ரவரி மாதம் இந்த புதிய அணிக்கு பங்குதாரர் ஆகியிருப்பதாக மல்லையா கூறியுள்ளார்.

இதற்காக இந்திய மதிப்பில் சுமார் 6 ஆயிரத்து 500 ரூபாய் மட்டுமே செலவழித்துள்ளதாக தெரிவித்த மல்லையா, அந்த அணியின் மதிப்பு சுமார் ரூ.130 கோடியாக உள்ள நிலையிலும், மற்ற உரிமையாளர்கள் தன்னையும் பங்குதாரராக இணைத்துக்கொள்ள சம்மதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே பாலிவுட் நடிகர் ஷாருக்கானும் கரீபியன் பீரிமியர் லீக்கில் ஒரு அணியின் உரிமையாளராக இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சச்சின் படத்தின் டீசர் வெளியானது




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் வாழ்க்கை வரலாறு குறித்த படத்தின் வீடியோ டீசர் வெளியாகியுள்ளது.

இதில் சச்சின் டெண்டுல்கரின் கிரிக்கெட் வாழ்க்கையுடன் தனிப்பட்ட வாழ்க்கையும் மிகவும் சுவாரஸ்யமாக காட்டப்படவுள்ளது.

சச்சின் எ பில்லியன் டிரீம்ஸ் (Sachin A million Dreams) என்கிற இந்த படத்தை 200 நாட் அவுட் என்கின்ற விளம்பர நிறுவனம் தயாரித்துள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த ஜேம்ஸ் எஸ்ர்கின் தயாரிக்கும் இந்த படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார்.

இந்த படத்தில் சச்சினும் பங்கேற்றுள்ளார்.

இந்தப் படத்தின் டீசர் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. (க)

# சுரேஷ் ரெய்னா வீட்டில் குவா, குவா சத்தம்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான சுரேஷ் ரெய்னா விரைவில் தந்தையாகப் போகிறார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ரெய்னா, தனது சிறு வயது தோழியான பிரியங்கா சவுத்ரியை திருமணம் செய்து கொண்டார்.

இந் நிலையில் தனக்கு அடுத்த மாதம் குழந்தை பிறக்கப் போவதாக ரெய்னா மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

அவரது மனைவி ஹாலந்தில் உள்ள வங்கியில் வேலை பார்த்து வருகிறார்.

அவரின் உடல்நிலையை கவனித்துக் கொள்ள ரெய்னாவின் தாயார் அங்கு சென்றுள்ளார். (க)

தரம்-5 மாணவர்களுக்கான

## புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-06

பகுதி-I

## தமிழ்க் கல்விக் கழகம்

விடைகள்

(13.04.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

| | | | |
|---|---|---|---|
| 1.2 | 11.3 | 21.3 | 31.1 |
| 2.2 | 12.2 | 22.3 | 32.1 |
| 3.3 | 13.2 | 23.2 | 33.1 |
| 4.2 | 14.3 | 24.2 | 34.2 |
| 5.2 | 15.3 | 25.2 | 35.2 |
| 6.3 | 16.1 | 26.2 | 36.2 |
| 7.1 | 17.2 | 27.1 | 37.2 |
| 8.2 | 18.2 | 28.3 | 38.1 |
| 9.3 | 19.3 | 29.3 | 39.2 |
| 10.2 | 20.1 | 30.1 | 40.2 |

# மான்பவர் ஊழியர்கள் நேற்றும் சத்தியாக்கிரகம்

கடந்த சில வாரங்களாக நிரந்த நியமனம்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மான்பவர் (man power) ஊழியர்கள் புதுவருடப் பிறப்பான நேற்றும் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்தவகையில், புத்தாண்டு கொண்டாட்டம் தொடர்பில் அவர்களிடம் வினவிய போது, எமது தொழில் நிர்ந் தரப்படுத்தப் படாத ஒன்றாக காணப்படு கின்றது.

அரசியல்வாதிகளும் எமது கோரிக்கைக்கு செவிசாய்க்காதவர்களாக இருக்கின்றார்கள். நிரந்தர தொழில் இல்லாமல் எப்படி புத்தாண்டை கொண்டாடுவது. சந்தோசமாக இருக்க வேண்டிய இந்த நாளில் நாங்கள் உரிமைக்காக போராடும் ஒரு சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். மேலும் நூறு நாட்கள் வேலைத்திட்டத் தின்போது, எங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாக கூறிய போதும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுககப்படவில்லை.

மேலும், இந்த புத்தாண்டு தினத்திலே எமது குடும்பத்தினர் எந்தவித கொண்டாட்டத்திலும் ஈடுபடாமல் இருக்கின்றனர். இதற்கு காரணம் இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இருக்கக் கூடிய சில அமைச்சர்களே.

நிரந்தரமான தொழில் இருக்கும் போது தான் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும் உடல் உள ரீதியாக நாம் பல வேதனைகளில் இருக்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கண்ணீர் மல்க தெரிவித்தனர். (இ)


அன்பு வாசகர்களே!

உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த

♦ செய்திகள்

♦ புகைப்படங்கள்

♦ நிகழ்வுகள்

♦ பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல

076 636 3378

Viber


# துறைமுக நகரப் பணிகள் அடுத்த மாதம் மீள ஆரம்பம்

## அமைச்சர் நிரோசன் தகவல்

(கொழும்பு)

கொழும்புத் துறைமுக நகரத் திட்டப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று தேசிய கொள்கைகள் மற்றும், பொருளாதார விவகார அமைச்சர் நிரோசன் பெரேரா தெரிவித்துள்ளார்.

"சீனப் பயணத்தின் போது இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எல்லா உடன்பாடுகளையும் இறுதி செய்துள்ளார்.

எனவே மே மாதம் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட வாய்ப்புகள் உள்ளன.

திட்டப் பணிகளை அடுத்த மாதம் ஆரம்பிப்பதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா:39 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/5734

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 40சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்BIT/அரசதொழில
தொ.இ: B/5735

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: விசாகம
கி.பா: 26
தகைமை/தொழில்O/L/தனியர் தொழில
தொ.இ: B/5737

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 42செவ் 8 இல
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/Lசுவிஸ் PR
தொ.இ: B/5738

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அவிட்டம
கி.பா: 4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:CIMA/கணக்காளர்
தொ.இ: G/5775

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 18உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BA/அரசதொழில
தொ.இ: G/5776

பிறப்பு: 1966 இந்து
நட்சத்திரம்: மூலம
கி.பா: 49செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/5780

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மூலம
கி.பா: 35
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:Diloma/தனியார் தொழில
தொ.இ: G/5783

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## இராசி பலன்

15.04.2016

(சித்திரை 02, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
நவமி பின்னிரவு 2.59 மணிவரை
பூசம் முன்னிரவு 8.17 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
ஸ்ரீராம நவமி

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | | |
| கேது | சந்திராஷ்டமம் மூலம், பூராடம் | | சந் |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** யோகமான நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்பால் பொருளாதார நிலை உயரும், உறவினர் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தனவரவு திருப்திகரமாக அமையும்.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், திட்டமிட்ட பணிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கன்னி:** திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

## சுயதொழிலை மேம்படுத்த உதவி



வடக்கு மாகாண சமூகசேவைத்திணைக் களத்தினால், நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, பல நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

இதன் பிரகாரம், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில், சுயதொழிலைமேம்படுத்த சமூக சேவைப் பிரிவினால் 30ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்படவுள்ளது. முதற்கட்டமாக பயனாளி ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா காசோலையாக வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அக் காசோலையை வழங்கும் நிகழ்வில், உதவிப் பிரதேச செயலர் எஸ். ராஜீவ், சமூக சேவை அதிகாரி எஸ்.வரதபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-60)

## மண்டலாபிஷேக பூர்த்தி

கொக்குவில்தலையாளிஸ்ரீஞான வைரவர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி வைபவம் இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது. வைரப்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து விசேட பூஜையும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் மகேஸ்வரப் பூஜையும் நடைபெறும்.

மாலை 4மணிக்கு பூஜையும் ஆரம்பமாகி வைரவ பெருமான், விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை சமேதராக உள்வீதி, வெளிவீதி உலா வலம் வருவார். அத்துடன் ஈழத்துப்புகழ் பூத்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசைக் கச்சேரியும் நடைபெறும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (இ-9)

## தொலைத்தொடர்பு நிலையத்தில் அதிகாலை வேளை திருட்டு

(கரணவாய்)

துன்னாலை மத்தியிலுள்ள தொலைத்தொடர்பு நிலையம் ஒன்று நேற்று வியாழக்கிழமை அதிகாலை உடைக்கப்பட்டு தொலைபேசி உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புலோலி-சாவகச்சேரி வீதியிலுள்ள மயூரா எனும் தொலைத்தொடர்பு நிலையமே உடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரவு கடையினைப் பூட்டி விட்டு சென்றோர் காலையில் கடையினைத் திறக்கச் சென்றபோதே கடை உடைக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

எவ்வளவு பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டன என்பது குறித்து உடனடியாக அறியமுடியவில்லை. இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறைபிடப்பட்டுள்ளது. (இ-60)




## காதலர்களால் பொலிஸாருக்கு இடையூறு

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு சென்று தம்மை ஒன்று சேர்க்குமாறு கேட்ட காதலர்களால் பொலிஸார் பெரும் இடையூறுக்கு உள்ளாகியதாக தெரிவிக்கப்படுகின்றது.

சித்திரை வருடப்பிறப்பிற்கு முதல் நாள்(நேற்று முன்தினம் புதன்கிழமை) இரண்டு காதல் ஜோடிகள் நெல்லியடி பொலிஸ் நிலையம் சென்றனர்.

கப்பூது மற்றும் இராஜகிராமத்தினைச் சேர்ந்தவர்களான இவர்களில் ஒரு ஜோடி சட்டத்தரணி ஒருவரை அழைத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் காதல் ஜோடிகள் இவ்வாறு பொலிஸ் நிலையத்திற்கு செல்வதனால் பொலிஸாருக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது. (இ-60)

# காரணங்கள் கூறாமல் கைதுசெய்யப்படும் நடவடிக்கை நல்லாட்சியிலும் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

எனது கணவரை வெள்ளை வானில் வந்தவர்களே எந்தக் காரணமும் கூறாமல் கூட்டிச்சென்றனர். காரணத்தை கூறுங்கள் அல்லது எனது கணவரை விடுதலை செய்யுங்கள் என சாவகச்சேரியில் கடந்த 10 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட முன்னாள் போராளி ஜெயந்தனின் மனைவி தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எனது கணவர் இராசதுரை ஜெயந்தன் (வயது- 31) சாவகச்சேரி நுணாவிலை பிறப்பாகக் கொண்டவர். புனர்வாழ்வு பெற்று 2011 ஆம் ஆண்டு விடுதலையானார். தற்போது எமக்கு திருமணமாகி கிளிநொச்சி உருத்திரபுரத்தில் 8 மாதகாலமாக வசித்து வருகிறோம். எமக்கு 2 வயதில் ஒருபெண் குழந்தையும் உண்டு.

கோவில் திருவிழாவுக்காக நுணாவிலில் அமைந்துள்ள எனது கணவரின் அம்மாவினுடைய வீட்டுக்கு வந்திருந்தோம். சம்பவதினம் காலை 9 மணியளவில் எனது கணவர் வீட்டில் வேலி அடைத்துக் கொண்டு இருந்தார். 2 மோட்டார் சைக்கிள்களில் சிவில் உடையில் வந்த 4 பேர் அவரை விசாரணை செய்வதற்காக வீட்டினுள் அழைத்து வந்தார்கள். நாம் எதற்காக விசாரணை செய்கிறீர்கள்?என்ன பிரச்சினை என்று வினவியபோது அனைத்தையும் அவரிடம் கேளுங்கள் என தெரிவித்தனர்.

பேசிக்கொண்டிருக்கும் போதே எமது வீட்டை சோதனையிட்டார்கள். அப்போது வெள்ளைநிற வாகனம் ஒன்று எமது வீட்டுக்கு முன் வந்து நின்றது. அதில் அவரை ஏற்றிச் சென்றுவிட்டார்கள்.

அவருடன் சேர்த்து அவருடைய மோட்டார் சைக்கிளையும் எனது கணவருடைய அண்ணாவின் மோட்டார் சைக்கிளையும் கொண்டு சென்றார்கள்.

நாங்கள் அவரை விடும்படி கேட்டபோது அரியாலையில் அமைந்துள்ள சி ஐடி அலுவலகத்துக்கு வருமாறு சொல்லிவிட்டு சென்றார்கள். நாம் உடனடியாக அங்கு சென்றபோது வவுனியாவில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் அலுவலகத்துக்கு செல்லுமாறும் அங்கு அவரை பார்க்க முடியும் எனவும் கூறினார்கள்.

நாம் அடுத்தநாள் 11 ஆம் திகதி காலை அவர்கள் கூறிய இடத்துக்கு சென்ற போது அது ஒரு பாழடைந்த வீடாக இருந்தது. அங்கு சென்ற போது ஜெயந்தனை தேடியா வந்தீர்கள் என கேட்டார்கள். அங்கு எனது கணவரை வீட்டில் வைத்து விசாரணை செய்தவரும் நின்றிருந்தார்.

அவரை பூசாவிற்கு அனுப்பியுள்ளதாகவும் உங்களுடைய வதிவிடத்தை கிராமசேவகர் ஊடாக உறுதிப்படுத்திய பின்னர் அங்கு சென்று அவரை சந்தியுங்கள் என தெரிவித்தனர்.

எனது கணவருக்கும் எந்த குற்றச்செயல்களுக்கும் சம்பந்தம் இல்லை.எனது கணவரை கைது செய்ததற்கான காரணமும் இது வரை யாரும் தெரிவிக்கவில்லை. உரிய காரணத்தைக் கூறவேண்டும் இல்லையேல் எனது கணவரை விடுதலை செய்யவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சாவகச்சேரி பகுதியில் தற்கொலை அங்கி மீட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை சந்தேகத்தின் பேரில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# நிலையான சமாதானம் எட்டப்படும் வரை நிலையான அபிவிருத்தி சாத்தியமற்றது

## சிறிதரன் எம்.பி.சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கிலே உள்ள தமிழ் மக்களை வைத்துக் கொண்டுதான் நிதி உதவிகளை அரசால் வெளிநாடுகளில் கோரமுடியும். எங்களைச் சாட்டி எடுக்கும் பணம் எங்களிடத்தில் இன்னுமொரு சரியான அபிவிருத்தியை அல்லது ஒரு மாற்றத்தினைத் தரவில்லை. நிலையான அபிவிருத்தியென்பது நிலையானதொரு சமாதானம் எட்டப்படும் வரை சாத்தியமற்றது.

தமிழ் மக்களது பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு சமாதானமொன்று உருவாக்கப்படும் வரை இங்கு எந்த அபிவிருத்தியை கடைப்பிடித்தாலும் கூட சாத்தியமற்றதென்ற யதார்த்தத்தை உணர்ந்து கொள்ள வேண்டும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார். சாவகச்சேரி மருதடி கிராமத்தில் கடந்த 10 ஆம் திகதி "விடிவெள்ளி" சமூக மேம்பாட்டு மையத்தி



னால் அமைக்கப்பட்ட தையல் மற்றும் கணனி பயிற்சி நிலையத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், குறைந்தது ஒரு கிராம சேவையாளரை இடமாற்றம் செய்யும்படி அரச அதிபருக்கு கட்டளையிடும் அதிகாரமாவது இல்லாதவரை அபிவிருத்தி என்பது மத்திய அரசிலிருந்து எங்களை ஏமாற்றுகின்ற அபிவிருத்தியாகவே மாறிக் கொண்டிருக்கும். அவ்வாறான ஒரு சூழ் நிலையில்தான் எமது மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் நாம் எடுக்கும் முயற்சி மிகமிக முக்கியமானதாகிறது. பல நிறுவனங்கள் தமிழ்ப்பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்கு நிதி உதவிகளைச் செய்வதில் பின்னிற்கின்றன. தாம் செய்யும் நிதி உதவியளவு தொழில் துறையினரின் பங்களிப்பு இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலை. 'உப்பளம் ஆனையிறவில்', 'நீர்வேலியில் கண்ணாடித் தொழிற்சாலை', 'நாவற்குழியில் அன்ரிஸ்' அச்சுவேலியில் கைத்தொழிற் பேட்டை என இருந்தன. இவை எல்லாம் இன்றுவரை இயங்க முடியாது இருக்கிறதென்றால் அதற்குப் பின்னால் வேறு பல காரணங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தினால் இவற்றை இயங்க வைக்க முடியாத தொன்றல்ல. தொழில் மயப்படுத்தப்பட்ட அல்லது தொழிற்சாலை மயப்படுத்தப்பட்ட விடயங்களை உருவாக்குவதில் அரசு மிகவும் பின்னிற்கின்றது. புலம்பெயர் தேசத்திலிருந்து எத்தனையோ பேர் வருகிறார்கள். போகிறார்கள் சிந்திக்கிறார்கள். ஆனால் சமூகத்துக்கான நல்லதைச் செய்வதற்கான சூழல்களை யார் யார் கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சிகளில் துணிந்து கால் வைக்கிறார்கள் என்பதுதான் முக்கியமானது.

"விடிவெள்ளி"சமூக நிறுவனம் எமது மக்களின் வாழ்வில் விடிவெள்ளியாக இருக்குமென்பதற்கு இது எடுத்துக்காட்டாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் அதிபர் க.கைலைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண சபை கல்வி அமைச்சர் த.குருகுலராசா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், முன்னாள் அதிபரும் விடிவெள்ளி நெறியாள் கைக் குழு உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி தொகுதித் தலைவருமான க.அருந்தவபாலன் ஆகியோர் இந்நிகழ்வில் உரையாற்றினர். அத்துடன் 10 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் ஒரு மாணவிக்கு பட்டப்படிப்புக்கான தொடர் உதவித் தொகையின் ஆரம்பக் கொடுப்பனவும் வழங்கி வைக்கப்பட்டது. மையத்தின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து அருந்தவபாலன் விரிவாக எடுத்துக் கூறினார். (இ-29)

# தி.மு.க-அ.தி.மு.க 169 தொகுதிகளில் நேரடிப் போட்டி

## நேர் எதிராய் களம் காணும் முக்கிய பிரமுகர்கள்

தி.மு.க. வேட்பாளர் பட்டியல் வெளியானதைத்தொடர்ந்து, தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. தி.மு.க.-அ.தி.மு.க. ஆகிய இரு பிரதான கட்சிகளும் மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 169 தொகுதிகளில் நேருக்கு நேராய் களம் காண்கின்றன.

இதுபோன்ற நேரடிப்போட்டி கடந்த பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது ஏற்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக தென் மாவட்டங்களில் இரு கட்சிகளுக்கும் இடையே வலுவான போட்டி உருவாகியுள்ளது.

வட மாவட்டங்கள் சென்னையைப் பொறுத்தவரை ஆயிரம் விளக்கு தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராக பா.வளர்மதி போட்டியிடுகிறார்.

அவரை எதிர்த்து, தி.மு.க. பிரபலமான கு.க.செல்வம் போட்டியிடவுள்ளார். விருகம்பாக்கத்தைப் பொறுத்தவரை செல்வாக்குப் பெற்ற நான்கு பேர் களத்தில் இறங்கியுள்ளனர். விருகை வி.என்.ரவி (அ.தி.மு.க.), க.தனசேகரன் (தி.மு.க.), பார்த்தசாரதி (தே.மு.தி.க.), தமிழிசைசௌந்தரராஜன் (பா.ஜ.க.) என நான்கு முக்கிய பிரமுகர்கள் போட்டியிடுவதால் அந்தத் தொகுதியும் பிரதான தொகுதிகளில் ஒன்றாக மாறியுள்ளது.

ஆலந்தூர், சைதாப்பேட்டையைப் பொறுத்தவரை தி.மு.க.-அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளுமே மக்களுக்கு நன்கு அறிமுகமான வேட்பாளர்களை இறக்கியுள்ளது. அ.தி.மு.கவில் பண்ருட்டி எஸ்.ராமச்சந்திரன், பொன்னையனும், தி.மு.கவில் மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசனும் போட்டியிடவுள்ளனர்.

காட்பாடியில் தி.மு.க. வேட்பாளராக துரைமுருகன் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து கடந்த தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட அப்பு, இந்தத் தேர்தலிலும் அவரை எதிர்க்கிறார். பெண்ணாகரத்தில் பி.என்.பி.இன்பசேகரனும் (தி.மு.க.), கே.பி. முனுசாமியும் (அ.தி.மு.க.) வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத்தொகுதியில்பா.ம.க. செல்வாக்கு பெற்றது என்பதால், அங்கு அந்தக் கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர் தொகுதியின் வெற்றியை தீர்மானிக்க வாய்ப்பிருக்கிறது. இதேபோன்று, கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடியில் சொரத்தூர் இரா.ராஜேந்திரன் (அ.தி. மு.க.), எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் (தி.மு.க.) ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

தென்-மத்திய மாவட்டங்கள் தென்-மத்திய மாவட்டங்களிலும் அ.தி.மு.க.-தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவும் சூழல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, திண்டுக்கல் ஆத்தூரில் அமைச்சர் நத்தம் ஆர்.விஸ்வநாதனுக்கும் (அ.தி.மு.க.), முன்னாள் அமைச்சரும், தொகுதியின் எம்.எல்.ஏயுமான ஐ.பெரியசாமிக்கும் இடையேயும், அரவக்குறிச்சியில் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி (அ.தி.மு.க.), தொகுதி எம்.எல்.ஏ., கே.சி.பழனிசாமி (தி.மு.க.) இடையேயும் கடும் போட்டி நிலவக் கூடும்.

திருச்சி மேற்கு தொகுதியில் தி.மு.க. வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என்.நேருவை எதிர்த்து, அரசு கொறடாவான ஆர்மனோகரன் (அ.தி.மு.க.) களம் இறங்குகிறார். மதுரை மேற்கு தொகுதியில் அமைச்சர் செல்லூர் கே.ராஜூவை (அ.தி.மு.க.) எதிர்த்து தி.மு.க. வேட்பாளர் கோ.தளபதி போட்டியிடுகிறார். கம்பம் தொகுதியில் தமிழக அரசின் டில்லி சிறப்புப் பிரதிநிதி எஸ்.டி.கே.ஜக்கையனும் (அ.தி.மு.க.), அந்தத் தொகுதியில் செல்வாக்கு பெற்றவரான ஆர்.ராமகிருஷ்ணனும் (தி.மு.க.) நேரடியாக களம் காணுகின்றனர்.

முன்னாள் அமைச்சர்கள் அருப்புக்கோட்டை தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் வைகைச் செல்வனை எதிர்த்து, தி.மு.க. வேட்பாளராக கே.கே.எஸ் எஸ் ஆர்.ராமச்சந்திரன் போட்டியிகிறார். இருவரும் முன்னாள் அமைச்சர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, அம்பாசமுத்திரம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வாரியத் தலைவர் முருகையாபாண்டியனும் (அ.தி.மு.க.), ஆர்.ஆவுடையப்பனும் நேரடியாக மோதுகின்றனர். பாளையங்கோட்டையில் போட்டியிடும் இரு கட்சிகளின் வேட்பாளர்களும் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள். தமிழ்மகன் உசேனும் (அ.தி.மு.க.), டி.பி.எம்.மைதீன்கானும் (தி.மு.க.) போட்டியிடவுள்ளனர்.

தூத்துக்குடியில் அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சரான சி.த.செல்லபாண்டியனும், தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சரான பெ.கீதாஜீவனும் நேருக்கு நேராக களம் காண உள்ளனர். திருச்செந்தூரில் அ.தி.மு.க. வேட்பாளர் ஆர்.சரத்குமாரும், தி.மு.க. சார்பில் அனிதா ராதாகிருஷ்ணனும் களம் இறங்குவதால் அந்தத் தொகுதி நட்சத்திர தொகுதியாக மாறியுள்ளது.

**அமைச்சர்களை எதிர்க்கும் காங்கிரஸ்**

தி.மு.க.. கூட்டணியில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சி தென் மாவட்டங்களில் சில தொகுதிகளில் அ.தி.மு.க. அமைச்சர்களை எதிர்த்து போட்டியிடவுள்ளது. திருமங்கலத்தில் அமைச்சர் ஆர்.பி.உதயகுமாரையும், சிவகாசியில் அமைச்சர் கே.டி. ராஜேந்திர பாலாஜியையும், குளச்சலில் முன்னாள் அமைச்சர் கே.டி.பச்சமாலையும் எதிர்க்கவுள்ளது.

போட்டி அதிகமாகும் அ.தி.மு.க., தி.மு.க. வேட்பாளர் பட்டியலை முழுமையாக வெளியிட்ட நிலையில், மக்கள் நலக் கூட்டணி-தே.மு.தி.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் முழுமையான பட்டியலை வெளியிடும் போது முக்கியமான தொகுதிகளில் பலமுனைப் போட்டி நிலவ வாய்ப்பிருக்கிறது. (இ)




### இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்த அமெரிக்கர்களின் உடல் எச்சங்கள் கையளிப்பு

இரண்டாம்உலகப்போரில், இந்தியாவில் கொல்லப்பட்ட அமெரிக்க வீரர்களின் உடல் எச்சங்களை அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பும் நிகழ்வொன்று முதல் முறையாக நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

டில்லியில் நடைபெற்ற அந்த நிகழ்வில் அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ஆஷ் கார்டர் பங்குபற்றார்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சல பிரதேசத்தின் இமயலைப் பகுதியில் கிடைக்கப்பெற்ற எலும்புப் பகுதிகள் அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பப்படுகின்றன. அப்படி அனுப்பப்படும் உடல் எச்சங்கள் அமெரிக்காவில் மரபணு பரிசோதனைகள் மூலம் அடையாளம் காணப்படவுள்ளன.

எனினும் இந்த உடல் எச்சங்கள், 1944ஆம் ஆண்டு சீனாவுக்கு உதவிப் பொருட்களை ஏற்றிச்சென்ற விமானத்திலிருந்து காணாமல் போனவர்களுடையது என சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தியாவுக்கும்-அமெரிக்காவுக்கும் இடையேயான இராணுவ உறவுகள் வலுவடைந்துவரும் வேளையில் இந்த நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் இந்தியாவில் பணியாற்றிய 350 அமெரிக்கர்கள் காணாமல் போயினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## தேர்தலில் புதிய சாதனை அசாமின் 14 தொகுதிகளில் 90 சதவீதம் வாக்குப்பதிவு

அசாமில் 2 ஆம் கட்டத் தேர்தலில் புதிய சாதனையாக 14 தொகுதிகளில் 90 சதவீதம் வரை வாக்குகள் பதிவாகியுள்ளன.

அசாமில் மொத்தம் உள்ள 126 தொகுதிகளுக்கான சட்டப்பேரவை தேர்தல் 2 கட்டங்களாக நடந்தது. முதல் கட்டத் தேர்தல் கடந்த 4 ஆம் திகதி நடந்து முடிந்த நிலையில், 61 தொகுதிகளுக்கு கடந்த 11 ஆம் திகதி 2 ஆம் கட்ட தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் ஒட்டுமொத்தமாக 84.72 சதவீத வாக்குகள் பதிவாகின.

இதில் துப்ரி மாவட்டத்தில் உள்ள 7 தொகுதிகளில் பெருமளவிலான மக்கள் வாக்குச்சாவடிக்கு வந்ததால் 91.23 சதவீத வாக்குகள் பதிவாகின. இதே போல் கோல்பாரா மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளில் ஜலேஷ்வரில் மட்டும் மிக அதிக அளவாக 93.53 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. எஞ்சிய 3 தொகுதிகளில் 90.65 சதவீதம் அளவுக்கு வாக்குகள் பதிவாகி இருப்பது தேர்தல் அதிகாரிகளை மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது.

இதேபோல் நவ்காங் மாவட்டத்தில் உள்ள இரு தொகுதிகளிலும் 90 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

முதற்கட்டத் தேர்தலில் அதிகபட்சமாக நவோபொய்சா தொகுதியில் 88.07 சதவீதமும், குறைந்த பட்சமாக சில்சாரில் 75.05 சதவீதமும் வாக்குகள் பதிவாகின. ஆனால் 2 ஆம் கட்டத் தேர்தலில் குறைந்தபட்சமே குவாஹாட்டி (கிழக்கு) தொகுதியில் 79.21 சதவீத வாக்குகள் பதிவாகிஇருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதில் மற்றொரு திருப்புமுனை என்னவெனில் 68 தொகுதிகளில் ஆண்களை விட, பெண் வாக்காளர்களே அதிக அளவில் ஆர்வமுடன் வந்து வாக்குகளை செலுத்தியுள்ளனர் என்பதுதான். இருகட்டங்களிலும் ஆண்களின் வாக்கு சதவீதம் 84.64 ஆகவும், பெண்களின் வாக்கு சதவீதம் 84.81 சதவீதமாகவும் அமைந்துள்ளது. (இ)

## கொரில்லாத் தாக்குதல் நடத்துவோம்; இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்த ஐ.எஸ்.

(இஸ்லாமாபாத்)

இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசத்தில் இருந்து 'கொரில்லா தாக்குதல்களை' நடத்துவோம் என்று ஐ.எஸ். எச்சரிக்கை விடுத்துள்ளது.

வங்காளதேச ஐ.எஸ். பிரிவின் தலைவன் ஷேக் அபு இப்ராகிம் அல்-ஹனிப் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் தாபிக் ஒன்லைன் பத்திரிக்கைக்கு அளித்துள்ள நீண்ட பேட்டியில், இந்தியாவிற்குள் பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசத்தில் இருந்து கொண்டு 'கொரில்லா தாக்குதல்களை' நடத்துவோம், உள்ளூர் முஜாகிதீன்களுடன் இணைந்து அச்சம் மற்றும் குழப்பத்தை ஏற்படுத்துவோம் என்று கூறியுள்ளான். வங்காளதேசம் இந்தியாவிற்கு மேற்கு பகுதியில் உள்ளது. இது இரண்டு பகுதியில் இருந்து தாக்குதல் நடத்த வாய்ப்பாகும்.

உள்ளூர் முஜாகிதீன்கள் மூலம் அச்சம் மற்றும் குழப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம் வழக்கமான ஆயுதங்களுடன் இந்தியாவிற்குள் ஊடுருவ ஏதுவாக இருக்கும். முதலில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் பிராந்தியத்தில் நடவடிக்கையை தொடக்க வேண்டும். பின்னர் நம்மை மறுப்பவர்களிடம் இருந்து பிராந்தியம் விடுவிக்கப்பட வேண்டும் என்று வங்காள தேச ஐ.எஸ். கூறியுள்ளது. வங்காளதேசத்தில் நடைபெற்ற பல்வேறு தாக்குதல்களுக்கும் ஐ.எஸ். தீவிரவாதம் பொறுப்பு ஏற்றுள்ளது. இந்து தொழில் அதிபர்கள் மற்றும் தலைவர்கள் கொலை செய்யப்பட்டதற்கு ஐ.எஸ். தீவிரவாதம் பொறுப்பு ஏற்றுள்ளது என்று செய்தி வெளியாகி உள்ளது. (இ)

## த.மா.காவிலிருந்து பிரிந்து வந்தவர்கள் காங்கிரஸில் இணைந்தனர்



(சென்னை)

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தேர்தல் கூட்டணி குறித்து அதிருப்தியடைந்து அக்கட்சியிலிருந்து வெளியேறியவர்கள் மீண்டும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்துள்ளனர்.

ஜி.கே. வாசன் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸ், இந்த சட்டமன்றத் தேர்தலில் தே.மு.தி.க. கூட்டணியில் இணைந்து போட்டியிடுகிறது. அக்கட்சியின் இந்த முடிவு தங்களுக்கு அதிருப்தி அளிப்பதாக அக்கட்சியைச் சேர்ந்த பீட்டர் அல்போன்ஸ், விஸ்வநாதன், எஸ்.ஆர். பாலசுப் பிரமணியம் ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

இவர்களில் பீட்டர் அல்போன்ஸ், விஸ்வநாதன் ஆகியோர் மீண்டும் காங்கிரஸில் இணைந்துள்ளனர்.

சென்னையில் உள்ள காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைமையகத்தில் மாநிலத் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், தமிழக காங்கிரசிற்கான மேலிடப் பொறுப்பாளர் முகுல் வாஸ்னிக் ஆகியோர் முன்னிலையில் அவர்கள் நேற்று முன்தினம் காங்கிரசில் மீண்டும் சேர்ந்தனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரம் உள்ளிட்டவர்களும் பங்கேற்றனர்.

இதற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய மாநிலத் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், தமிழக காங்கிரஸ் மூன்றாவது பெரிய கட்சியாக உருவெடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் பேசிய பீட்டர் அல்போன்ஸ் தமிழக காங்கிரஸ் கட்சி இந்த முறை சிறப்பான கூட்டணியை அமைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்திருக்கும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன், சிலர் விலகுவதால், தங்கள் கட்சிக்கு பின்னடைவு ஏதும் இல்லையென கூறினார்.

தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, 41 இடங்களில் போட்டியிடுகிறது. தே.மு.தி.க. கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி, 26 இடங்களில் போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### மின்துண்டிப்பு # வாயினுள் துணி திணிப்பு # கத்திமுனை

# பேர்த்தியாருடன் புது வருடத்தை கொண்டாடச் சென்று தங்கச் சங்கிலியை பறிகொடுத்தார் குடும்பப் பெண்

## புதுக்குடியிருப்பில் 15 பவுண் நகை, 65 ஆயிரம் ரூபா பணம் கொள்ளை

(பனிக்கன்குளம்)

**வீட்டார் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த வேளை மின்னிணைப்பைத் துண்டித்து விட்டு வீட்டினுள் நுழைந்த நான்கு பேர் கொண்ட திருட்டுக்குழு கத்தி முனையில் மிரட்டி 15 பவுண் நகைகள், 65 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.**

இச் சம்பவம் புதுக்குடியிருப்பு தேவி புரம் அ பகுதியில் விக்கி குடியிருப்பு பகுதியில் நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

புது வருடத்தை கொண்டாடுவதற்காக முகமாலைப் பகுதியைச் சேர்ந்த 21 வயதான கர்ப்பிணி குடும்பப் பெண் புதுக்குடியிருப்பு தேவிபுரத்திலுள்ள தனது பேர்த்தியார் வீட்டிற்கு சென்றுள்ளார்.

வயோதிபத் தம்பதிகளான அவர்களுக்கு உதவும் பொருட்டும் சித்திரைப் புது வருடத்தை அவர்களுடன் சேர்ந்து கொண்டாடுவதற்கும் அங்கு சென்றுள்ளார்.

கணவன் முகமாலையிலுள்ள அவர்களது வீட்டில் தங்கியுள்ளார். இந் நிலையில் நேற்று அதிகாலை வயோதிபத் தம்பதியினரும் குறித்த இளம் குடும்பப் பெண்ணும் தூக்கத்திலிருந்த வேளை மின்னிணைப்பை துண்டித்து விட்டு உள் நுழைந்த நான்கு பேர் கொண்ட குழு கத்தி முனையில் வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி விட்டு வாயில் துணிகளை அடைந்து அமருமாறு கூறிவிட்டு 15 பவுண் நகைகள், 65000ரூபா பணம் ஆகியவற்றையும் கொள்ளையிட்டு சென்றுள்ளார்கள்.

இந்த கொள்ளைச் சம்பவத்தை தொடர்ந்து மற்றுமொரு வறுமைக் கோட்டின் கீழ்வாழும் வீட்டினுள் நுழைந்த அந்தக் குழு அவர்களது வீட்டில் எதுவுமே கிடைக்காத நிலையில் அவர்களிடமிருந்த கையடக்க தொலைபேசியை பறித்து சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்தை அறிந்து அப் பகுதிக்கு மோப்பநாய் சகிதம் விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் கொள்ளையிட்ட குழுவினரது சாரம் ஒன்றினையும் கொள்ளையிட்டு சென்ற பணத்தில் அவர்களால் கொட்டிவிட்டு சென்ற சிறிய தொகை பணத்தினையும் வீதியில் கிடந்து கைப்பற்றினர். இது தொடர்பான விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் பிரஸ்தாப பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் திரட்டுக் கும்பல் பறித்துச் சென்றுள்ளது.

வயோதிபர்களான இவர்களை மிரட்டி அமரவைத்து கொள்ளையர்கள் வீட்டினுள் சல்லடை போட்டு அங்கிருந்த நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். (2-3-281)








கிளிநொச்சி உருத்திரபுரம் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் புது வருட தினமான நேற்று தேர்த்திருவிழா நடைபெற்ற போது...
(படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

# தரமற்ற நுகர்வுப்பொருட்கள் அதிக விலைக்கு வர்த்தக நிலையங்களில் நேற்று விற்பனை

துணுக்காய், மல்லாவி, மாங்குளம் ஆகிய நகரப் பகுதிகளில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாது பொருட்களை அதிக விலையில் விற்பனை செய்ததுடன் பாவனைக்கு தரமற்ற சில பொருட்களையும் சித்திரவருடப் பிறப்பை முன்னிட்டு வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டுள்ள நுகர்வோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

## வெடிக்காத சீன பட்டாசுகளும் உள்ளடக்கம்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கூறப்பட்ட இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு சென்ற பொதுமக்கள் தமக்கு கட்டுப்பாட்டு விலைகளை விட நுகர்ச்சி பொருட்களை அதிக விலையில் வர்த்தகர்கள் விற்பனை செய்துள்ளதாகவும் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை சில வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்யப்பட்ட சீன பட்டாசு வெடிகள் வெடிக்கவில்லை எனவும் குற்றம் சாட்டுவதுடன் நுகர்ச்சிப் பொருட்களான கடலை, பயறு, உழுந்து போன்ற பொருட்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு தவறிழைக்கும் வர்த்தகர்களை சட்டத்தின் முன்னிறுத்தி நுகர்வோருக்கு தரமான பொருட்கள் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென சுட்டிக் காட்டுகின்றனர். (2-3-15)

# ஒருநாள் வட்டார மாநாடு

(வவுனியா )

யெகோவாவைப் போல் நடந்து கொள்ளுங்கள் என்ற தொனிப் பொருளில் ஒருநாள் வட்டார மாநாடு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இசையுடன் ஆரம்பிக்கும்.

பிற்பகல் 1.30 மணிக்கு மதங்களைப் பற்றி கடவுள் என்ன நினைக்கிறார்? என்ற ஆன்மீக விசேட பேச்சும் வேறு பல பேச்சுக்களும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-3)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியாரின் காணிகளில் 9 விகாரைகள் இராணுவத்தின் உதவியுடன் அமைப்பு

## கொக்கிளாயில் நீதிமன்ற உத்தரவையும் மீறி தொடர்வதாக ரவிகரன் குற்றச்சாட்டு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆறு ஆண்டுகளில் ஒன்பது பௌத்த விகாரைகள் படையினரின் உதவியுடன் பொதுமக்களின் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்களின் பாரம்பாரிய பிரதேசமான முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்தவொரு பௌத்த விகாரைகளும் இருந்ததில்லை என்றும் ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான அரசியல் சூழலில் படையினரின் உதவியுடன் பௌத்த விகாரைகள் பொதுமக்களின் காணிகளில் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் குற்றம்சுமத்தினார்.

மாங்குளம், ஒட்டுசுட்டான், மன்னா கண்டல், வட்டுவாகல், கொக்கிளாய் ஆகிய பிரதேசங்களில்பெரிய விகாரைகளும்மாவட்டத்தின்ஏனைய பிரதேசங்களில் சிறிய விகாரைகளும் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களின் காணிகளை சட்டத்துக்கு முரணாக அபகரித்த படையினர் தமது வழிபாட்டுக்கு ஏற்ற முறையில் விகாரைகளை அமைத்துள்ளனர்.

அத்துடன் தென்பகுதியில் இருந்து செல்லும் பௌத்த சிங்கள மக்கள் தங்கியிருந்து வழிபடுவதற்கு ஏற்புடையதாக விகாரைகளுக்கு அருகில் மண்டபங்களையும் அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் ரவிகரன் கூறினார்.

கொக்கிளாய் பிரதேசத்தில் விகாரை அமைக்கும் பணியை நிறுத்துமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் கடந்த வருடம் உத்தரவிட்டிருந்தது.

ஆனாலும் நீதிமன்ற உத்தரவையும்மீறி விகாரை அமைக்கும் பணி படையினரின் ஒத்துழைப்புடன் இடம் பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

1996ஆம் ஆண்டு ஓயாத அலை தாக்குதல் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தை விடுதலைப் புலிகள் முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

2009ஆம்ஆண்டு மேமாதம் 18 ஆம் திகதியின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டம் மீண்டும் படையினர் வசமாகியது.

2010 ஆம் ஆண்டில் இருந்து மக்கள் படிப்படியாக மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.


ஆனால் மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியை உள்ளடக்கி பிரதான இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளிலும் படையினர் முகாம்களை அமைத்துள்ளனர். அவ்வாறு அமைக்கப்பட்ட படைமுகாம்களுக்கு அருகில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-3-281)

# இ.போ.ச.தனியார் போக்குவரத்து முறுகல்நிலை முற்றியது பேருந்து சேதம்-சாரதி படுகாயம்-பயணிகள் நடுத்தெருவில்

## வள்ளிபுனம் பகுதியில் அரங்கேற்றம்

யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தன் முல்லைத்தீவு வீதியூடாக (ஏ-35) திருகோணமலைக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்துக்கொண்டிருந்த கிளிநொச்சி இ.போ.ச.சாலைக்கு சொந்தமான பேருந்தின் மீது அதே வீதியூடாக விசுவமடுவிலிருந்து திருகோணமலைக்கு பயணித்துக்கொண்டிருந்த முல்லைத்தீவு தனியார் பேருந்தின் சாரதி,நடத்துநர் ஆகியோரினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இதன்போது இ.போ.ச. பேருந்து சேதமடைந்ததுடன் அதன் சாரதி காயம் அடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 6.50 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி இரண்டு பேருந்துகளும் திருகோணமலை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கும்போது பயணிகளை ஏற்றி இறக்குவதில் ஏற்பட்ட போட்டி காரணமாக தனியார் பேருந்து நடத்துநர், சாரதி ஆகியோரினால் வள்ளிபுனம் எனும் இடத்தில் காலை 6.50 மணியளவில் இ.போ.ச. பேருந்தின் மீதும் அதன் சாரதி மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது இ.போ.ச. பேருந்தின் சாரதியான சுந்தரம் விமலகாந்தன் (வயது-32) என்ற கிளிநொச்சி இ.போ.ச.சாலையில் பணியாற்றுபவரே படுகாயமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய தனியார் பேருந்தின் உரிமையாளர், நடத்துநர், சாரதி ஆகிய மூவரும் புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன் குறித்த பேருந்தும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தை அடுத்து இரு பேருந்துக்களிலும் பயணம் செய்த பயணிகள் வீதியில் இறக்கி விடப்பட்டமையால் மேற்கொண்டு பயணத்தைத் தொடர்வதில் அவலநிலைக்குள்ளானதையும் காணக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இ.போ.ச.மற்றும் பேருந்து சாரதிகள் , நடத்துனர்கள் தமிழ், சிங்களப் புதுவருட காலப் பகுதியில் பொது மக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்துச் சேவையை வழங்குமாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் கோரியிருந்தநிலையில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-3-15)



எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்று முல்லைத்தீவு மாவட்ட மக்களை மாங்குளத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது.... (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்.)

# நீர்த்தாங்கி, வீதி புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு ஒரு கோடியே மூன்று இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையினால் நெல்சிப் திட்டத்தின் ஊடாக புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் இரு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக ஒரு கோடியே 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

புதுக்குடியிப்பு பிரதேச சபையின் கீழுள்ள புதுக்குடியிருப்பு சந்தை வளாகத்தில் நீர்த்தாங்கியொன்று அமைப்பதற்கும் சந்தை உள்ளக வீதியை புனரமைப்பதற்காகவும் மொத்தம் 36 இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மூங்கிலாறு கிராமத்திலுள்ள திலீபன் வீதியை புனரமைப்பு செய்வதற்கு 67 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வேலைகள் அனைத்தும் எதிர்வரும் மே மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஓகஸ்ட் மாத மளவில் நிறைவு பெறுமென புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அலுவலகத் தகவலில் தெரி விக்கப் பட்டுள்ளது. (2-3-15)

# 9 இலட்சம் ரூபா செலவில் கிளி.,முல்லையில் பனம் கைப்பணிப் பொருட்கள் இன்று வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 82 பனம் கைப்பணி உற்பத்தியாளர்களுக்கு சுமார் 9 இலட்சம் ரூபா செலவில் உபகரணம் வழங்கும் நிகழ்வு இன்று அந்தந்த மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

பனை அபிவிருத்திச்சபை தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் இன்றைய தினம் காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பிராந்திய காரியாலயத்தில் 50 பயனாளிகளுக்கு உபகரணப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட பனை, தென்னை கூட்டுறவு சங்க மண்டபத்தில் 32 பயனாளிகளுக்கு கைப்பணி உபகரணங்களும் மூலப்பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா 11 ஆயிரம் ரூபாய் செலவில் மூலப் பொருட்களும் உபகரணப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் மா.சிவஞானசோதி கலந்து கொண்டு உபகரணப் பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கி வைக்கவுள்ளார். (2-3-9)




# மோ.சைக்கிள்கள் நேருக்குநேர் மோதியதில் விபத்துக்குள்ளானது

## குடும்பஸ்தர் படுகாயம்

(கிளிநொச்சி)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 10மணியளவில் அக்கராயன்-முறிகண்டி பிரதான வீதியில் இடம்பெற்றது.

இதில் செல்லத்துரை பாக்கியராசா (வயது-38) என்பவரே படுகாயம் அடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முழங்காவிலிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் முறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மேற்படி பிரதான வீதியின் 3ஆம் கட்டை பகுதியை அண்மித்தவேளை நேருக்கு நேர் விபத்துக்குள்ளானது.

இதன்போது படுகாயம் அடைந்தவர் வீதியில் சென்றவரினால் மீட்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். (2-272)

# கொளுத்தும் வெயிலால் ஏற்படும் தோல் நோய்களில் இருந்து எம்மை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்

## லேடி றிச்வே வைத்தியசாலை பொறுப்பதிகாரி விளக்கம்

(கொழும்பு)

சூடான சூரியக் கதிர்கள் இரக்கமற்ற முறையில் ஆண், பெண், குழந்தை என்ற பேதமின்றி எல்லோரையும் பதம் பார்த்து வருகிறது. புற ஊதாக் கதிர்களின் தாக்கத்திலிருந்து இயற்கையாகவே எங்களைப் பாதுகாப்பது எமது தோல் ஆகும்.

தோல் நோய்கள் தொடர்பாக சிறுவர்களுக்கான வைத்தியசாலையான கொழும்பு லேடி றிச்வே கொஸ்பிற்றல் (Lady Ridgeway Hospital) அறிவுரைகளை வழங்கியுள்ளது.

வைத்தியசாலையின் தோல் நோய்கள் தொடர்பான பிரிவுக்கு பொறுப்பதிகாரியான பேராசிரியர் ஜயமினி செனவிரத்ன தெரிவித்துள்ளதாவது,

வியர்வைக்கடி:- தோலில் காணப்படும் வட்டமான சிவப்பு நிற பருக்கள் தோலின் மேற்படையிலுள்ள வியர்வைக் குழாய்களைப் பாதிப்படையச் செய்கின்றன. அத்துடன் கொப்பளங்கள் உருவாகி அவை உடைபடுவதால் அப்பகுதிகளில் கடி ஏற்படுகின்றது. இதனால் சிவப்பு நிறபுண்கள் ஏற்படுகின்றன. குழந்தைகளுக்கு இவை கழுத்து, தோள் மூட்டு, மார்பு மற்றும் முழங்கை மடிப்பு போன்றபகுதிகளிலும் தொடைப்பகுதிகளிலும் ஏற்படக் கூடியதாக வுள்ளன.

எரிகாயங்கள்:- சூரிய வெப்பக்கதிர்களினால் தோல் சிவப்பு நிறமாக மாற்றமடைவதுடன் அப்பகுதிகளில் சொறிவு ஏற்படுகின்றது. இதனால் அப்பகுதியிலிருந்து நீர் வடிய ஆரம்பிக்கும்.

ஒவ்வாமை:-புற ஊதாக் கதிர்களுக்கு தோலில் தோன்றும் அசாதாரண எதிர்வினையரன விளைவாகும். இதன்போது தோள் பகுதியில் சொறிவு, வீக்கம், செதில் போன்ற திட்டுக்கள், தோளின் நிறத்தை விட கூடிய நிறம், கீழ்ப்பகுதி வெள்ளை நிறமாக இருக்கும்.

இந்த மூன்று வகையான விளைவுகளையும் தவிர்ப்பதற்கு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையான கடுமையான சூரிய வெப்பம் படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார். டாக்டர் துளசி வீரசிங்க அறிவுறுத்துகையில்,

வெயிலில் வேலை செய்பவர்கள் அல்லது வெயில் படவேண்டிய சூழ்நிலையில் உள்ளவர்கள் குடைகள், வெள்ளை நிறத் தொப்பி என்பவற்றை பயன்படுத்துவதுடன் பருத்தியிலான துணிகளை அணிவதன் மூலம் உடலை அதிக வெப்பத்திலிருந்து பாதுகாக்கலாம். புதிதாக பிறந்த குழந்தைகள் மற்றும் குழந்தைகள்கை, கால்களுக்குசொக்ஸ் அணிவதைத் தவிர்ப் பதுடன் கம்பளி துணிகளினால்குழந்தைகளை சுற்றிச் செல்வதையும் தவிர்க்க வேண்டும். கிடைக்கும் சந்தர்ப்பங்களில் மர நிழல்களின் கீழ் இருப்பது நல்லது. சிறுவர் களுக்கு கழுத்தில் நெக்லஸ் அணிவதை பெற்றோர் தவிர்த்தல் வேண்டும். இவ்வாறு அணிவதால் வியர்வைக்கடி உருவாகலாம்.


கிறீம் மற்றும் முகப்பூச்சு வகைகள் கூட இவற்றை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

தினமும் அல்லது ஒரு நாளுக்கு இரண்டு தடவைகள் குளிப்பதும் நேரம் கிடைக்கும் போது நீரில் முகம் கழுவிக் கொள்வதும் சிறுவர்கள் முடியை கட்டையாக வைத்திருப்பதும் பெரியவர்கள் கொண்டை போடுவதும் சிறந்ததாகும்.

எல்லாவற்றுக்கும் முக்கியமாக தனிப்பட்ட ரீதியாக உடலை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் பங்கஸ், பக்றீரியா, வைரஸ் நோய்த் தாக்கங்களிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும். இந்நோய்களின் அடையாளம் தொடர்ந்து காணப்படுமிடத்து உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறுவது உகந்ததாகும் என்று தெரிவித்துள்ளார். (3)

# முன்பள்ளிக் கல்வியில் — நவீன உளவியல் அணுகுமுறை

**இம் மாதம் 2 , 3 ஆம் திகதி களில் JRS நிறுவனம் முல்லைத்தீவு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடத்திய கருத்தரங்கில் கலாநிதி குகதாசன் ஆற்றிய உரை,**



முன்பள்ளிக் கல்வி தொடர்பான வரையறுக்கப்பட்ட இரண்டரை வயதிலிருந்து ஐந்து வயது வரையான காலம் பாலர்களின் வாழ்க்கையில் மிக முக்கிய காலகட்டமாகும்.

இப்பருவத்தில் அவர்களது மூளை வளர்ச்சியும், மன வளர்ச்சி யும் மிகத் துரிதமாக நிகழ்கின்றன.

இப்பருவத்தில் பாலர்களுக்குக் கூறப்படும் விடயங்கள், அவர்களினால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல் அமையும் போதிலும், அவ்விடயங்கள் அவர்களது ஞாபகப் பதிவேட்டிலும் மூளையிலும், மனதிலும் ஆழமாகப் பதிந்து, வயது செல்லச் செல்ல, அவர்களது செயற்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க, அவ்வாறு பதியப்பட்ட விடயங்களுக்கு அமைவாக, அப் பதியப்பட்ட விடயங்களின் தூண்டுதலுக்கு அமைவாக அவர்கள் செயற்படுவார்கள்.

முன்பள்ளிப் பாலர்கள் இயல்பாகவே அறிவுத் தாகம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ் வயதில் அவர்கள் பெறும் கல்வி அறிவே அவர்கள் பெற்றிடும் அடித்தள அத்திபாரக் கல்வியாக அமைந்து பின்பு கற்கும் கல்வி, இவ் அடித்தளத்தின் மேல் கட்டப்படும் கல்வியாகவே அமைகின்றது.

பாலர்கள் எவ்வாறு கற்கின்றனர்? ஆடல், பாடல் விளையாட்டு, திரும்பத் திரும்பக் கேட்டல், திரும்பத் திரும்பக் கூறல், தினம் தினம் கற்றவற்றை மீட்டல், கதைகளையும் கவிதைகளையும் மீண்டும் மீண்டும் கேட்டல் போன்ற அணுகுமுறைகளையே அவர்கள் விரும்பு கின்றனர்.

இவைகளுக்கு அமைவாகவே அவர்களுக்குப் போதிப்பது அவசியமாகும்.

மிகச் சிறிய சிறிய ஒலிநயம், ஓசைநயம், கவிதை நயம் உடைய எதுகை, மோனை உடைய நல்ல நல்ல சொற்களை, சொற்றொடர்களை அவர்கள் மிகப் பிரியமாக விரும்புவார்கள்.

அவ்வாறான சொற்களை மீண்டும் மீண்டும் கேட்டு மகிழ்வதில் ஆர்வம் உடையவர்களாக காணப்படுவார்கள்.

சொற்களுக்குச் சக்தியுண்டு. சொற்களுக்கு வலிமையுண்டு, பொருள் பொதிந்த, வலிமை மிகு சொற்களை, சொற்றொடர்களை, அவர்கள் மத்தியில் ஊட்டும் பொழுது அவர்கள் வலிமை அடைகின்றனர்.

வெற்றி நிறைந்த சுய ஆக்கம், சுய ஊக்கம் வீரம் ததும்பும், சித்தியடையவல்ல, சிறப்புக்கள் பெருக வல்ல, சொற்றொடர்களை அவர்கள் மத்தியில் கூறி வரும் போது, அவர்கள் வெற்றி, வீரம்,சித்தி,சிறப்பு சுய ஆக்கம் சுய ஊக்கம் ஆகிய அம்சங்கள் நிறைந்தவர்களாக முன்னேறுவார்கள்.

சொற்கள் எவ்விதமாக கருத்தை, செயற்பாட்டைக் குறிக்கின்றனவோ அவ்விதமாக செயற்பாடுகளை மேற்கொள்ள வல்ல வலிமையும் வல்லமையும் அந்தச் சொற்களுக்கு உண்டு.

ஆனந்தமான சொற்கள் மகிழ்ச்சியை ஊட்டிடும். வெற்றி, வீரம், சித்தி, சிறப்பு ஆகிய சொற்களை பலமுறை திரும்ப திரும்ப நாள்தோறும் நாள்தோறும் கூறக் கூற வெற்றி, வீரம், சித்தி, சிறப்பு ஆகியவை கனிந்திடும். வெற்றி மனப்பான்மை உடைய குழந்தைகளாக அவர்கள் செயற்பாடுவார்கள்.

ஆகவே பாலர்களுக்கு கல்வியூட்டும் அணுகுமுறையில் இவ்வாறான உளவியல் அணுகுமுறை மிகச் சிறந்தது .

அவர்கள் வெற்றி மனப்பான்மை உடையவர்களாகவும் சுய ஆக்கம் ,சுய ஊக்கம் பொதிந்தவர்களாக மாறி மலர்வார்கள்.

என்றும் இல்லாத அளவிலான போட்டி மிகுந்த சவால்கள் நிறைந்த உலகிலேயே அவர்கள் வாழப் போகின்றனர்.

பலமுறை மீண்டும் மீண்டும் இடைவிடாத் தொடர் முயற்சி பூண வல்லவர்களாக அவர்கள் மாறும் பொழுதே அவர்களால் இத் தற்காலப் போட்டி யுகத்தில் முன்னேற முடியும்.

இப் பாலர் மத்தியில் எழுச்சியும் ஏற்றமும் முயற்சியும் முன்னேற்றமும் உயர்வும் உயர்ச்சியும் அறிவைப் பெருக்கிடும்.

ஆற்றலை வளர்த்திடும் வெற்றி, வீரம், சித்தி, சிறப்பு ஆக்கமும் ஆற் றலும்ஊட்டவல்ல சொற்களை, சொற்றொடர்களை, தினம் தினம் பாவிக்கும் போது ,கூறும் போது அவ்வாறான சொற் றொடர்கள், அவர்கள் ஞாபகத்தில் பதியப்பட்டு, மூளையில் வடிக்கப்பட்டு, அடிமனதில் சிலையாக அமைக்கப்பட்டு நாடி நரம்புகளில் பதியப்பட்டு, அவர்களை சிறிது சிறிதாக, அப் பதிவுகளினால் ஆட் கொள்ளப்பட்டு தூண்டப்பட்டு அவ்வாறே ஆக்கப்பட்டு, அமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு இப் போட்டி மிகு உலகில் முன்னணியில் திகழ்வார்கள்.

நீங்கள் ஆத்திசூடியை அவர்களுக்குக் கற்பிக்கும் போது புதியதோர் விஞ்ஞான யுக, உளவியல் அணுகுமுறை ஆத்திசூடியைத் தயாரித்து அதனைப் போதிப்பது நன்று.

**இதோ புதியதோர் நுட்பம் மிகு விஞ்ஞான,உளவியல் அணுமுறை ஆத்திசூடி.**

அ -நான் அறிவு மிக்கவன்
ஆ -நான் ஆற்றல் உடையவன்.
இ -நான் இலக்கு உடையவன்.
ஈ - நான் ஈடுபாடு மிக்கவன்
உ -நான் உறுதி உடையவன்
ஊ-நான் ஊக்கம் மிகுந்தவன்.
எ -நான் எழுச்சி உடையவன்.
ஏ -நான் ஏற்றம் அடைவேன்.
ஒ -நான் நல்லொழுக்கம் மிகுந்தவன்.
ஓ -நான் ஓங்கி ஓங்கி முன்னேறுவேன்.

இங்கே நான் என்னும் சொல்லைக் கூறுவதில் தவறில்லை.

நான் என்று தொடங்கி.

நான் வெற்றி பெறுவேன்
நான் சித்தியடைவேன் என்று கூறும் பொழுதே அச் சொற்கள் அவர்கள் மூளையில், மனதில், நாடி நரம்புகளில் பதிந்திடும்.

அப் பதிவுகளுக்கு அமைய அவர்கள் செயற்படுவார்கள்.

சிறுவயதில் இருந்தே சுசந்திகா ஜெயசிங்க நான் நன்றாக ஓடுவேன், நான் நன்றாக ஓடுவேன், நான் வெற்றி பெறுவேன், நான் வெற்றி பெறுவேன், எனக்கே முதலிடம், எனக்கே முதலிடம் என்று கூறிக் கூறி வந்தமையினால், தன்னால் பல போட்டிகளில் முதலிடம் பெற முடிந்தது என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

நான் என்ற சொல்லைக் கூறாமல் வெற்றி பெறுவேன், வெற்றிபெறுவேன், முதலிடம், முதலிடம், முதலிடம் என்று கூறி வந்திருந்தால் அத்தகைய கட்டளைகளை ,சுய வலுவூட்டலை எனது மனம், மூளை, உடல் ஏற்று நடந்து கொண்டிருக்க மாட்டாது என்றும் சுசந்திகா கூறுவது கவனிக்கத்தக்கது.

**இவ்வாறே மாணவர்கள் சிறுவயதிலிருந்தே**

நான் வல்லவன்
நான் நல்லவன்
நான் உயர்ந்தவன்
நான் சிறந்தவன்
நான் வெற்றிபெறுவேன்
நான் சித்தியடைவேன்
நான் சிறப்படைவேன்
நான் உயர்வடைவேன்
நான்உன்னதநிலை அடைவேன்

**என்று தினம் தினம் மாணவர்கள் கூறிட, கூறி மகிழ்ந்திட ஏற்பாடு செய்திடவேண்டும்.**

நான் வீரம் மிகுந்தவன்
நான் தீரம் நிறைந்தவன்
நான் முயற்சி பூணுபவன்
நான் முன்னேற்றம் அடைபவன்
நான் ஆக்கம் உடையவன்
நான் ஊக்கம் மிகுந்தவன்
நான் உறுதி மிகுந்தவன்
நான் உற்சாகம் நிறைந்தவன்
நான் தன்னம்பிக்கை மிக்கவன்
நான் புத்திக்கூர்மை உடைய வன்
நான் மனோபலம் உடையவன்
நான் உடல் பலம் மிக்கவன்
நான் நல்ல ஆரோக்கியம் உடையவன்
நான் வெற்றி பெறுவேன்
நான் சித்தி அடைவேன்
நான் சிறப்பு அடைவேன்
நான் வீரம் மிகுந்தவன்
நான் தீரம் மிகுந்தவன்

இவ்வாறான சொற்களைத் தினம் தினம் கூறக் கூற சொல்லச் சொல்ல அவை யாவும் சிறுவர்களின் அடிமனதில் ஆழமாகப்பதிந்து மூளையில் பரவி நாடி நரம்புகளில் முறுக்கேறி ஓடும் இரத்தத்தில் பாய்ந்து பரவி உச்சி முதல் உள்ளங்கால் வரை பரந்து, விரிந்து, செறிந்து செயற்பட்டு, செயற்பட்டு அவ்வாறான செயற்பாடு உடையவர்க ளாக மாறி, மலர்ந்து, உயர்ந்து, சிறந்து அவ்வாறான நலன்களையும் நன்மைகளையும் உயர்வை யும் ஊக்கத்தையும் வலிமையை யும் வல்லமையையும் அவர்கள் அடைந்திடுவது திண்ணம்.

ஆங்கில மொழித்திறமை குழந்தைகளின் எதிர் காலத்திற்கு அவசியமானதாகும். குழந்தைப் பருவத்திலிருந்தே ஆங்கில அறிவைச் சிறிது சிறதாக ஊட்டிட லாம். ஆங்கில அறிவைப் பெருக்கக் கூடிய அதே சமயம் குழந்தைகளின் மன வளர்ச் சியை, மூளை வள்ர்ச்சியைத் தூண்டக்கூடிய கவிநயம், ஒலி நயம், ஓசைநயம் பொருந்திய ஆங்கிலச் சொற்களை, சொற் றொடர்களை அறிமுகப்படுத் துவதன் மூலம் அவர்களது ஆங்கில அறிவு விருத்தி யுடன் மூளைப்பலம், மனபலம் உடற்பலம் ஆகியவைகளும் மேம்படும்.

**இதோ சில உதாரணங்கள்**


- I am very smart
- I am very steady
- I am very strong
- I am very systematic
- I am very sound
- I am very bold
- I am very bright
- I am very brilliant
- I am very brave
- I am very intelligent
- I am very active
- I am very alert
- I am very happy
- I like to healthy
- I like to learn
- I like to study
- I like to Read
- I like to sing
- I like to play
- I like to write
- I like to walk
- I like to talk
- I like to speak
- I like to say,yes,yes,yes
- I like to say win, win, win
- I like to say good, good,good
- I like to say run,run,run
- I like to say strong, strong, strong
- like to say sound, sound, sound
- I like to say steady, steady, steady
- I like to say smart, smart, smart
- I like to say victory, victory, victory
- I like to say success, success, success
- I like to say happy, happy,happy
- I like to say Healthy, Healthy, Healthy
- I am very Positive
- I am very Constructive
- I am very Dynamic
- I am very Healthy and Happy
- I am very Optimistic
- I am a winner
- I am always a winner
- I will run I will win
- I will play I will win
- I will draw I will win
- I will write I will win
- I will read I will win

எவ்வாறு ஒரு குழந்தை ஊட்டச் சத்து மிகுந்த உணவு வகைகளை உட்கொள்ளும் போது நோயெதிர்ப்பு சக்தி உற்பத்தியாகின்றதோ அவ்வாறே குழந்தைப் பருவத்தில் வெற்றி, வீர, சித்தி, சிறப்பான உயர்வான ஒளி மயமான எண்ணங்கள் மூளையில், மனதில் பதியும் போது எதிர்மறை எண்ணாங்கள் தோல்வி, எண்ண விரக்தி, எண்ண எதிர்ப்புச் சக்தி தோன்றிடும்.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# கழிவகற்றலும் அதன் முகாமைத்துவமும்

எந்த ஒரு மனிதனுக்கும் எந்த விதத்திலும் பயன் அற்றதும், நுகர்வதற்கோ அல்லது மாற்று வழியில் பயன்படுத்துவதற்கோ ஏற்றதல்லாத, தேவையற்ற இடத்தில், விரும்பாத வடிவத்தில் காணப்படும் அகற்றப்பட வேண்டிய நிலையிலுள்ள பொருட்கள் கழிவுகள் எனப்படும். கழிவுகள் பல வகைப்படும். உதாரணமாக விவசாயக்கழிவுகள், இறைச்சிக்காக விலங்குகளை வெட்டும் இடத்திலிருந்து வரும் கழிவுகள், மருத்துவ கழிவுகள், சந்தைக்கழிவுகள், வீட்டுக் கழிவுகள், நகர தொழிற்சாலைக் கழிவுகள், பொலித்தீன், இறப்பர், கடதாசி, கண்ணாடி போன்ற பல வகையாகும். இவற்றுள் இலத்திரனியற் கழிவுகளும் (E-waste) அடங்கும். அவற்றின் பயன்பாட்டு காலம் முடிவடையும் நிலையிலுள்ள இலத்திரனியல் பொருட்கள் உதாரணமாக பாவிக்கப்பட்ட கணனிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், போட்டோ பிரதி, பக்ஸ் இயந்திரங்கள், மின்விளக்குகள், செல் தொலைபேசிகள், பற்றரிகள், செவிப்புல கருவிகள் (Audio equipments) போன்றன. இவை செப்பு, அலுமினியம், இரும்பு, பிளாட்டினம் என்பவற்றை கொண்டவை. அத்துடன் இவ் இலத்திரனியல் உபகரணங்களுக்கு அவை தீப்பற்று நிலை அற்றவையாக இருப்பதற்காக பல்புரோமினேற் இருபீனைல் ஈதர் (PBDEs) சேர்க்கப்படுகிறது. ஈயம், மேக்கியூரி, கட்மியம், நிக்கல் என்பன பற்றரி, ஆழிகள், Toner, LCD display, புளொறொளி விளக்குகள் (fluorescent lamps) என்பவற்றில் பாவிக்கப்படுகின்றன. இவற்றின் அனுசேப விளைவுகள் சூழலுக்கும் மனிதனுக்கும் பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. அவையாவன: நரம்பு இயக்க பாதிப்பு, முந்திய பாலியல் முதிர்ச்சி, ஈரல் நச்சாக்கப்படல், குறைந்த இனவிருத்தியியல்பு என்பன. இவை உணவு சங்கிலியினூடாக உயர் செறிவடைந்து பாதிப்பை ஏற்படுத்தும். இவ் இலத்திரனியற் கழிவுகள் நகர, தொழிற்சாலை கழிவுகளுடன் மண்ணில் புதைக்கப்படும்போது இவற்றில் இருந்து வெளியாகும் ஈயம், ஏனைய் நச்சு பதார்த்தங்கள் கசிவூறல் மூலம் மண், நிலத்தடி நீர் என்பவற்றை சென்றடையும். பொலித்தீன் கழிவுகளுக்குள் செல்லும்போது அது உக்குவதற்கு 1000 வருடங்கள் எடுக்கும். மிகக் குறைந்த காலத்திற்கு மட்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் பைகள் பயன்பாட்டின் பின்னர் என்னவாகின்றன என்று யாரும் கண்டு கொள்வதில்லை. இன்னும் சில வருடங்களில் கடலில் இருக்கும் மீன்களை விட பிளாஸ்ரிக் கழிவுகளின் அளவு அதிகரித்துவிடும் என கணிக்கப்பட்டுள்ளது. பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் கிடைக்கும் பொலி எதிலீன் எனும் துணைப் பொருளைக் கொண்டு பிளாஸ்ரிக் தயாரிக்கப்படுகின்றது. கனிம நீர் (Mineral water), சோடா, பழச்சாறுகள் வரும் பிளாஸ்ரிக் போத்தல்கள் ஒருமுறை பாவிப்பதற்கு மட்டுமே பாதுகாப்பானவை (one-time use). மீளப்பாவித்தால் அதிலிருந்து இரு எதிலீன் ஹெக்சைல்ப்தலேற் (DEHP) எனப்படும் பிளாஸ்ரிக்கை மிருதுவாக்கும்பொருள வெளியேற்றப்படும். இது கொழுப்பில் கரையக்கூடிய (lipophilic) பொருளாகும்.





இது ஈரல், சிறுநீரகம், நுரையீரல் மற்றும் இனப்பெருக்க தொகுதியைப் பாதிக்கும். உயிர்ப் பிரிகையடையக்கூடிய (biodegradable) கழிவுகள் மட்டும் நில நிரப்புகைக்கு செல்ல வேண்டும்.

பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன மனிதனுக்கு மட்டுமன்றி ஏனைய விலங்குகள், மீனினங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும். சில நாடுகளில் பொலித்தீன் பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. சில நாடுகள் பிளாஸ்ரிக் பை வர்த்தகத்திற்கான வரியை அதிகரித்துள்ளன. அண்மையில் ஜப்பான் நாட்டு விஞ்ஞானிகள் பிளாஸ்ரிக் பொருட்களை தின்று அழிக்கக் கூடிய பக்றீரியாக்கள் இருப்பதை கண்டு பிடித்து ள்ளனர். பக்றீரியாக்களை அதிக அளவில் உற்பத்தி செய்து பிளாஸ்ரிக் பொருட்களில் பரவ விட்டால் அவை அழிந்து விடும். சூழல் மாசடைதல், சீரழிதல் (pollution & degradation), இயற்கை வளங்கள் குறைவடைதல் (depletion of natural resources), உயிரினப் பல்வகைமை இழத்தல் (loss of Biodiversity), பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றமும் ஓசோன் படை குறைவடைதலும் (Gre en House Gas emission and depletion of ozone layer) போன்றவை வேகமாக நடைபெறுவதை கருத்திற்கொண்டு அவற்றை தடுப்பதற்கு சில நிலைத்து நீடிக்கக்கூடிய செயற் பாடுகளிற்கான அதிகாரபூர்வமான அறிவிப்புகளை உருவாக்கியுள்ளன. இவற்றில் ஒன்று "Talloires Declaration". இது 1990ஈம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் Talloires என்னும் இடத்தில் பிரகடனப் படுத்தப்பட்டது. பல்கலைக்கழகங்களும், ஏனைய நிறுவனங்களும் சூழலுக்கு நற்பயன் அளிக்கக்கூடிய தொழிற்சாலை, விவசாய தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல், மீள்காடாக்கம், கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்டு இந்த அறிவிப்பை அமுல்படுத்தியுள்ளன.

கழிவுகளால் உடல் ஆரோக்கியம், சூழல் என்பவற்றில் ஏற்படுத்தப்படும் பாதிப்பை குறைப்பதே கழிவு முகாமைத்துவத்தின் நோக்கமாகும். கழிவுகளை சேகரித்து உரிய இடத்திற்கு கொண்டு சென்று அதனைப் பராமரித்து பின் அகற்றுதல் கழிவு முகாமைத்துவத்தினுள் உள்ளடக்கப்படும்.

கழிவுகளை சேகரிக்கும் முறைகள் நாடுகளுக்கிடையிலும், இடங்களுக்கிடையிலும் வேறுபடுகின்றது. வீட்டுக்கழிவுகளை சேகரித்தல் பொதுவாக உள்ளூர் அரசாங்க அதிகார சபையின் (Local Government Authority) பொறுப்பாகவும், தொழிற்சாலைக் கழிவுகளையும் வர்த்தகக் கழிவுகளையும் சேகரித்தல் தனியார் கம்பனிகளில் பொறுப்பாகவும் உள்ளது.

வேறுநாடுகளில் செய்யப்படுவது போல் வேறுபட்ட கழிவுகளை அவற்றிற்கென பிரத்தியேகமான வெவ்வேறு நிற தொட்டிகளில் பச்சை உக்கக்கூடிய (biodegradable), சிவப்பு உக்கமுடியாத (non biodegradable), நீலம் - மீள் சுழற்சிக் குட்படுத்தக் கூடிய (recyclables), கறுப்பு மீள்சுழற்சிக்குட்படுத்த முடியாதவை (non recyclables) அவை உருவாகும் இடத்திலேயே வேறாக சேகரித்தல், வீட்டு உரிமையாளரிடம் இருந்து அவர்கள் உருவாக்கும் கழிவுகளின் அளவிற்கேற்ப குற்றப்பணமாக ஒரு கட்டணத்தை அறவிடல் ("pay-as-you-throw") அல்லது மீள்சுழற்சிக்குட் படுத்தக்கூடிய, உக்கக்கூடிய கழிவுகளை ஏனைய கழிவுகளில் இருந்து பிரித்து சேகரித்து அகற்றுபவர்களுக்கு ஒரு பண ஊக்குவிப்பை (financial incentive) வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவியாக இருக்கும். ஆனால் எம்மில் எத்தனைபேர் கழிவுகளை வெவ்வேறாக பிரித்து போடுவதற்கு தயாராக உள்ளோம்? எமது வீட்டு வாசலைவிட்டு கழிவுகள் அகற்றப்படுவதுடன் எமது பிரச்சினை முடிந்து விட்டதாக கருதுகிறோம்.



வைத்தியசாலை, வைத்தியசாலை ஆய்வு கூடம் மற்றும் ஆராய்ச்சி நிலையக் கழிவுகள் தொற்றை ஏற்படுத்தக்கூடிய நுண்ணங்கிகளை கொண்டிருக்கும். இவற்றை அகற்றும்போது சுத்திகரிப்பு தொழிலாளர்களின் சுகாதார நலன் பேணப்பட வேண்டும். உரிய பாதுகாப்பு கவசங்களை அணிந்து தமது கடமையை செய்ய வேண்டும். அணியாத விடத்து தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கழிவுகளை சேகரித்த பின் அவற்றை உரிய இடத்திற்கு கொண்டு சென்று மணணில் புதைப்பது (land filling) அல்லது திறந்த வெளியில் எரிப்பது போன்றன பொதுவான முறைகளாக காணப்படுகின்றன. புதைக்கப்படும்போது சேதனக் கழிவுகளின் காற்றின்றிய பிரிகையின்போது (anaerobic decomposition) உருவாகும் வாயுக்கள் (மெதேன் காபனீரொட்சைட்டு) துர்நாற்றத்தை ஏற்படுத்தும், மண்ணங்கிகளை இறக்கச் செய்யலாம். அத்துடன் இவை பச்சை வீட்டு வாயுக்கள் (Green house gases) ஆகும். பூமி வெப்பமடைவதில் (global warming) மெதேன் வாயுவின் பங்கு காப்னீரொட்சைட்டுடன் ஒப்பிடும்போது 15-20 மடங்கு கூடியதாக காணப்படுகிறது. திறந்த புதை நிலங்கள் நோய் உண்டாக்கும் ஒட்டுண்ணிகளின் வாழிடமாக உள்ளன. அத்துடன் அருகில் உள்ள மேற்பரப்பு நீர் (surface water), நிலத்தடி நீர் (ground water) என்பன தொற்றடைகின்றன.

இத னால் கழிவு புதைக்கப்படும் இடங்களை அண்டிய நிலங் களின் பெறுமதி குறை வ டைகின்றது. நீர்ப்பற்று கூடு தலாக உள்ள சேதனக்கழிவுகள் எரிக்கப்படுவதில்லை. நகர திண்மக் கழிவுகளை (Municipal solid wastes) திறந்த வெளியில் எரித்தல் நச்சுப் பதார்த்தங்களை வளிக்கு வெளி விடும். பிளாஸ்ரிக் போன்றன எரிக்கும்போது உருவாகும் நச்சு புகை சுவாச நோயை உருவாக்கும். நைதரசன் ஒட்சைட்டு கந்தக ஒடசைட்டு போன்ற அமில வாயுககள், பார உலோகங்கள் (மேக்கியூரி, ஈயம், குரோமியம், கட்மியம். போன்றவை), டையொக்சின் (dioxins), பியூரன் (furans) மற்றும் துணிக்கைகள் (parti culate matter) என் பன வளி மாசாக்கிகளை உருவாக்குகின்றன. ஆகவே விஞ்ஞான ரீதியான உச்ச விளை பயனை தரக்கூடிய, குறைந்தளவு கழிவை உருவாக்கக் கூடிய சூழலுக்கு தீங்கு விளைவிக்காத நீடித்து நிலைக்கக்கூடிய கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகள் கழிவு முகாமைத் துவத்தில் கருத்தில் எடுக்கப்படவேண்டும். கழிவு முகாமைத்துவ படிநிலையமைப்பு (Waste management hierarchy) கழிவு முகாமைத்துவத்திற்கு பயன படுமஒரு பொது வான பரந்த அளவில் பயன்படு த்தப்படும் கோட்பாடாகும். இங்கு கழிவு முகாமை த்துவ செயல் அணுகுமு றைகள் அதிகம் விரும்பத்தக்கதிலிருந்து குறைந்தளவு விரும்பத்தக்கது வரை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இது பிரமிட் வடிவில் சித்தரிக்கப்படுகிறது.

(தொடரும்)

திருமதி கு.நிரஞ்சன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தாவரவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 158

புற்று நோயை (Leukemia) குணப்படுத்த பவளப்பாறை தொகுதிகளில்(Coral reef system ) பொதுவாக காணப்படும் Sea Sponges இல் இருந்து பெறப்படும் மருந்தின் பெயர் என்ன?

புதிர் 158 இற்கான விடைகளை 25.04.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கு.குணாளன்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர் (தகுதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 157 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே.ராஜகோபால்
கந்தசுவாமி கோவிலடி,
மாவடி, வட்டுக்கோட்டை

புதிர் 157 க்கான கேள்வியும் விடையும்:

யுனானி மருத்துவத்தின் தந்தை எனப்படுபவர் யார்?

ஹிப்போகிறட்டிஸ் (Hippocrates)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 158

சரியான விடை:-............................................

முழுப்பெயர்:-............................................

முகவரி:-............................................

தொ.பே. இல:............................................

கையொப்பம்:............................................

## 102 ஆண்டுகளுக்கு முன்னர்

# சீக்கிய அகதிகளை திருப்பி அனுப்பியதற்காக மன்னிப்பு கோரினார் கனடா பிரதமர் ஜஸ்டின்

கனடாவில் குடியேற வந்த சீக்கிய அகதிகளை திருப்பி அனுப்பியதால் ஏற்பட்ட மோசமான விளைவுகளுக்காக பகிரங்கமாக மன்னிப்பு கேட்டுக்கொள்வதாக அந்நாட்டு பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கடந்த 1914ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி இந்தியாவில் உள்ள பஞ்சாப் மாநிலத்திலிருந்து 376 சீக்கிய அகதிகள் கனடாவில் குடியேற அங்குள்ள வான்கூவர் துறைமுகத்துக்கு சென்றுள்ளனர்.

ஆனால், அப்போது அங்கிருந்த எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களை தடுத்து நிறுத்தினர். இரு தரப்பினருக்கும் இடையே சுமார் 2 மாதங்கள் போராட்டம் நடந்துள்ளது.

இதனை தொடர்ந்து, 24 சீக்கியர்களை மட்டும் ஏற்றுக்கொண்டு எஞ்சிய 352 சீக்கிய அகதிகளை கனடா திருப்பி அனுப்பியது. பெருத்த ஏமாற்றத்துடன் கொல்கத்தாவை அடைந்த அந்த சீக்கிய அகதிகளை அப்போதையை பிரிட்டிஷ் பொலிஸார் கைது செய்தனர்.

பொலிஸாருக்கும் சீக்கியர்களுக்கும் இடையே நிகழ்ந்த வன்முறையில் 22 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் கடலில் குதித்து தப்பினர். சில சீக்கியர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். 102 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த இந்த சம்பவத்திற்கு தற்போதையை கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ மன்னிப்பு கோரியுள்ளார்.

இது குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில், '1914ஆம் ஆண்டு சட்டங்களின் அடிப்படையில் சீக்கியர்களுக்கு புகலிடம் அளிக்க முடியாமல் திருப்பி அனுப்பியது தவறு. அப்போதைய அரசாங்கம் செய்த தவறுக்காக நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்வரும் மே 18ஆம் திகதி கனடா பாராளுமன்றத்தில் கூடும் கூட்டத்திற்கு முன்னால் முழு நீள மன்னிப்பு பத்திரம் வாசிக்க உள்ளதாகவும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். தற்போது பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் அமைச்சரவையில் 4 சீக்கிய அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)



## ஒடிஷாவில் மட்டும்

# கடும் வெயிலால் 24 பேர் உயிரிழப்பு

**இந்தியாவின் ஒடிஷா மாநிலத்தில் கடும் வெயிலால் இதுவரை 24 பேர் உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.**

இந்தியா முழுவதும் வெயில் கடுமையாக தாக்குவதால், வெப்ப அலையால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்து வருகிறது.

ஒடிஷாவில் நேற்று முன்தினம் சுமார் 19 இடங்களில் 40$^0$C வெப்பம் வீசியுள்ளது. Tit ilagarh என்ற டவுணில் நேற்று முன்தினம் 44.5 $^0$C வெப்பம் பதிவாகியுள்ளது.

இதனால் இதுவரை ஒடிஷாவில் கடும் வெயிலுக்கு 24 பேர் உயிரிழந்துள்ளனர் என கூறப்படுகிறது.

இந்நிலையில் ஒடிஷா மாநில அரசு, வெப்ப அலை அதிகரித்து உயிரிழப்புகள் அதிகரிப்பதால், மாநில அரசு ஊழியர்கள், மாவட்ட ஆட்சி அலுவலர்கள், பொலிஸார் என அனைவரும் விடுமுறை எடுக்காமல் கவனத்துடன்பணியாற்ற வேணடும் என அறிவுறுத்தியுள்ளது. (இ-5)

# பிரஸல்ஸ் விமான நிலையத்திற்கு செல்லும் விமானங்கள் இரத்து



(பிரஸல்ஸ்)

பிரஸல்ஸில் உள்ள சாவென்டிம் என்ற விமான நிலையத்தில் கடந்த மாதம் ஐ.எஸ் தீவிரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல்களை நடத்தினர்.

இந்த பயங்கர வெடி விபத்தில் 34 பேர் பலியாகி யுள ளதாகவும், நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தை அடுத்து பிரஸல்ஸ் விமான நிலையத்தில் நூற்றுக்கும் அதிகமான விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

இதனையடுத்து கடந்த ஏப்ரல் 3ஆம் திகதி மீண்டும் விமானங்கள் இயல்பாக இயங்கத் தொடங்கின. அன்று முதல் மொத்தமுள்ள 225 விமானங்களும் இயங்க தொடங்கின.

இந்நிலையில், பிரஸ்ல்ஸ் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெறும் வயது வரம்பில் மாற்றம், சம்பள உயர்வு, பணிச் சுமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த வேலை நிறுத்த போராட்டம் நடை பெறுகின்றது.

விமான நிலைய கட்டுப்பாட்டாளர்களின் இந்த போராட்டத்தால் கடந்த சில நாட்களாக பிரஸல்ஸ் விமான நிலையத்தின் பல்வேறு விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

வேலை நிறுத்தத்தின் முதல் நாளான கடந்த செவ்வாய்க்கிழமை 100 விமானங்கள் ரத்து செய்யப்பட்டதோடு, 7 விமானங்கள் திருப்பி விடப்பட்டன. அதனையடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை 50 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. (இ-5)

# போர்க்கப்பலுக்கு மிக அருகில் சென்ற ரஷ்ய விமானம்;அமெரிக்கா கண்டனம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்கு சொந்தமான போர்க்கப்பலை உரசுவது போல் இரண்டு ரஷ்ய விமானங்கள் பறந்த சம்பவத்துக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கு சொந்தமான USS டொனால்ட் குக் என்ற போர்க்கப்பல் கடந்த 2 ஆண்டுகளாக ஐரோப்பியாவில் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது ரஷ்யாவின் கலின்ங்கிரேட் பகுதியில் இருந்து 70 நாட்டிக்கல் தொலைவில் பால்டிக் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் அக்கப்பலில் இருந்து ஹெலிகொப்டர்கள் சோதனை செய்யப்பட்டன.

அப்போது ரஷ்யாவுக்கு சொந்தமான இரண்டு Su-24 ரக விமானங்கள் அமெரிக்காவின் போர்க்கப்பலை உரசிசெல்வது போல் பறந்தன. சுமார் 30 அடி தூரம் மட்டுமே இரண்டுக்கும் இடைவெளி இருந்தது.

இதனால் கப்பலில் இருந்த வீரர்கள் அச்சமடைந்தனர். இந் நிலையில் இச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க வெள்ளை மாளிகையின் செய்தி தொடர் பாளர் கூறியுள்ளதாவது, இது போன்ற சம்பவம் கடந்த ஒரு ஆண்டாக நிகழ்ந்து வருகின்றது.

இதுவரை பத்துக்கு மேற்பட்ட முறை இதுபோன்று நிகழ்ந்துள்ளது. இதனால் தேவையில்லாத பதற்றமான சூழ் நிலை தான் ஏற்படுகிறது என்று தெரிவித்துள்ளார். (இ)

# காசிரங்கா தேசிய பூங்காவைச் சுற்றிப் பார்த்த இளவரசர் வில்லியம்- கேத் மிடில்டன் தம்பதியர்



காசிரங்கா தேசிய பூங்கா வன விலங்கு சரணாலயம். இந்திய நாட்டின் பொக்கிஷங்களில் ஒன்று. உலகின் வேறு பகுதிகளில் காண முடியாத அரிய வகை ஒற்றைக் கொம்பு காண்டா மிருகங்கள் நிறைந்த வனப் பகுதி. இன்னும் பல ஆசிய யானைகள், புலி, காட்டெருமைகள், பறவைகள் நிறைந்த எழில் கொஞ்சும் வனப் பகுதி. வடகிழக்கு மாநிலங்களில் மிகப்பெரியதான அசாம் மாநிலத்தில் அமைந்துள்ளது.

இந்தியாவைச் சுற்றிப் பார்க்க விரும்பினால், காசிரங்கா தேசிய பூங்காவையும் நிச்சயம் பார்த்தே ஆக வேண்டும். அத்தனை எழில் நிறைந்த பகுதி அது.

உலகின் புராதன பகுதியாகவும் யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப் பட்டு வருகிறது.

இதனால் காசிராங்கா தேசிய பூங்காவில் உள்ள அரிய வகை ஒற்றை கொம்பு காண்டாமிருகங்கள் உள்ளிட்ட விலங்குகளை காணவும், அதனை இயற்கை எழிலை கண்டு களிக்கவும் உலகின் பல நாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து கொண்டு இருக்கின்றனர்.

இத்தனை இயற்கை செல்வங்கள் கொட்டிக் கிடப்பதால்தான், இந்திய சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள இங்கிலாந்து இளவரசர் வில்லியம் தனது நிகழ்ச்சி நிரலில், காசிரங்கா தேசிய பூங்காவையும் சேர்த்துள்ளார்.

அதன்படி, வில்லியமும் அவரது மனைவி கேத் மிடில்டனும் நேற்று முன்தினம் வனப் பகுதிகளை சுற்றிப்பார்த்து அதிசயித்தனர். அவர்களுக்கு பாதுகாப்பாக வன அதிகாரிகள் உடன் சென்றனர். திறந்த ஜீப்பில் பல இடங்களை வில்லியம் தம்பதியினர் சுற்றப் பார்த்தனர்.

**பாரம்பரிய வரவேற்பு**

குறிப்பாக ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம் மற்றும் புலிகள் உள்ள துங்கா மற்றும் ரோவ்மாரி வனப்பகுதியை சுற்றிபார்த்து ரசித்தனர்.

அப்போது காண்டா மிருகங்கள் வேட் டையாடப் படுவதை தடுக்க மேற் கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், தேசிய பூங்காவை பாதுகாப்பதில் உள்ள சவால்கள் குறித்து அதிகாரிகளிடம் அவர்கள் கேட்டறிந்தனர்.

மேலும் வனத்துறை மற்றும் பூங்கா ஊழியர்களின் குடும்ப பின்னணி பற்றியும் ஆவலுடன் கேட்டு தெரிந்து கொண்டனர்.

முன்னதாக காசிரங்கா தேசிய பூங்காவுக்கு வந்த அரச தம்பதிக்கு தலைமை வன பாதுகாவலர் ஓ.பி. பாண்டே மற்றும் கூடுதல் வன பாதுகாவலர் யாதவ் இருவரும் பாரம்பரிய முறைப்படி அசாம் மாநில வஸ்திரம் அணிவித்து வரவேற்பு அளித்தனர்.

பூங்காவை சுற்றிப் பார்க்க வருபவர்கள் தங்குவதற்கு அதை சுற்றிலும் இயற்கை சூழலில் பல ரெசார்ட்டுகள் உள்ளன.

அசாம் வந்த வில்லியம் தம்பதியினர், 'திப்லு ரிவர் லொட்ஜ்ஜில் தங்கினர். காசிரங்கா தேசிய பூங்காவுக்கு அருகில் இந்த ரெசார்ட் உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# மியன்மாரில் நிலநடுக்கம்




மியன்மாரின் வடமேற்கு பகுதி நகரான மண்டலேயில் நேற்று முன்தினமிரவு 6.9 ரிக்டர் அளவிலான பூமியதிர்ச்சி உணரப்பட்டுள்ளது.

குறித்த பூமியதிர்ச்சி தாக்கத்தினால் டாக்கா, கொல்கத்தா, அசாம் பிராந்தியம் மற்றும் மியன்மாரின் யாங்கன் ஆகிய பகுதிகளில் கட்டடங்களில் வசித்த மக்கள் அச்சத்தினால் வெளியேறியுள்ளனர்.

இதுவரையும் உயிரிழப்புகள் மற்றும் சேத விபரங்கள் பற்றி எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை. (இ)

# ஈராக்கின் முற்றுகை நகரான பலூஜாவில் பட்டினி அபாயம் குறித்து ஐ.நா. எச்சரிக்கை

(டெஹ்ரான்)

**முற்றுகையில் சிக்கி இருக்கும் ஈராக்கின் பலூஜா நகரில் உள்ள சுமார் 60 ஆயிரம் மக்கள் உணவு பற்றாக்குறைக்கு முகம் கொடுத்திருப்பது குறித்து கடும் கவலை வெளியிட்டிருக்கும் ஐ.நா. சபை நிலைமை மேலும் மோசமடையும் என்று எச்சரித்துள்ளது.**



இந்த நகரில் உணவு விலை உயர்ந்து வருவதாகவும் வீடுகள் மற்றும் கடைகளில் இருக்கும் உணவு கையிருப்பும் குறைந்து வருவதாகவும் உலக உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்லாமிய தேசம் (ஐ.எஸ்.) குழுவிடம் இருந்து இந்த நகரை மீட்க அரச படை தொடர்ந்து முயன்று வருகிறது.

இந்த நகருக்கான விநியோகப்பாதையை முடக்கி இருக்கும் ஐ.எஸ். குழு, மக்கள் வெளியேறுவதையும் தடுத்து வருகிறது.

ஈராக்கில் ஐ.எஸ். பலம் கொண்டிருக்கும் இரு நகரங்களில் ஒன்றாக பலூஜா உள்ளது.

நகரில் இருக்கும் மக்கள் பட்டினியால் வாடுவதாக குறிப்பிட்டிருக்கும் மனித உரிமை கண்காணிப்பகம், இருக்கும்குறைவான உணவுகளும் அதிக விலைக்கு விற்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

இதனால் அங்குள்ளவர்கள் புற்களை உண்ணும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத்திட்டமும இதேபோன்றதொரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

"பலூஜாவில் தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாகவும் முற்றுகை நீடிககிறது.

கடந்த மார்ச் வரையில் எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை" என்று உலக உணவுத் திட்ட அறிக்கை கூறுகிறது.

"கடந்த மார்ச் மாதத்தில் கோதுமை விலை டிசெம்பர் மாதத்தை விடவும் ஆறு மடங்கு அதிகரித்திருந்தது" என்று அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

கடைகள் மற்றும் சந்தைகளில் உணவுகள் குறைந்து வருவதாகவும் கோதுமை, சீனி, அரிசி, எண்ணெய்போனற உணவுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் தொலைபேசி ஊடான கணக்கெடுப்பின் மூலம் தெரிய வந்துள்ளது.

எனினும் நகரில் கையடக்கத் தொலைபேசி சமிக்ஞைகள் மோசமாக இருப்பது மற்றும் அச்சம் காரணமாக அங்கிருந்து தகவல்களை பெறுவது கடினமாக இருப்பதாக உரிமைக் குழுக்கள் குறிப்பிட்டுள்ளன.

"கடந்த 2015 டிசெம்பரில் அருகாமை நகரான ரமாடியை அரச படை கைப்பற்றியது தொடக்கம் நகருக்கான உதவிகள் செல்லவில்லை.

ஈராக்கிய படையினரால் விநியோகப் பாதைகள் துண்டிக்கப்பட்டிருந்ததோடு ஆயுத குழுவினர் மக்கள் நகரில் இருந்து வெளியேறுவதை தடுத்து வருகிறது என்று மேற படி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (இ-5)

# வில்லியம் தம்பதியினருக்கு பிரதமர் மோடி விருந்தளிப்பு

பிரிட்டன் இளவரசர் வில்லியம், அவரது மனைவி கேட் மிடில்டன் ஆகியோருக்கு பிரதமர் நரேந்திர மோடி கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல், பாரம்பரிய இசை நிகழ்ச்சியுடன் சிறப்பு விருந்து அளித்தார்.

தலைநகர் டில்லியில் இந்தியா கேட்டுக்கு அருகில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் இந்த விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னதாக, அங்கு வந்த வில்லியம் தம்பதியரை பிரதமர் மோடி வரவேற்றார்.

அவர்களுக்கு சைவம், அசைவம் சார்ந்த நான்கு விதமான உணவு வகைகள் பரிமாறப்பட்டன.

உடன் சந்தூர் வாத்திய இசைக் கலைஞர் ராகுல் சர்மாவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், தகவல் - ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் ராஜ்ய வர்த்தன் ராத்தோர் ஆகியோர் இந்த விருந்தில் கலந்து கொண்டனர்.

அவர்களைத் தவிர, பார்தி குழுமத்தின் தலைவர் சுனில் பார்தி மித்தல், ஐ.சி.ஐ.சி.ஐ. குழுமத்தின் மேலாண் இயக்குநர் சாந்தா கோச்சார், நடிகர் அனுபம் கெர், முன்னாள் பட்மிண்டன் வீரர் புல்லேலா கோபிசந்த். உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் இந்த விருந்தில் கலந்து கொண்டனர்.

ஒரு வார காலப் பயணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியா வந்த வில்லியம் தம்பதியர், மும்பையில் தங்கள் பயணத்தைத் தொடங்கினர்.

அங்கு கடந்த 2008ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.



அதைத் தொடர்ந்து டில்லி வந்த அவர்கள், மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர். பிறகு, போரில் உயிரிழந்த இந்திய வீரர்களுக்கு "அமர் ஜவான் ஜோதி"யில் வில்லியம் தம்பதியர் அஞ்சலி செலுத்தினர்.

பிரிட்டன் ராணி எலிசபெத்தின் 90 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு டில்லியில் உள்ள பிரிட்டன் தூதர் இல்லத்தில் வில்லியம் தம்பதியினருக்கு கடந்த திங்கட்கிழமை வரவேற்பு அளிக்கப்பட்டது. (இ-5)

# கோவில் வெடி விபத்து தொடர்பில் நிர்வாகிகள் உட்பட 13 பேர் கைது

## தடை செய்யப்பட்ட வேதிப் பொருட்களை பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு

(கொல்லம்)

இந்தியாவின் கேரள மாநிலம் கொல்லம் அருகே பரவூரில் 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த புற்றிங்கல் அம்மன் கோவில உள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு அங்கு கோவில் நிர்வாகம் சார்பில் வாணவேடிக்கை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

அதிலிருந்து சிதறிய தீப்பொறி பட்டாசுகள் மற்றும் வெடிபொருட்கள் சேமித்து வைக்கப்பட்டு இருந்த அறையில் விழுந்தது.

இதனால் அந்த பட்டாசுகள் அனைத்தும் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின. இந்த வெடி விபத்தில் 111 பக்தர்கள் பலியாகினர்.

350 இற்கும்மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இவர்களில் 27 பேரின் நிலைமை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது.

மாவட்ட நிர்வாகத்தின் தடையையும் மீறி கோவிலில் வாணவேடிக்கை நிகழ்த்தப்பட்டதால் பொலிஸார் இது தொடர்பாக கோவில் நிர்வாகிகள், வாணவேடிக்கை நிகழ்ச்சி ஒப்பந்ததாரர்., பட்டாசு உரிமைதாரர் உட்பட 20 பேர் மீது வெடிமருந்து பொருட்கள் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதில் கோவில் நிர்வாகிகள் 6 பேர் மீது கொலை முயற்சி வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கோவிலில் வெடிவிபத்து நடந்த பின்னர், கோவில் நிர்வாகிகளும், வாணவேடிக்கை நிகழ்ச்சி ஒப்பந்ததாரர்களும் தலைமறைவாகி விட்டனர்.

அவர்களில் கோவில் நிர்வாகிகள் 7 பேர் நேற்று முன்தினம் காலை கொல்லம் குற்றப் பிரிவு பொலிஸில் சரண் அடைந்தனர்.

இதையடுத்து, கோவில் நிர்வாக அறங்காவலர்கள் குழுத் தலைவர் ஜெயலால், செயலாளர் ஜே.கிருஷ்ணன் குட்டி மற்றும் சிவபிரசாத், சுரேந்திரன் பிள்ளை, ரவீந்திரன் பிள்ளை, சுரேந்திர நாதன் பிள்ளை, முருகேசன் ஆகிய 7 பேரையும் குற்றப் பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

இதேபோல் இந்த வழக்கில் தொடர்புடைய மேலும் 6 பேரும் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்களிடம் வாணவேடிக்கை நிகழ்ச்சியை நடத்தியது தொடர்பாக துருவித் துருவி விசாரணை நடத்தினர்.

பொலிஸாரின் விசாரணையில் தடையை மீறி போட்டி போட்டு வாண வேடிக்கை நடத்தப்பட்டதும் தடை செய்யப்பட்ட வேதிப் பொருட்களை வெடிகளில் பயன்படுத்தியதுமே விபத்துக்கு காரணம் என்பதும் தெரிய வந்துள்ளது. (இ-5)

# சிறுவர்களைத் தற்கொலைக் குண்டுதாரிகளாக பயன்படுத்தப்படுவது பத்து மடங்காக அதிகரிப்பு



நைஜீரியாவை தளமாக கொண்டு இயங்கிவரும் இஸ்லாமியவாதகுழுவான போகோ ஹராம் இயக்கத்தில் சிறுவர்கள் தற்கொலைக் குண்டுதாரிகளாக பயன்படுத்தப்படுவது கடந்த ஆண்டில் 10 மடங்கிற்கும் மேல் அதிகரித்துள்ளது என ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு கமரூன், சாட் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் அவ்வாறான தாக்குதல்களில் 44 சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டதாக ஐ.நாவின் சிறுவர்களுக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கை 2014 இல் 4 ஆக இருந்தது.

தற்கொலைக் குண்டுதாரிகள் ஐந்து பேரில் ஒருவர் சிறுவர் என தெரிவிக்கும் ஐ.நாவின் சிறுவர்களுக்கான நிறுவனம், அதில் 75 சதவீதம் பேர் சிறுமிகள் எனவும் தெரிவித்துள்ளது. போதை ஊட்டப்பட்ட சிறுமிகளின் உடலில் வெடிபொருட்கள் கட்டப்பட்டு அவர்கள் தாக்குதல்களை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப் படுகின்றனர் என யுனிசெப தெரிவித்துள்ளது. (இ-5)

# கொழும்பில் சமய வழிபாடுகளுடன் புத்தாண்டுக் கொண்டாட்டம்

புத்தாண்டு தினமான நேற்று கொழும்பு நகரில் வாழும் சிங்கள, தமிழ் மக்கள் மத வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து புதுவருடத்தினை கொண்டாடியுள்ளன.

பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டும், நகரில் மக்கள் நடமாட்டம் குறைந்தும் காணப்பட்டது.

வெளிமாவட்டத்தில் வசிப்பவர்கள் தமது குடும்பத்தினருடன் புதுவருடத்தைக் கொண்டாட கொழும்பு நகரைவிட்டு அவர்களின் சொந்த பிரதேசங்களுக்கு அண்மைய நாட்களில் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

பண்டிகை நாட்களில் கேளிக்கைகள், கொண்டாட்டங்களில் ஈடுபடும் மக்கள் இம்முறை சமய வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றமையானது நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ வழி வகுக்கும் எனவும் நம்பப்படுகின்றது. பிரசித்தி பெற்ற ஆலயங்கள் பலவற்றில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று காலை இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

# செல்ஃபி வீடியோ மூலம் மகிந்த மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்து



சித்திரை புத்தாண்டை முன்னிட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செல்ஃபி வீடியோ மூலம் இலங்கை மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்து வீடியோவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதாவது, இலங்கை மக்களுக்கு மகிழ்ச்சியானதும் செழிப்புமிக்கதுமான புத்தாண்டு வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் வெளிப்படுத்துவதாக, சிங்கள மக்களும் தமிழ் மக்களும், ஒரே சுப நேரத்தில் பாரம்பரிய புத்தாண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் காலம் இதுவாகும்.

புத்தாண்டென்பது, வடக்கு - தெற்கு ஒற்றுமையின் வருடாந்தக் கொண்டாட்டங்களென்பதோடு, இது, பயங்கரவாதிகளின் துப்பாக்கிச்சூட்டுக்கும் குண்டுகளுக்கும் மத்தியிலும் கூட சிதைக்கப்பட்டிருக்கவில்லை.

எதிர்வரும் ஆண்டில் செழிப்பும் நலனும் காணப்படும் நம்பிக்கையுடன், புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. இந்த நேரத்தில் நாம் விவசாயம், உணவுப் பாதுகாப்பு ஆகியன தொடர்பில் கவனத்துடன் இருக்க வேண்டும். இந்தப் பண்டிகையின் அடிப்படையான விவசாயத் தொடர்புகளை நாம் மறக்கலாகாது. அது உணவு உற்பத்தி, தன்னிறைவு, துடிப்பான உள்நாட்டு விவசாயம் ஆகயன தொடர்பானது மாத்திரமே. எங்களுடைய பாரம்பரியங்கள் நிலைத்து நிற்பதை உறுதிசெய்வதற்கு, புத்தாண்டின் சடங்குகளையும் செயற்பாடுகளையும், இளைய சமுதாயத்திடம் பகிர்ந்துகொள்ளுதல், வளர்ந்தோரின் கடமையாகும்.

மகிழ்வானதும் செழிப்பானதுமான புத்தாண்டு வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன் என மகிந்த மேலும் தெரித்துள்ளார்.(இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 150 | 100 |
| தக்காளி | 100 | 100 | 160 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 80 | 50 |
| கோவா | 60 | 35 | 100 | 50 |
| கரட் | 120 | 85 | 240 | 100 |
| பூசணி | 40 | 15 | 40 | 40 |
| புடோல் | 60 | 30 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 75 | 100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 65 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 50 | 80 | 100 |
| லீக்ஸ் | 140 | 120 | 200 | 150 |
| பீற்றூட் | 120 | 60 | 120 | 70 |
| கறிமிளகாய் | 120 | 50 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 500 |
| போஞ்சி | 270 | 100 | 240 | 140 |
| கத்தரிதம்புள்ள | 80 | 40 | 60 | 90 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 320 | 250 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 20-40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 150 | 100 | 160 | 140 |
| வெங்காயப்பூ | 240 | — | — | — |
| முள்ளங்கி | 60 | 30 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 25 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சென்னையில் பத்மநாபா உட்பட 14 பேர் சுட்டுக்கொலை 156

...சம்பவம் நடந்த ஜக்ரியா காலனி மெயின்ரோடு போர்க்களம் போல காட்சியளித்தது. பத்மநாபா இருந்த அறையில் அவரையும் சேர்த்து 7 பேர்களின் உடல்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தன. மற்ற உடல்கள் மெயின்ரோட்டில் ஆங்காங்கே இரத்த வெள்ளத்தில் கிடந்தன.

ரோட்டிலும் பத்மநாபா வீட்டு அறையிலும் துப்பாக்கிக் குண்டுகளும் வெடி குண்டுகளும் சிதறிக்கிடந்தன.

**டி.ஜி.பி.துரை**

தகவல் கிடைத்ததும் பொலிஸ் டைரக்டர் ஜெனரல் (டி.ஜி.பி.) துரை டி.ஐ.ஜி ஜாபர் அலி, சென்னை நகர பொலிஸ் கமிஷனர் ராஜசேகரன் நாயர் ஆகியோர் பொலிஸ் படையுடன் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினார்கள்.

**கருணாநிதி**

கோடம்பாக்கத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து டில்லியில் இருந்த முதலமைச்சர் கருணாநிதிக்கு உடனடியாகத் தெரிவிக்கப் பட்டது.


இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருந்ததாவது,

இரண்டு நாட்கள் டில்லியில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தும் அங்கு நடைபெறுகின்ற யுத்தத்தில் இரு தரப்பிலும் களத்தில் செத்து மடிவது மட்டுமின்றி அப்பாவித் தமிழ் மக்களும் கொல்லப்படுவது குறித்தும் இந்தியப் பிரதமர் அவர்களுடன் பேசியதன் தொடர்பாக பிரதமரால் அவரது இல்லத்தில் அவசர ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது.

அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த தலைவர்களுக்கும் முதலமைச்சர்களுக்கும் இலங்கை குறித்து கடந்தகால நிலைமைகளையும் தற்போதுள்ள நிலைமைகளையும் விளக்கிச் சொன்னேன்.

அந்தக் கூட்டத்துக்கு பிறகு மீண்டும் பிரதமரைச் சந்தித்து இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசிவிட்டு டில்லி தமிழ்நாடு இல்லத்திற்கு சென்றவுடன் சென்னையில் நடந்துள்ள கொடுமையான கொலை நிகழ்ச்சி செய்தி என்னை அதிர்ச்சியடையச் செய்தது.

ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் பத்மநாபா மற்றும் அந் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் கோடாம்பாக்கத்தில் உள்ள அவர்களது அலுவலகத்தில் பேசிக்கொண்டிருந்த போது எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் ஒரு கோஷ்டியினர் திடீர் என்று நுழைந்து துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தவர்களும் கொல்லப்பட்டதாக எனக்குத் தகவல் வந்துள்ளது.



தலைமறைவாக வாழ்ந்தபோது...

**சகோதர யுத்தம்**

எந்த சகோதர யுத்தம் தமிழ் ஈழத்தில் நடைபெறக் கூடாது என கடந்த ஆண்டு சுமார் 70 நாட்கள் போராளிக் குழுக்களுடன் பேச்சுவாத்தை நடத்தினேனோ அந்த சகோதர யுத்தத்தைத் தமிழ்நாட்டிலேயே அவர்கள் நடத்தி சென்னை நகரில் இரத்த ஆறு பெருக்கெடுக்கச் செய்துவிட்டார்கள்.

கொலையாளிகளை உடனடியாகக் கைது செய்ய உத்தர விடப்பட்டுள்ளது.

எந்த இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளாக இருப்பினும் அவர்கள் தமிழ்நாட்டில் உலவிக்கொண்டிருந்தால் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்கிற நிலை இதனை ஒட்டி உருவாகும் என்பதால் முன்னெச்சரிக்கையாக கைது செய்யும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக எனக்கு அறிமுகமாகி என்னுடன் பழகிய நண்பர் பத்மநாபா அவர்களும் அவர்களுடைய ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்களும் கொலையுண்டது குறித்து எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


இவ்வாறு அறிக்கையில் கருணாநிதி கூறியிருந்தார்.

தேர்தல் பிரசாரத்திற்காக வந்த ராஜீவ்காந்தி ஸ்ரீபெரும்பத்தூரில் ஒரு பெண்ணின் வெடிகுண்டு தாக்குதலுக்குப் பலியானார்.

பாராளுமன்ற தேர்தலில் பிரசாரம் செய்வதற்காகக் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி 21.05.1991 அன்று இரவு 8.30 மணிக்குச் சென்னை விமான நிலையம் போய்ச் சேர்ந்தார். 8.40 மணிக்கு விமான நிலையத்தில் நிருபர்களுக்குப் பேட்டியளித்த ராஜீவ்காந்தி மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வருவது உறுதி என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

**கடைசி பொதுக்கூட்டம்**

9.10 மணிக்குப் போரூர் பொதுக்கூட்டத்திலும் 9.30 மணிக்குப் பூத்தமல்லிப் பொதுக்கூட்டத்திலும் பேசினார். பூத்தமல்லி பொதுக் கூட்டத்தில் மைக் சரியாக வேலை செய்யவில்லை.



குடும்பத்துடன் பத்மநாபா

(தொடரும்)

# வீரவன்சவுக்கு கசந்தாலும் ரணிலின் மருந்து சிறந்தது

## அமைச்சர் ஹரின் உத்தரவாதம்





விமல் வீரவன்ச போன்றவர்கள் கசப்பாக இருக்கின்றது எனக் கூறினாலும் பிரதமர் ரணிலின் மருந்து மிகவும் சிறந்தது என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகத்தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த கொண்டு வரும் மருந்து வீரவன்ச போன்றோர் கசப்பாக இருக்கின்றது என்று கூறினாலும் அது சிறந்த மருந்தாகும்.

நாட்டை கடன் பொறியில் இருந்து காப்பாற்றி முன்னோக்கிச் செல்ல மேற்கொள்ளும் முயற்சியை சீர்குலைக்க வேண்டாம் என நாம் அவர்களை கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் நாட்டின் கடன் பொறியை இல்லாமல் செய்வோம். பிரதமருக்கு மருத்துவம் நன்றாக தெரியும் எனவும் ஹரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# கச்சதீவை மீளக்கோரி மீண்டும் வலியுறுத்தல்

(கொழும்பு)

தமிழக கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கச்சதீவை மீட்பதே ஒரே வழியாகும் என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தின் கடற்றொழிலாளர் உரிமைக்கூட்டமைப்பு இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளது.

இராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் வெளியிட்ட பிரகடனத்தில் இந்த விடயத்தை கூட்டமைப்பு கோரியுள்ளது.

20 இலட்சம் பேர் வரை தமிழகத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கச்சதீவு பகுதியில் இலங்கையின் கடற்படையினரின் கைது நடவடிக்கை காரணமாக அவர்களின் வாழ்வாதாரம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கச்சதீவை மீட்டால் மாத்திரமே. கடற்றொழிலாளர்கள் பிரச்சினைக்கு தீர்வை காணமுடியும் என்றும் அந்த கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (இ)

# தயாசி.றியின் சில்லறைத் தனமான நடவடிக்கை வருத்தமளிக்கின்றது

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு


தயாசிறி


கிரியெல்ல

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவின் சில்லறைத் தனமான நடவடிக்கை வருத்தமளிக்கின்றது என பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பொல்கஹாவல மேம்பாலம் அங்குரார்ப்பண நிகழ்வின் போது விளையாட்டுத்துறை அமைச்சர் நடந்து கொண்ட விதம் குறித்து கொழும்பு பத்திரிகையொன்றுக்கு கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்குரார்ப்பண நிகழ்வின் போது நீலக் கொடிகளும் தாயசிறியின் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இவ்வாறான கௌரவமான நிகழ்வு ஒன்றின் போது அமைச்சர் தயாசிறி சில்லறைத் தனமாக நடந்து கொணடார்.

மேம்பாலம் ஒன்று இல்லாத காரணத்தினால் நாளொன்றுக்கு 120 தடவைகள் சுமார் 480 நிமிடங்கள் புகையிரத கடவையை மூட வேண்டியுள்ளது.

வாகன நெரிசல் காரணமாக மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தனர்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட மேம்பாலத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் முக்கிய நிகழ்வில் சிறுசிறு விடயங்களை பெரிதுபடுத்தி தயாசிறி ஜயசேகர பிரபல்யம் அடைய நினைப்பது வருத்தமளிக்கின்றது. பச்சைக் கொடியின் நிழலில் ஒருபோதும் இருக்கவில்லை என்பதனைப் போன்று தயாசிறி நடந்து கொள்வது ஆச்சரியமளிக்கின்றது என அமைச்சர் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிகழ்வின் போது பச்சைக் கொடிகள் காடசிப்படுத்தப்பட்டிருந்த காரணத்தினால் கோபமடைந்து தயாசிறி அந்த நிகழ்வினை புறக்கணித்து வெளியேறியிருந்தார் என ஊடகங் களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# அரியவகை நோயினால் அவதிப்படும் குழந்தைகள்

(கொழும்பு)

மஹியங்கனை, ஒரு பெதிவெவ மீவாகல பகுதியில் வாழ்ந்து வருகின்ற ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த இரு குழந்தைகள் அரிய வகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தமது பிள்ளைகளுக்கு உரிய முறையில் சிகிச்சைகளை பெற்றுக் கொடுக்க முடியாத துர்பாக்கிய நிலைக்கு இக் குழந்தைகளின் பெற்றோர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

பெற்றோரின் இரத்த உறவினால் (Harlequin-type ichthyosis) எனப்படும் இவ் அரிய வகை நோயால் குறித்த இரு குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஐந்து வயதான பெண் குழந்தை மற்றும் 10 வயதான ஆண் பிள்ளையை காப்பாற்றுவதற்காக தந்தை நாளாந்தம் கூலித் தொழிலுக்கு சென்று வருகின்றார்.

இதேவேளை, நோய்க்கான சிகிச்சைகளை அளிப்பதற்கு அதிகளவான நிதி செலவிடப்படுவதனால், பெற்றோர் கொடையாளிகளின் உதவியை நாடி நிற்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

## இன்று ஒரு தகவல்

### உங்கள் கணவர்-மனைவி அழகாக இல்லையா?

இருட்டில் எல்லோருமே அழகு தான் என்று ஆங்கிலத்தில் ஒரு வேடிக்கையான பழமொழி உண்டு. உங்கள் வாழ்க்கைத்துணை அழகில்லையா?

பரவாயில்லை.அதற்கென நீங்கள் வருந்த வேண்டியதில்லை.

அழகற்ற மனைவியைப் பெற்ற ஒரு கணவனிடம் ஒருவர் கேட்டார், நீங்கள் உங்கள் மனத்தை எப்படிச் சமாதானப்படுத்திக் கொள்கிறீர்கள்?

கணவன் சொன்னான் நான் என் மனைவியின் உடலை நேசிக்கவில்லை, உள்ளத்தையே நேசிக்றேன். அதனால் என் பார்வையில் அழகின்மை பெரிதாகப்படவில்லை. எனவே என்னால் அழகான மனைவியைப் பெற்ற கணவனைவிட மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது.

கேள்வி கேட்டவர் மேற்கொண்டு பேசும் வகை அறியாது வாயடைத்துப் போயிருப்பார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

காண்போர் வியக்கும் பேரழகி ஒருத்தியை ஓர் ஆண் திருமணம் செய்து கொள்கிறான் என வைத்துக் கொள்வோம்.முகப்பரு வந்தோ ஒரு தீ விபத்து ஏற்பட்டோ ஒரு சாலை விபத்து ஏற்பட்டோ அவளுடைய அழகு சிதைந்து விடுகிறதென்றால் அவளைக் கைவிட்டுவிட முடியுமா? ஒரு கணவன் அப்படி செய்வானேயானால் அது எவ்வித்தில் சிறந்தது?

ஆக, இல்வாழ்க்கை என்பது வெறும் உடற்சேர்க்கையாக இல்லாமல் உள்ளச் சேர்க்கையாகவே இருக்கிறது. இது பொது நியதி.

அழகான மனைவியையும் அழகான கணவனையும் அடையப்பெற்ற எல்லா ஆண்களும் எல்லாப் பெண்களும் கொடுத்து வைத்தவர்கள் என்பதாக யாரேனும் எண்ணிக் கொண்டிருந்தால் அது மகா தவறு.

புறத்தோற்றத்தை வைத்து இல்வாழ்க்கை ஒருக்காலும் சிறப்படைவதில்லை. உள்ளத்தை வைத்தே அது சிறப்படைகிறது.

அழகு ஆபத்தானது என்றுகூட ஒரு வகையில் மனத்தைச் சமாதானம் செய்துகொள்ளலாம்.

கட்டாயம் காரணமாகவோ அவசரம் காரணமாகவோ வேறு வழியற்ற சந்தர்ப்ப சூழ்நிலைகள் கார்ணமாகவோ அழகற்ற ஒருவரை-ஒருத்தியை-மணக்க நேரிடுகிறதென்றால் ஒருவிதக் கட்டாய விருப்பத்தை ஏற்படுத்திக்கொள்ளத்தான் வேண்டும். வேறு வழியில்லை. அதுவே நிரந்தர விருப்பத்திற்கு அடிகோலும்.

அழகில்லாதபோதும் நம்மை விரும்புகிறாரே- என்ற எண்ணம் மகிழ்ச்சியையும் அன்பையும் பன்மடங்காகப் பெருக்கும். இல்வாழ்க்கை இனிக்கும்.


அழகற்றவர்களுக்கு ஒரு வார்த்தை; புறத்தோற்றத்தை நம்மால் மாற்ற முடியாது. அகத்தோற்றமாவது மற்றவர்கள் விரும்பும் வகையில் அன்புள்ளதாகவும் பாச அமுது சுரப்பதாகவும் இருக்கட்டும்.

லேனா தமிழ்வாணன்




# அரசை வென்ற புளியம்பழம்!





ஒரு நாட்டில் ஒரு ராஜா இருந்தார். உலகத்திலுள்ள அத்தனை பொருட்கள் மீதும் அவருக்கு ஆசை.

அவர் ஆசைப்படாத பொருளே இல்லை என்று சொல்லலாம். சுருக்கமாகச் சொன்னால் அவர் ஆசை மீதே அவருக்கு ஆசை.

அதனால் மக்கள் அவரை ஆசைராஜா என்று அழைத்தார்கள். ஆசைராஜாவின் ஆசையை நிறைவேற்ற வேண்டாமா? உடனே அவருடைய மந்திரிகள் அவர் ஆசைப்பட்ட எல்லாத்தையும் வரவழைத்துக் கொடுத்தனர்.

அது உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் என்ன விலையாக இருந்தாலும் வரவழைத்து விடுவார்கள்.

இப்படி ஆசைராஜா உலகத்திலுள்ள எல்லாவற்றையும் அனுபவித்து விட்டார்.

உடைகளா? உலகத்திலேயே மிகச் சிறந்த உடைகள் அவரிடம் நிறைய இருந்தன.

அவற்றையெல்லாம் உடுத்தி உடுத்தி அவருக்குச் சலிப்பு வந்துவிட்டது.

அதேபோல உலகிலே மிகச் சிறந்த உணவுகளைச் சாப்பிட ஆசை கொண்டார் ராஜா.

உடனே அவருடைய மந்திரிகள் உலகத்திலுள்ள அத்தனை சிறந்த சாப்பாடுகளையும் சமைக்கும் சமையல்காரர்களை கூட்டிக் கொண்டு வந்தார்கள்.

ஆசை ராஜாவுக்கு விதவிதமாய் சாப்பாடு செய்து கொடுத்தார்கள். சில நாட்களிலே ஆசைராஜாவுக்கு அதிலும் சலிப்பு வந்துவிட்டது.

உலகத்திலே மிக மென்மையான மெத்தை அவருக்குக் கசந்துவிட்டது.

மிகச் சிறந்த கலைப் பொருட்களும் அவருடைய ஆசைக்கு முன்னால் வெகு நாட்கள் நிற்க முடியவில்லை.

ஆசைராஜாவுக்கு இப்போது எதுவும் ஆர்வமூட்டவில்லை. அவர் எப்போதும் எரிச்சலுடனும் கோபத்துடனும் இருந்தார்.

இதனால் மந்திரிகள் கவலை கொண்டார்கள். உடனே நாடெங்கும் முரசு கொட்டி ஆசைராஜாவின் ஆசையை யார் தூண்டுகிறார்களோ அவர்களுக்கு ஆசைராஜாவின் அருமை மகளான இளவரசியைத் திருமணம் செய்துக் கொடுப்பதாக அறிவிப்பு வெளியிட்டார். கூடவே பாதி நாட்டையும் தருவதாக அறிவிப்பு செய்தார்.

இந்த அறிவிப்பைக் கேள்விப்பட்டு உலகத்தின் எல்லா மூலைகளிலிருந்தும் இளைஞர்கள் வந்தார்கள்.

ஒவ்வொருத்தரும் விதவிதமாகப் பொருட்கள், ஆடை அணிகலன்கள், உணவுப் பொருட்கள், கலைப் பொருட்கள, கவிதைகள் என்று ஆசை ராஜாவின் முன்னால் வந்து காண்பித்தார்கள். **(தொடரும்)**

04.2016
15

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1450 - பிரான்சின் போர்மிக்னி என்ற இடத்தில் ஆங்கிலேயரின் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்ததன் மூலம் வடக்கு பிரான்சில் ஆங்கிலேயரின் அதிகாரம் முடிவுக்கு வந்தது.
- 1755 - சாமுவேல் ஜோன்சன் என்பவர் தனது ஆங்கில அகராதியை வெளியிட்டார்.
- 1815 - சல்லி என்றழைக்கப்பட்ட டச்சு செப்பு நாணயம் இலங்கையில் அறிமுகமானது.
- 1865 - ஜோன் பூத் என்பவனால் முதல் நாள் சுடப்பட்ட ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் இறந்தார். ஆன்ட்ரூ ஜோன்சன் அமெரிக்காவின் 17 ஆவது ஜனாதிபதியானார்.
- 1892 - ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனம் உருவாக்கப்பட்டது.
- **1912 - ஏப்ரல் 14, 1912 அன்று இரவு 11:40 மணிக்கு வட அட்லாண்ட்டிக் பெருங கடலில் பாறை ஒன்றுடன் மோதிய பிரித்தானியாவின் டைட்டானிக் பயணிகள் கப்பல் மூழ்கியதில் 1503 பேர் பலியாகினர்.**
- 1923 - இன்சுலின் முதன் முதலாக நீரிழிவு நோய்க்கு மருந்தாகப் பாவிக்கப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நாசிப் படைகளினால் கைப்பற்றப்பட்டிருந்த நோர்வேயின் நார்விக் நகர் மீது கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தின.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் 200 போர் விமானங்கள் வட அயர்லாந்தின் பெல் பாஸ்ட் நகர் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியில் நாசி களின் பேர்ஜேன்-பெல்சன் வதை முகாம் பிரித்தானியப் படையினரால் விடுவிக்கப்பட்டது.
- 1986 - லிபியா மீது ஐக்கிய அமெரிக்கா விமானத் தாக்குதலை நடத்தியது.
- 1989 - சீனாவில் தியனன்மென் சதுக்க ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.
- 1976 - தமிழ்நாட்டில் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1452 - லியனார்டோ டா வின்சி, இத்தாலிய ஓவியர் (இ. 1519)
- 1469 - குரு நானக் தேவ், சீக்கிய மதத்தைத் தோற்று வித்தவர் (இ. 1539)
- 1707 - லியோனார்டு ஆய்லர், சுவிட்சர்லாந்து நாட்டின் கணிதவியலாளர் (இ. 1783)
- 1874 - ஜொகான்னஸ் ஸ்டார்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ. 1957)
- 1896 - நிக்கொலாய் செமியோனொவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (இ. 1986)
- 1907 - நிக்கலாஸ் டின்பேர்ஜென், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1988)

### இறப்புகள்

- 1865 - ஆபிரகாம் லிங்கன், ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி (பி. 1809)
- 1980 - ஜீன்-போல் சார்ட்டெர், நோபல் பரிசினை ஏற்க மறுத்த பிரெஞ்சு மெய்யியலாளர் (பி. 1905)

### டைட்டானிக்



ஆர்.எம்.எஸ் டைட்டானிக் (RMS Titanic) என்பது ஒரு ஆடம்பர பயணிகள் கப்பல ஆகும். இது வட அயர்லாந்தில் பெல்பாஸ்ட் நகரில் உருவானது. 1912 இல் முதன் முதலாகச் சேவைக்கு விடப்பட்ட போது இதுவே உலகின் மிகப் பெரிய பயணிகள் நீராவிக் கப்பலாகும். டைட்டானிக் தனது முதற் பயணத்தின் போது ஏப்ரல் 14, 1912 இல் இரவு 11:40 மணிக்கு வட அட்லாண்ட்டிக் பெருங் கடலில் பனிப்பாறை ஒன்றுடன் மோதியது. மோதி 2 மணி 40 நிமிடங்களில் ஏப்ரல் 15, 1912 இல் முற்றாக மூழ்கியது.

டைட்டானிக் கடலில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 1503 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு அமைதிக்காலத்தில் நடந்த மிகப்பெரும் கடல் அழிவாகக் கருதப்பட்டது.

டைட்டானிக் கப்பல் அக்காலத்தில் மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பத்தைக் கொண்டு கட்டப்பட்டதாகவும் அது மூழ்கவே முடியாததெனவும் கருதப்பட்டது. இப்படியான ஒரு கப்பல் மூழ்கியது உலகெங்கும் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. கப்பலின் சேதமடைந்த பகுதிகளை செப்ரெம்பர் 1, 1985 இல் ரொபேர்ட் பலார்ட் தலைமையிலான ஆய்வாளர் குழு ஒன்று கண்டு பிடித்தது.

#### பேரழிவு

ஞாயிற்றுக்கிழமை, ஏப்ரல் 14 இல் வெப்பநிலை குறைந்து கிட்டத்தட்ட உறைநிலையை அடைந்தது. கடல் மிகவும் அமைதியாக இருந்தது. 1:45 மணிக்கு அமெரிக்கா என்ற கப்பலில் இருந்து டைட்டானிக்குக்கு வழியில் பனிப்பாறைகள் உள்ளதாக செய்தி அனுப்பப்பட்டது. ஆனாலும் இச்செய்தி டைட்டானிக்கை அடைய வில்லை. இரவு 11:40 மணிக்கு பெரும் பனிப்பாறை ஒன்றுடன் டைட்டானிக் மோதியது. கப்பல் முற்றாக நிறுத்தப்பட்டது. பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கப்பலில் இருந்து ஆபத்து சமிக்கை கள் பல திசைகளிலும் அனுப்பப்பட்டன. அண்மையில் இருந்த சில கப்பல்களுக்குச் செய்திகள் அனுப்பின. ஆனாலும் அவை எதுவும் டைட்டானிக்குக்கு அருகில் வருவதற்கு நேரம் போதவில்லை. சரியாக அதிகாலை 2:20 மணிக்கு கப்பல் முற்றாக மூழ்கியது. மொத்தம் இருந்த 2,223 பேரில், 706 பேர் மட்டுமே காபபாற்றப்பட்ட னர். 1503 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் கடலில் 28 °F (-2 °C) குளிர் தாங்காமையினால் உயிரிழந்தனர்.

# இராணுவ அதிகாரிகளை அணி திரட்டுகிறார் பசில்

(கொழும்பு)


**இராணுவ உயரதிகாரி கள் சிலரை இரகசியமாக சந்திக்க முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார். தமக்கு நெருக்கமான உயர் இராணுவ அதிகாரியொருவர் மற்றும் இராணுவத்தின் சில உயரதிகாரிகளுடன் பசில் ராஜபக்ஷ இரகசிய சந்திப்பை நடத்தவுள்ளார்.**

இதற்கான திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிரேஷ்ட உயர் இராணுவ அதிகாரி தொடர்ச்சியாக பசில் ராஜபக்ஷவுடன் இரகசிய தொடர்புகளைப் பேணி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவ அதிகாரி தமக்கு நெருக்கமான சில இராணுவ அதிகாரிகளுடன் பசிலுக்கு தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

விரைவில் பசில், இராணுவ உயர் அதிகாரிகள் சிலருடன் இரகசிய சந்திப்பு நடத்தவுள்ளமை பற்றிய விபரங்கள் கிடைக்கப் பெற் றுள்ளதாகவும் இது பற்றிய விபரங்கள் ஜனாதிபதி யிடம் தெரிவிக்கப்பட்டுள்ள தாகவும் கொழும்பு ஊடக மொன்று செய்தி வெளியிட் டுள்ளது.



## இளம் தாயும் மகளும் கடலில் மூழ்கி மரணம்

நாரம்மலயில் இருந்து சிலாபத்திற்கு சுற்றுலா சென்ற குழுவொன்றில் இருந்த இரு பெண்கள் கடல் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கடலில் நீராடச்சென்ற வேளை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், உயிரிழந்தவர்கள் நாரம்மல, தம்பகிரிகம பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுமி ஒருவரும், 26 வயதுடைய தாயொருவரும் என்று தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த இருவரும் தமது குடும்பத்தினருடன் சிலாபம் முன்னேஸ்வரம் தேவாலயத்திற்கு வந்திருந்த நிலையில் கடலில் நீராடச் சென்றுள்ளனர்.

அவர்கள் இருவருடைய உடல்களும் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் தற்போது சிலாபம் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ)

## வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு

மாதம்பை, ஊரலிய பிரதேசத்தில் வீடொன்றின் மீது நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவத்தால் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படாத போதிலும் வீட்டிற்கு முன்பக்கமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் துப்பாக்கிச் சூட்டு சத்தம்கேட்ட போது, அது பட்டாசு சத்தமாக இருக்கலாம்என்று எண்ணி அது தொடர்பில் தாம் பொருட்படுத்தவில்லை என்று வீட்டின் உரிமையாளர் கூறியுள்ளார்.

சம்பவம் இடம்பெறும் போது மூன்று பிள்ளைகள், மனைவி மற்றும் தந்தையும் வீட்டில் இருந்ததாகவும், நேற்று காலை வரை சம்பவம் தொர்டர்பாக அறிந்திருக்கவில்லை என்றும் அவர் பொலிஸ் நிலையத்தில் கூறியுள்ளார். இந்நிலையில் அந்தப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சந்தேகத்திற்கிடமான முறையில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருவர் சுற்றித்திரிந்தமை தொடர்பாக அறியக்கிடைத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ)

## லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

அவிசாவளை - கண்டி பிரதான வீதியில் பிங்தெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி பிங்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

அட்டால பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் கேகாலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (இ)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 692


சிந்துஜா




தர்சினி




மது



கீர்த்து




தயா




அச்சு




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தேசிய பாதுகாப்பும் தேச துரோகமும்


பயங்கரவாதத்தினை உலகத்திலிருந்து பூண்டோடு ஒழித்துக் கட்டி விடப்போவதாக பலமான அல்லது பலவீனமான எந்த நாட்டு தலைவர்களோதானும் தொடர்ச்சியான முறையில் என்னதான் ஆவேசக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தாலும் பயங்கரவாதிகளோவென்றால் தாம் அடிக்க வேண்டிய இடங்களில், அதுவும் அதிதீவிர உச்ச பாதுகாப்பிடங்களிலுங்கூட தாம் நினைத்தவாறு அடிமேல் அடி கொடுத்துக் கொண்டுதானிருக்கின்றனர்.

அண்மைக்காலங்களில் பரீஸ் பிறஸல்சஸ், துருக்கி, ரியூனிசியா மற்றும் கலிபோர்னியா போன்ற பயங்கரவாதத்திற்கெதிரான பலம்வாய்ந்த கோட்டையாகக் கருதப்படக் கூடிய இடங்களிலெல்லாம் இலக்கு தவறாமல் தாக்குதல் நடத்தும் தமது ஆற்றலை பயங்கரவாதிகள் தொடர்ந்தும் வெளிப்படுத்திக் கொண்டுதானிருக்கின்றனர்.

கடந்த வாரம் அலெக்சாண்டரியாவிலிருந்து கெய்ரோவிற்கு பறந்து கொண்டிருந்த எகிப்திய விமான சேவையைச் சேர்ந்த விமான்மொன்று இடைவானில் கடத்தப்பட்டதானது அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அது பயங்கரவாதியொருவரது செயற்பாடாக அல்லாமல் வெறும் முட்டாளான ஒருவரது செயற்பாடாகவே விபரிக்கப்பட்டது. எகிப்திய சர்வாதிகாரியான அப்டெல் பத்தா அல்சிஸ்வியுடைய ஊடுருவ முடியாத சிக்கல்நுட்பம் வாய்ந்த பாதுகாப்புத் தடைகளை தாண்டிச் சென்றுவிட ஒரு முட்டாளால் முடிந்துள்ளதாகவே தெரிகிறது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளிலும் லிபியா, மாலி மற்றும் நைஜீரியா போன்ற சில ஆபிரிக்க நாடுகளிலும் இடம் பெற்றுவரும் அச்சமூட்டும் பயங்கரவாத தாக்குதல்கள் மேற்கத்திய மேதாவிகள் மேலும் மேலும் பயங்கரவாதத்தின் சவால்களைச் சந்திக்கப்போவதைக் காட்டுகின்றன.

மேற்கத்திய நாடுகளில் பயங்கரவாதமென்பது



கருவில் உருவாகி வளர்ந்து கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்திலேயே இலங்கை நன்கு முதிர்ச்சி கண்டிருந்த பயங்கரவாதமொன்றினை எதிர்கொண்டு போராடி அதனை இராணுவ ரீதியில் தோற்கடித்துமுள்ளது. ஆனாலும் பயங்கரவாதமென்பது அந்த விதமாக முடிந்துவிடப் போவதுமில்லை. அது பயங்கரவாத சிந்தனைகளில் உருவாகி தூவப்பட்ட வித்துக்கள்– விதைகள் மற்றும் நச்சுப் பக்ரீறியா– கிருமிகள் வளர்ச்சி காண்பது போல் துரித வளர்ச்சி கண்டு பல்கிப் பெருகிக் கொண்டு போவதால் அவை கவனிக்கப்படாதுபோகில், அது மீண்டும் பெரும் பூதமாகவே உருவெடுத்துவிடும். ஆனாலும் ஒரு சமுதாயமென்பது நிலையான ஒரு தீமையின் ஆதிக்கத்திலேயே தொடர்ந்தும் கட்டுப்பட்டிருக்குமென்பதில்லை.

தற்போது பாதுகாப்பாக ஒரு வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த தற்கொலைத் தாக்குதல் அங்கியொன்றும் ஒரு தொகையிலான ஆயுதங்களும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதுடன் முன்னாள் 'LTTE' உறுப்பினரொருவர் கைது செய்யப்பட்டதும் சேர்ந்து, இலங்கை அரசியலில் பெரும் எச்சரிக்கை ஒலியையும் சர்ச்சைகளையும் எழுப்பியுள்ளது. இக்கண்டுபிடிப்புப் பற்றிய செய்தி பொதுவில் ஓர் நல்ல செய்தியாகவே இல்லையென்பதால் இதையிட்டு பெரும் அக்கறைப்பட வேண்டிய அவசியமுள்ளது. ஏனென்றால் இச் செய்தியானது ஒன்றுபட்ட மகிந்த சார்பு எதிரணியினர் மத்தியில் மகிழ்ச்சிகரமான ஒருவித எதிர்பார்ப்புகளுடன்கூடிய இன்னிசை போன்று அமைந்திருந்தாலும் முழு நாட்டிற்கும் மக்களுக்கும் ஓர் அபஸ்வர ஒலி போன்ற ஓர் துர்குறியாகவே தோன்றுவது போல் உள்ளது. அவர்கள் விரும்புவது போல் இது பயங்கரவாதத்தின் மீள் எழுச்சிக்கான ஒரு ஆயத்த நடவடிக்கையாக இருக்குமானால் புதிய அரசுக்கு இப்போது இருக்கும் நெருக்கடியான வேளையில் மேலும் நெருக்கடி கொடுக்கும் ஓர் ஆயுதமாகவே இதனை அவர்கள் பயன்படுத்துவார்கள் என்பது நிச்சயம்!

இத்தற்கொலை அங்கி கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து போரின்போது ஏற்கனவே மறைத்து வைத்திருக்கப்படக்கூடிய இவ்வித போர் உபகரணங்கள் போருக்குப் பின்னர் பொலிஸாராலும் பாதுகாப்புத் தரப்பினராலும் கண்டுபிடிக்கப்படுவது ஒரு விபத்துப் போன்ற வழக்கமான சம்பவமாக இருப்பதால் இவ்விடயம் தேசிய அச்சுறுத்தலாகிவிடாது என பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி ஊடகங்களுக்கு கூறியிருந்தார். இந்த கண்டுபிடிப்பினை குறிப்பிடத்தக்க சில அரசியல்வாதிகளும் ஊடகங்கள் மத்தியிலிருக்கும் ஒரு பிரிவினரும் பிரிவினைவாதிகளின் பயங்கரவாத மீள் எழுச்சிக்கான ஒரு அறிகுறி போன்றும் ஒரு தேசிய அச்சுறுத்தலாகவும் சித்தரித்துக் காட்ட முயற்சிப்பதையிட்டு அவர் மனம் வருந்தினார்.

'ஒன்றிணைந்த எதிர்க்கட்சி' எனப்படும்

சண்டே லீடர் பத் திரிகையில் "தேசிய பாதுகாப்பும் தேச துரோகமும்" எனும் தலைப்பில்வெளியான ஆசிரியர்தலையங்கத்தின்தமிழாக்கம்...



இந்த அரச எதிர்ப்பு அணியினர் வீழ்ச்சியடைந்த தமது பழைய கதாநாயகனாகிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையே மீண்டும் ஜனாதிபதி பதவியில் அமர்த்தும் முயற்சியாக நடைமுறை அரசின் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக கையில் கிடைக்கும் எந்தவித ஆயுதத்தையும் பிரயோகிக்கும் எதிர்பார்ப்புடன் காத்திருப்பதே அவர்களது பெரும் அரசியல் மூலோபாயமாக இருக்கிறது.

தமிழர்களுக்கு உரிமைகளை நியாயமான முறையில் வழங்க வேண்டுமென்ற அரசின் நிலைப்பாட்டுடன் பிந்திய போர் ஆயுத உபகரண கண்டுபிடிப்பு. விடயத்தை பயங்கரவாத மீள் எழுச்சி போன்று சித்தரித்து நிச்சயமற்ற பனிப்புகார் போன்ற தெளிவற்ற நிலையை உருவாக்கி அதனையே 'தமிழ் இனவாதம்' என்ற குண்டு போன்று பயன்படுத்தி அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைத் தகர்த்து அதன் ஸ்திரத்தன்மையை சீரழிப்பதே அவர்களது திட்டமாகும். இவ்விதமாகவே தனது 13 வயதில் 'எல்.ரி.ரி.ஈ.' போராளியாக இணைந்து செயற்பட்ட ஒருவராகக் கூறி கைது செய்யப்பட்ட தமிழர் ஒருவரது கைதையும் ஆயுதத் தொகுதி கைப்பற்றப்பட்ட விடயத்துடன் இணைத்து அதனையே மற்றுமொரு பயங்கரவாத புத்தெழுச்சியாக விஸ்வரூபப்படுத்தும் முயற்சியிலேயே அரச எதிர்ப்புப் பிரச்சார அணியினர் ஈடுபடுவதன் முக்கியத்துவம் நோக்கப்பட வேண்டியதேயாகும்!

நீடித்து நிலைக்கக் கூடிய சமாதானத்தினை நாட்டில் ஏற்படுத்துவதற்காக தமிழ் மற்றும் சிங்கள இனங்களுக்கிடையில் இன- நல்லிணக்கப்பாட்டை மீண்டும் உருவாக்கும் முயற்சியிலேயே சிறிசேன– விக்ரமசிங்க அரசாங்கம் முழு முயற்சியில் ஈடுபட்டுள்ளது. உள்ளக இனங்களுக்கிடையிலான பரஸ்பர ஐக்கியத்திலே கட்டியெழுப்பப்படும் ஒன்றுபட்ட நல்லாட்சியே இந்த புதிய அரசின் உன்னதமான கொள்கையாக உள்ளது. மக்களின் நல்லெண்ணத்துடன் இது நிறைவேறுமானால் தமிழர் எதிர்ப்பு இனவாதக் கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கி வளர்க்கப்பட்டுவரும் தற்போதைய பயங்கரவாத மீள் எழுச்சி என்ற தெளிவற்ற பனிப்புகார் மூட்டும் ராஜபக்ஷ கூட்டத்தின் மூலோபாயம் கலைந்து அரச எதிர்ப்பு அணியினருக்கு விழப் போவது மரண அடியாக வேதானிருக்கும்!

20 ஆம் பக்கம் பார்க்க...



துர்முகி வருடப் பிறப்பு விசேட வழிபாடுகள் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்று இடம்பெற்ற போது.... (படங்கள்: உ.சாளின்)

# இராணுவ அட்டூழியங்கள் நிறுத்தப்படல் வேண்டும்!

## வட மாகாண சபை உறுப்பினர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் தற்போது நடைபெறும் இராணுவத்தின் காணி அபகரிப்புக்கள் மற்றும் அட்டூழியங்களை நிறுத்தா விட்டால் தாம் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டி வரும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.**

இது தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில்,கடந்த ஆட்சியில் சிவில் நிர்வாகத்தில் இராணுவ தலையீடுகள் இருந்ததை போன்றே தற்போதும் காட் டாட்சி தொடர்கின்றது.

இதனை தான் முல்லைத்தீவில் கிராம சேவகர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் காட்டுகின்றது. மகிந்த ஆட்சியில் மீன்பிடி அமைச்சராக இருந்த ராஜித சேனாரட்ன முல்லைத்தீவு மாவட்டத்தில் 52 சிங்கள மீனவர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டது என்றும் ஏனையோருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என பகிரங்கமாக கூறியிருந்தார்.

அதேவேளை, சட்டவிரோதமாக முல்லைத்தீவில் இருக்கும் தென்னிலங்கை மீனவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என உத்தரவிட்டும் அது நடைமுறைப்படுத்தப் படவில்லை. இதேபோன்று



நல்லாட்சி அரசின் மீன்பிடி அமைச்சர் உத்தரவிட்டிருந்தும் அதுவும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. அமைச்சரின் உத்தரவுகளே நடைமுறைப்படுத்தப்படாத நிலை என்றால், இராணுவ ஆட்சி நடப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி இராணுவம் இங்கு நிலை கொண்டுள்ளது. வடக்கின் பொருளாதாரம் மற்றும் மதத்தினை சிதைப்பதற்கான நோக்கத்திற்காகவே இராணுவம் நிலை நிறுத்தப்பட் டுள்ளது. தேசிய பாதுகாப்பு என்றால் என்ன? இலங்கை மீது இன்னொரு நாடு படை யெடுத்து வரப்போகின்றதா?

பின்பு என்ன தேசிய பாதுகாப்பு தேசிய பாதுகாப்பிற்கு பிழையான அர்த்தம் கற்பிக்கப்படுகின்றது. தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி நிலை கொள்ளச் செய்யப் படுகின்ற பாதுகாப்புத் தரப்பினர் இங்குள்ள எமது மக்களது அடையாளங்களை சிதைப்பதற்கும் எமது மக்கள் மீது மீண்டும் ஒரு வழிந்த யுத்தத்தை தொடர்வதற்குமே முயற்சி செய்து வருகின்றனர்.

நல்லிணக்கம் என்று கூறிக் கொண்டு இந்த காலத்தை தமிழ் மக்களது பண்பாட்டினை அளிக்கும் காலமாக சிங்கள பேரினவாதம் மேற் கொண்டு வருகின்றது. இதனை நாங்கள் வன்மையாக எதிர்க்கின்றோம். இது தொடர்பில் வடக்கு மாகாண சபையும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# தமிழருக்கான அதிகாரங்கள் தீர்வுத்திட்டத்தில் மேலும் அதிகரிக்கப்படல் வேண்டும் - அனந்தி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட தீர்வு திட்டத்தில் தமிழர்கள் ஈழத் தமிழர்கள் என அடையாளப் படுத்தப்பட வேண்டும் எனவும், அந்த தீர்வு திட்ட முன் வரைபில் மேலும் சில அதிகாரங்களை தமிழ் மக்கள் கோர வேண்டுமென வலியுறுத்தியும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனால் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கடிதம் ஒன்று கையளிக்கப் பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட தீர்வு திட்டம் மீதான விவாதம் கடந்த அமர்வின் போது நடைபெறவில்லை.

குறித்த தீர்வு திட்டத்தினை விவாதிக்கவென விசேடமாக மாகாண சபை கூடிய போதிலும் திடீரென அது கைவிடப்பட்டு வேறு விடயங்கள் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. அரசினால் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான கருத்துக்கள் பெறப் பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் வடக்கு மாகாண சபையும், புதிய அரசமைப்புக்கான கருத்துக்களை முன்வைப்பதற்காக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது.

இந்தக் குழுவினர் மூன்று உப பிரிவுகளாகப் பிரிந்து அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வரலாறு சார்ந்த விடயம், அரசியல் ரீதியான விடயம், அதிகாரப் பகிர்வு தொடர்பிலான விடயம் என்று மூன்று குழுக்கள் இதற்காக நியமிக் கப்பட்டிருந்தது. மூன்று குழுக் களும் தமது வரைபுகளை முன்வைத்து முதலமைச்சர் தலைமையில் கலந்துரையாடல் நடத்தியிருந்தது.

இதன்போது பல்வேறு வாதப்-பிரதிவாதங்கள் நடைபெற்றுள்ளன. வழங்கக்கூடிய அதிகாரப் பகிர்வையே கோர வேண்டும் என்று ஒரு தரப்பினர் இதன் போது கருத்துத் தெரிவித்து வந்தனர்.

13 ஆவது திருத்தத்தை தாண்டிய அதேவேளை சமஷ்டியை ஒத்த வகையில் தீர்வுத் திட்டம் இருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மாநில சுயாட்சியை மையமாக வைத்தே அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மூன்று குழுக்களினது வரைபுகளும் ஒன்றிணைக்கப்பட்டு புதிய அரசியல் தீர்வு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்வு திட்டம் வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வின் போது சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

இதன் மீதான விவாதம் நேற்று முன்தினம் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட போதிலும் நேற்று முன்தினம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அடுத்த அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை எதிர்வரும் 30 ஆம் திகதி எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரு



மான இரா.சம்பந்தன் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இதன் போது வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட தீர்வு திட்டம் அவரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்நிலையிலேயே குறித்த தீர்வு திட்டத்தில் தமக்கு உடன்பாடில்லை என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர், இது தொடர்பில் தமது அதிருப்திகளையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஆனந்தி சசிதரனால் ஐந்து பக்கங்கள் கொண்ட சிபாரிசுகள் முதலமைச்சரிடம் கையளிக் கப்பட்டுள்ளது. (இ-4)

# செய்தித்துளிகள்

## திடீர் சுற்றிவளைப்பு 32 ஹோட்டல்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

மக்கள் பயன்பாட்டுக்குப் பொருத்தமில்லாத உணவுகளை விநியோகித்ததாக கண்டறியப்பட்ட அலவ்வை மற்றும் மாறுவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள 32 ஹோட்டல்களுக்கு எதிராக சுகாதார பரிசோதனை அதிகாரிகள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

மஹவெவ மற்றும் மாறவில ஆகிய பிரதேசங்களில் உள்ள 135 ஹோட்டல்கள் பரிசோதனைக்குட்படுத்தப் பட்டதாக அவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு வழக்குத் தொடரப்பட்ட ஹோட்டல்களுள் நட்சத்திர சுற்றுலா ஹோட்டல்கள் ஐந்தும் காணப்படுவதாக திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட சுகாதாரப் பரிசோதனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ)

## பட்டாசு விபத்துக்களின் எண்ணிக்கை குறைவு

இம்முறை தமிழ்,சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் பட்டாசுகளினால் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

பாரியளவில் விபத்துக்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை அறிவித்துள்ளது.நேற்று முன்தினம் இரவு புத்தாண்டு மலர்ந்தது முதல் பட்டாசு வெடித்து விபத்து ஏற்பட்ட இரண்டு சம்பவங்களே கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பதிவாகியுள்ளன. (இ-5)

## வாகன விபத்தில் 11 பேர் காயம்

அவிசாவளை ரண்வல பகுதியில நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கி பயணித்து கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றும் அதற்கு எதிர் திசையில் வந்துள்ள கார் ஒன்றும் மோதுண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.இதன்போது படு காயமடைந்துள்ள காரின் சாரதி அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

## குடிநீர் பற்றாக்குறையால் பொதுமக்கள் கடும் அவதி

தென்மாகாணத்தில் பல பகுதிகளில் பொதுமக்கள் குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்னர்.

காலி, அம்பாந்தோட்டை, கதிர்காமம், திஸ்ஸமகாராம, தனமல்வில, செல்லக்கதிர்காமம் ஆகிய பகுதிகளில் பாரிய குடிநீர் பற்றாக்குறையால் புத்தாண்டு தினத்திலும் தமது அன்றாட பணிகளை நிறைவு செய்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (இ)

## பிராச்சியத்த அபிஷேகம் இன்று

யாழ்.கட்டைப்பிராய் ஸ்ரீமுத்துமாரி அம்மன் வெளி வீதி உலா வருடப்பிறப்பை முன்னிட்டு மிகச் சிறப்பாக நேற்று முன்தினம் நடைபெற்றது. இன்று மகா பிராயச்சித்த அபிஷேகமும் நண்பகல் அன்னதானமும் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. (இ-136)

## யால வனத்துக்குள் செல்வதற்கு சபாரி ஜீப் 18இற்கு பிரவேச தடை

யால சரணாலயத்துக்குள் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும் 18 சபாரி ஜீப் வண்டிகளுக்கு இரு வாரங்களுக்கு பிரவேச தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஜீப் வண்டிகள் சரணாலயத்தின் சட்ட திட்டங்களை மீறியதனால் இந்த தடை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது.சரணாலய பொறுப்பாளர்களின் ஆலோசனையின் பேரில் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# தமிழ் சினிமா வரலாறு

138

## எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த “ராஜகுமாரி” அமோக வெற்றி

...ஆனால் ஏ.எஸ்.ஏ.சாமி ஸ்ரீமுருகன் படத்தில் சிவனாக நடித்த எம்.ஜி.ராமச்சந்திரனும் பார்வதியாக நடித்த கே.மாலதியும் திறமையானவர்கள். அவர்களையே கதாநாயகன்- கதாநாயகியாக நடிக்க வைத்து ராஜகு மாரியை குறைந்த செலவில் தயாரிக்கலாம் என்று கூறினார்.

ஜுபிடர் அதிபர்களுக்கு இது ஆச்சரியம் அளித்தது. நீங்கள் டைரக்ட் செய்யப்போகும் முதல் படம் இது. சின்னப்பாவும் ராஜகுமாரியும் நடித்தால் வெற்றி நிச்சயம்.

நாங்களே பெரிய நடிகர்- நடிகைகளைப் போடலாம் என்கிற போது நீங்கள் ராமச்சந்திரனையும் மாலதியையும் போடலாம் என்கிறீர்களே! என்று கூறினார்கள்.

இல்லை எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ராமச்சந்திரனையும் மாலதியையும் வைத்தே இதைப் பெரிய வெற்றிப் படமாக்க முடியும் என்று உறுதியாகச் சொன்னார் ஏ.எஸ்ஏ.சாமி.

உங்களுக்கு இவ்வளவு நம்பிக்கை இருக்கும்போது நாங்கள் மறுப்புச் சொல்லவில்லை. உங்கள் விருப்பப்படி செய்யுங்கள் என்றார்கள் ஜுபிடர் சோமுவும் மொகிதீனும்.

### கருணாநிதி

ஜுபிடர் நிறுவனம் ஏற்கனவே எம்.கே.தியாகராஜபாகவதரை வைத்து உதயணன் என்ற படத்தை தயாரிப்பதாக இருந்தது. இதில் பாகவதரும் வசுந்துராதேவியும் ஜோடியாக நடிக்க இருந்தனர். லட்சுமிகாந்தன் வழக்கில் பாவதர் சிறை செல்ல நேர்ந்ததால் அந்தப் படம் தயாரிக்கப்படவில்லை.

இந்தப் படத்துக்கு இசையமைப்பதற்காக சிதம்பரம் ஜெயராமன் ஜுபிடருக்கு வந்தார். அப்போது ஏ.எஸ்.ஏ.சாமிக்கும் அவருக்கும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. என் மைத்துனர் மு.கருணாநிதி திராவிடக் கழகத்தில் இருக்கிறார். பெரியாரின் குடியரசு பத்திரிகையில் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார். எழுத்தாற்றல் மிக்கவர். வசனம் எழுதுவதற்கு அவருக்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று சாமியிடம் சிதம்பரம் ஜெயராமன் கேட்டுக்கொண்டார்.



அதை ஞாபகத்தில் வைத்திருந்த ஏ.எஸ்.ஏ.சாமி வசனம் எழுத வருமாறு கருணாநிதிக்கு தந்தி அனுப்பினார். தந்தியைப் பெரியாரிடம் காட்டினார் கருணாநிதி. இது நல்ல வாய்ப்பு. போய் வாருங்கள் என்று பெரியார் அனுப்பி வைத்தார்.

ஈரோட்டிலிருந்து கோவைக்குச் சென்றார் கருணாநிதி. ஏற்கனவே நாடகங்கள் எழுதி அனுபவப்பட்ட அவர் ஏ.எஸ்.ஏ.சாமி சொன்ன காட்சிகளுக்கெல்லாம் வசனம் எழுதிக் கொடுத்தார். அவருடைய திறமையைப் புரிந்து கொண்ட ஏ.எஸ்.ஏ.சாமி முழு வசனத்தையும் எழுதித் தரும்படி சொன்னார். முழுவசனத்தையும் எழுதிக் கொடுத்தார் கருணாநிதி.

### நண்பர்கள்

இந்தக்காலகட்டத்தில் எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. விரைவிலேயே நெருங்கிய நண்பர்களானார்கள். அப்போது எம்.ஜி.ஆர். காங்கிரஸ் அனுதாபியாகவும் ஆத்திகராகவும் இருந்தார். அவர் கழுத்தில் ருத்திராட்ச மாலை போட்டிருப்பார்.

(தொடரும்)

# தேசிய பாதுகாப்பும்....

18 ஆம் பக்கக் கட்டுரையின் தொடர்ச்சி...

...கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களிலும் இணைந்த எதிரணியினரின் தோல்வி கண்ட அப்போதைய மூலோபாயமும் இதுவேயாகும். சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களதும் ஆதரவுடன் ராஜபக்ஷ ஆட்சியினை தோற்கடித்திருந்த அரசு, தற்போதும் எழுப்பப் பட்டுவரும் ‘தமிழ் பயங்கரவாத மீள் எழுச்சி’ என்ற தற்போதைய அச்சுறுத்தலையும் தனக்கே உரித்தான நிதானத்துடன் கூடிய அவசரமற்ற மென் போக்கு உத்திகளுடனேயே கையாண்டு வருவது குறிப்பிடத்தக்க சிலருக்கு ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருப்பது வெளிப்படையானதே. ஆயுதத் தொகுதி கைப்பற்றப்பட்டது போன்ற அது சம்பந்தப்பட்ட ஏனைய விடயங்கள் போன்ற அவர்களது தூண்டிலில் மாட்டிக் கொள்வதைத் தவிர்க்கும் புதிய அரசின் நிதானமான போக்கே எதிரணியினர் விருப்பத்திற்கு மாறாக அவர்கள் மத்தியிலுக்கும் கல்விமானாகிய பேராசிரியர் பீரிஸ் மற்றும் புரளி கிளப்பி கும்பல் திரட்டும் வீரவன்ச போன்றோருக்கு அதிருப்தியளிப்பதாயுள்ளது. இவர்களது சொற்பிரயோகங்கள் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாயிருப்பதால் பாதுகாப்புத் தரப்பிலும் பலவித உறுதிப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளது. தினமும் 24 மணி நேரமும் பொலிஸாரும் படையினரும் எச்சரிக்கை விழிப்பு நிலையிலேயே வைக்கப்பட்டு தகவல்கள் திரட்டப்படுவதாகவும் அதிரடித் தேடுதல்கள் இடம்பெறுவதுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் கைது செய்யப் படுபவர் அவசியப்படும் போது நீதி விசாரணைக் குட்படுத்தப்படுவர் என்றும் பல்வேறு உறுதிப்பாடுகள் பாதுகாப்புச் செயலரால் நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டும் வருகிறது.

மக்கள் மத்தியில் சந்தேகத்திற்கிடமான சில கேள்விகளும் எழுப்பப் படுவதாகவேயிருக்கிறது. தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் இராணுவத்தை குவித்து மக்களது சகஜ வாழ்வை சீர்குலைக்கும் விதத்தில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தும் படியாக இணைந்த எதிரணியினர் விரும்புகின்றனரா மக்களை குற்றவாளிகளாகப் பார்க்கும்படியா தூண்டுகிறார்கள்?

இந்தவிதமான நிலைப்பாடுகளெல்லாம் புதிய நல்லாட்சியின் சிந்தனைப் போக்கிற்கு மாறானதாகவே இருப்பதுடன் தமிழ் அரசியல் வாதிகளைப் பொறுத்த மட்டில் தெற்கிலிருக்கும் இவர்கள் போன்றதொரு தீவிர இணைப்போக்கினருக்கு மாறான விதண்டாவாத இழுபறிகளுக்குப் போகாத அளவிற்கு அறிவார்ந்த விதமான ஒரு மீள் இணக்கப்பாட்டிற்குள் வந்தவர்களாகவே அவர்கள் இருந்தனர்.

பயங்கரவாத எழுச்சியொன்றினை முறியடிப்பதென்பது இலகுவான ஒரு விடயமல்ல என்பதை இது சம்பந்தமான சமகால சர்வதேச நிகழ்வுகள் மட்டில் தொடர்ச்சியான அனுபவ அறிவைக் கொண்டிருக்கக்கூடிய வீரவன்ச போன்றவர்கள் உணர்ந்தவர்களாகவே இருக்க வேண்டும் எனலாம்.

உண்மையில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கெதிராக தோல்வியில் முடிவடைந்த இருவன்முறைக் கிளர்ச்சிகளை நடத்திய ஒரு அமைப்பில் இருந்தவரென்ற ரீதியில் ஒரு அனுபவ சாட்சியாயிருக்கும் வீரவன்சவினது தனிப்பட்ட அனுபவமே இதற்கான பதிலையும் கொண்டுள்ளது.

இந்த விதமான ஜனாநாயக நல்லாட்சி அரசுகளின் சகிப்புத் தன்மையுடன் கூடிய மீள் இணக்கப்பாட்டுக் கொள்கைகளே வீரவன்ச போன்றோரை அவர்களது பழைய நிலைப்பாடுகளிலிருந்து வெளிவர உதவியிருந்தது.

ஆனாலும் இவர்கள் வெறும் வீரவசன கர்த்தாக்களாக மட்டும் உருவெடுத்தி ருப்பதால் உண்மையான தேசிய பாதுகாப்பை விடுத்து அதற்குப் பதிலாக வெறும் கட்சி அரசியல் ஆதாயத்திற்கு மட்டுமான அவர்களது தீவிர செயற்பாடென்பது இறுதியில் மோசமானதொரு தேசத்துரோகத்திற்கு இட்டுச் செல்வதாகவேயிருக்கும்!

-தமிழில். யோகர்-

வழக்கம் என்பது முதலில் ஒட்டடை;
பிறகு இரும்புச் சங்கிலி.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சுற்றாடல் சுத்தம் யார் பொறுப்பில்?

டெங்கு நோயின் அபாயம் எங்களை துரத்திக் கொண்டே இருக்கிறது. இத்தகையதோர் மோசமான சூழ்நிலையில் டெங்குக் கட்டுப்பாட்டில் எவ்வளவுதான் நடவடிக்கை எடுத்தாலும் டெங்கின் அபாயம் ஏதோ ஒரு வகையில் பீறிக் கொள்வதைக் காணமுடியும்.

டெங்குக் காய்ச்சல் எதனால் ஏற்படுகிறது? டெங்கு நுளம்பு பெருகுகின்ற இடங்கள் எவை? இவை போன்ற கேள்விகளுக்கு சிறுகுழந்தைகள் கூட பதில் அளிக்கும் அளவில் சுகாதாரக் கல்வி சென்றடைந்துள்ளது.

டெங்கு தொடர்பிலான அறிவு தாராளமாக இருக்கின்ற போதிலும் மக்களின் மனப்பாங்கு என்பது இன்னமும் மாற்றமுறாமல் இருப்பதன் காரணமாகவே டெங்குக் காய்ச்சலை இதுவரை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியவில்லை. இதற்கு மேலாக மக்கள் தங்கள் வீட்டுக் கழிவுகள், குப்பை கூழங்களை வீதிகளில் வீசி விடுகின்ற பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். இதனால் வீதி எங்கும் கழிவுப் பொட்டலங்கள் காணப்படுவதுடன் தெரு நாய்களும் கால்நடைகளும் அவற்றை துவம்சம் செய்து விட எங்கள் சுற்றுச்சூழல் என்பது நரகமாகி விடுகிறது.

தமது வீட்டுக் குப்பைகளை வீதிகளில் கொட்டுவது எவ்வளவு அபத்தமானது என்பதை தெரிந்திருந்தும் பொறுப்பற்ற முறையில் ஒரு பகுதி மக்கள் நடந்து கொள்வது எந்த வகையிலும் நியாயமாகாது.

வீதிகளில் குப்பைகளைக் கொட்டுவது எதற்காக என்ற ஆய்வை மேற்கொள்ளும் போது, ஐயா! இங்கே குப்பை கொட்டாதீர்கள் என்ற விளம்பரப் பலகைகளை நாட்டுபவர்கள் குப்பைகளை எங்கே கொட்டுவது என்பதையும் அறியத்தர வேண்டுமல்லவா?

ஏன் அதனை சம்பந்தப்பட்டவர்கள் செய்யவில்லை என்ற கேள்வி பதிலுக்கு எழுப்பப்படுகிறது. உண்மையில் வடபுலத்தில் இன்னமும் கழிவகற்றலுக்கான முகாமைத்துவக் கட்டமைப்பு தலை எடுக்கவில்லை என்பதை சொல்லித்தானாக வேண்டும்.

21ஆம் நூற்றாண்டிலும் குப்பைகள் அகற்றப்படவில்லை என்று ஊடகங்களில் செய்தி பிரசுரிக்கும் அளவிலேயே நமது நிலை இருப்பது மிகப்பெரும் துரதிஷ்டவசமானது.

குப்பைகளை அகற்றுவதற்காக ஒரு சீரான வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படவேண்டும். வீட்டு வாசலுக்கு முன்பாக குப்பைகளை வையுங்கள். அவை வாகனங்களில் எடுக்கப்படும் என்ற அறிவித்தல் கட்டாக்காலி நாய்களினால் படுதோல்வி கண்டு விட்டது.

எனவே பொருத்தமான கழிவகற்றல் செயற்றிட்டம் உடனடியாக அமுலுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இது தவிர குப்பைகளை இங்கு கொட்டாதீர்கள் என்பதற்குப் பதிலாக இவ்விடத்தில் குப்பைகளை கொட்டுங்கள் என்ற அறிவிப்புகளை முன்வையுங்கள். அதற்கான இடத்தைத் தெரிவு செய்யுங்கள். இது விடயத்தில் உள்ளூராட்சி அமைப்புக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

குப்பைகள் அதிகமாக சேருகின்ற இடங்களில் ரைக்டர் பெட்டிகளை நிறுத்தி அவற்றில் குப்பைகளை கொட்ட வைப்பது அவற்றை சுலபமாக அகற்றுவதற்கு உதவியாக இருக்கும்.

இதேபோல் பொருத்தமான முறைமைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

## முழுநாள் பயிற்சிப்பட்டறை

மனித மாண்பு மிளிரச் செய்தல் என்னும் தலைப்பில் பயிற்றுவிப் பாளருக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை 22ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கியூடெக்ஸ் கரித்தாஸ் நிறுவன மண்டபத்தில் அருட்தந்தை யூஜின் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் கிராம மட்டத்தில் தலைமைத்துவத்தை வழங்கும் பயிற்று விப்பாளர்கள் கலந்து கொள்ளும் மேற்படிப் பயிற்சிப்பட்டறைக்கு வளவாளர்களாக எழுத்தாளர் கள்கே.ஜோசப் பாலா, பாஸ்கரன் ஆகி யோர் கலந்து கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. (இ-51)

## சித்திரை புதுவருட விழா

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் சரவணன் அறக்கட்டளையும் இணைந்து நடத்தும் சித்திரைப்புதுவருட விழா நாளை 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இவ்விழாவிற்கு வலி.தென் மேற்கு பிரதேச சபையின் இளைஞர் கழக சம்மேளனத்தின் பிரதேச சபையின் தலைவர் பே.சுபாகர் தலைமை தாங்கவுள்ளார்.

மேலும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா சிறப்பு விருந்தினராகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

## கொடுப்பனவுகள் வழங்கல்

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 70 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவும் மாற்றுவலு உடையோருக்கான கொடுப்பனவு 3 ஆயிரம் ரூபாயும் 11ஆம் திகதியிலிருந்து வழங்கப்பட்டு வருவதாக உதவிப் பிரதேச செயலர் எஸ்.ராஜீவ் அறிவித்துள்ளார். ஸ்ரீ(இ-60)




### அனைவருக்கும் தொண்டனாக இரு

❖ சர்வேஸ்வரனுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். ஆனால், மூடர்களோ ஞானத்தையும் போதனையையும் வெறுத்து ஒதுக்குவார்கள்.

❖ கடவுள் தாம் நேசிக்கிறவனைத் தண்டிக்கிறார். தம் மகனாக ஏற்றுக்கொள்ளும் எவனையும் பிரம்பால் அடிக்கிறார்.

❖ கீல் முனையில் கதவு ஆடுகிறது. சோம்பேறி படுக்கையில் ஆடிக் கொண்டிருக்கிறான்.

❖ ஒவ்வொரு மனிதனும் தன் மோகங்களால் இழுக்கப்பட்டு மருளும்போதே சோதனைகளுக்கு ஆளாகிறான்.

❖ சோம்பேறியே! எறும்பைக் கவனி. அதன் வழிமுறைகளைப் பின்பற்றி அறிவு பெறு. அதற்கு வழிகாட்டி இல்லை. தலைவனும் இல்லை. அதிகாரியும் இல்லை. கோடைகால ஆகாரத்திற்கு அறுவடை காலத்திலே தானியத்தைச் சேகரித்து வைக்கிறது.

❖ ஆசைச் சோதனையைச் சகிக்கிற மனிதன் பாக்கியவான். ஏனெனில் சோதனை முடிந்த பின் வாழ்க்கையின் கிரீடத்தைப் பெறுவான்.

❖ எவனாவது முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லோருக்கும் கடைசியானவனாய், எவருக்கும் தொண்டனாய் இருப்பானாக.

## ஜப்பானிய கடற்படையுடன் இணைந்து இலங்கை படையினர் கூட்டுப் பயிற்சி

(கொழும்பு)

தேடுதல் மற்றும் மீட்பு ஒத்திகை என்ற பெயரில் ஜப்பானிய கடற்படையுடன் இணைந்து இலங்கையின் கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல்படை ஆகியன அடுத்த மாதம் கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளன.

ஜப்பானியக் கடற்படையின் போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகம் செல்லும்போது மேற்கொள்ளப்படும் கூட்டுப் பயிற்சிகள் மூலம் இவ்விரு நாட்டு கடற்படைகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்பேற்றுள்ள நிலையிலேயே இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், அடுத்த மாதம் 10ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்பதற்காக ஜப்பானிய கடற்படையின் இரண்டு கடல் கண்காணிப்பு விமானங்கள் இலங்கை வரவுள்ளன.

ஜப்பானியக் கடற்படைப் போர்க்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு தற்போது தொடர்ச்சியாக வந்து செல்லும நிலையில், சுசுனாமி மற்றும் மகிநாமி ஆகிய இரண்டு ஜப்பானியப் போர்க்கப்பல்கள் கடந்த திங்கட்கிழமை கொழும்பு சென்றிருந்தன.

இதனிடையில் தீவிரவாத முறியடிப்பு விவகாரத்தில் இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது தொடர்பில் ஜப்பானின் தீவிரவாத முறியடிப்பு புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் அகிரா சுகியாமா, படைத்துறைச் செயலாளர் கருணாசேன ஹெற்றியாராச்சியை அண்மையில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(செ-12)

## கிரேன் விழுந்ததில் சீனாவில் 18பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் கட்டுமானப் பணி நடைபெற்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த 80 தொன் எடை கொண்ட கிரேன் விழுந்ததில் 18 பேர் பலியாகினர்.

சீனாவின் குவாங்டாங் மாகாணம் டங்கன் நகரில் உள்ள ஒரு தொழிற்சாலையில் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. இதற்காக மிகப்பெரிய கிரேன் அமைக்கப்பட்டிருந்தது. நேற்று அப்பகுதியில் இடியுடன் கூடிய மழை பெய்தது. இதனால், பணியில் ஈடுபட்டிருந்த 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கு கண்டெய்னர்களால் உருவாக்கப்பட்டிருந்த தற்காலிக கட்டடத்திற்குள் சென்றனர்.

அப்போது, 80 தொன் கொண்ட கிரேன் திடீரென சரிந்து, தொழிலாளர்கள் இருந்த கட்டடத்தின் மீது விழுந்தது. இதனால் தொழிலாளர்கள் அலறியடித்துக்கொண்டு அந்த கட்டடத்தை விட்டு வெளியேறினர்.

எனினும், இடிபாடுகளில் சிக்கி 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழ ந்தனர். மேலும் 18 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து விசாரணை நடத்துவதற்காக நகராட்சி தனிக்குழுவை அமைத்துள்ளது. (இ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** மயிலங்காடு, குப்பிளான் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** டொன்பொஸ்கோ, வன்னி விளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்ல விளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக் குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், இரணைமடு, திருவையாறு, கிருஸ்ணபுரம், அம்பாள்குளம், பாரதிபுரம், மலையாளபுரம், விநாயகபுரம், விவேகானந்த நகர், கிளிநொச்சி இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரட், 66ம் இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நீ என்ன அறிவாய்?

இன்று நாம் எதைப் பற்றிப் பேசுவோம்?

உங்களுக்குத் தெரியாத விடயம் பற்றிப் பேசுவதில் அர்த்தமென்ன? உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த விடயம் பற்றிப் பேசுவதிலும் அர்த்தமில்லை.. தெரியாத விடயம் பற்றிப் பேசுவதிலும் அர்த்தமில்லை (சிரிப்பு)

ஸ்டெஃபெனோ: உங்களுக்குத் தெரியாத,ஆனால் தெரியும் என்று நீங்கள் சிரிக்கின்ற விடயம் பற்றி என்ன சொல்வது?

ஸ்ரீஸ்ரீ:நாம் நமக்குத் தெரியாத ஆனால் தெரியும் என்று நினைக்கின்ற விடயத்தைப் பற்றிப் பேசலாம். அல்லது நமக்குத் தெரிந்த ஆனால் நமக்குத் தெரியாது என்று நினைக்கின்ற விடயம் பற்றியும் பேசலாம். (சிரிப்பு)

கற்பதற்கு முடிவு என்பதே இல்லை. ஆனால் கல்லாமல் இருப்பதற்கு ஒரு முடிவு உள்ளது. அது எப்போது என்றால் நீங்கள் உங்களை முழு வெற்றிடமாக (காலியாக) ஆக்கிக் கொள்ளும்போது

புதிர்:விலைமதிக்கமுடியாத ஏதோ ஒன்றை எங்கேயோ இழந்து அதை வேறெங்கேயோ கண்டெடுக்கிறீர்கள். அது என்ன?

# திக்கம் இளைஞர்கழக காற்பந்தாட்டம் அடுத்த சுற்றில் சென்.பீற்றர்ஸ், நியூட்டன்

(யாழ்ப்பாணம்)

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் காற்பந்தாட்டத் தொடரில் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

மேற்படி காற்பந்தாட்டம் திக்கம் இளைஞர் வி.கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும், நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆரம்பம் முதல் இரு அணிகளுக்கும் வாய்ப்புக்கள் கிடைத்த போதிலும், எவையும் கோலாக மாற்றம் பெறவில்லை.

ஆனாலும் 17 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கச்சிதமாகப் பயன்படுத்தி தமது அணிக்கான முதல் கோலைப் பெற்றுக் கொடுத்தார் சென். பீற்றர்ஸ் அணியின் முன்கள வீரர் நீதன்.

இதுவே முதல் பாதியில் பெறப்பட்ட ஒரே கோலுமாக அமைந்தது.

இரண்டாம் பாதியின் முதல் 5 நிமிடங்கள் முடிவதற்குள் கிறேசியன் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவு செய்ய சென்.பீற்றர்ஸ் அணியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது.

இருப்பினும் விடாத போராட்டத்தை வெளிப்படுத்தியது நவஜீவன்ஸ். அந்த அணியின் பொபிநாதன், உசானந் முறையே 32 ஆவது, 40 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவு செய்தனர். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் முடிவடைய முடிவில் 3:2 என்று வெற்றி பெற்றது நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகமும் மோதின. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் ஆட்டம் முடிவுக்கு வந்தது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றி தீர்மானிக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

சமநிலைத் தவிர்ப்பு உதையில் 4:3 என்ற கோல் கணக்கில் சமரபாகு நியூட்டன் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (க)
















தெல்லிப்பழை பிரதேச செயலக மட்ட கழகங்களுக்கிடையிலான 2016ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இப்போட்டியில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் 68 புள்ளிகளை பெற்று முதலிடத்தினை பெற்று சம்பியனாகியது. மேற்படி நிகழ்வினை படங்களில் காணலாம்.

விளையாட்டுச் செய்திகள்

## யாழின் கில்லாடி யார் கரணவாய் வி.க.வெற்றி

புற்றளை மகா வித்தியாலய நூற்றாண்டை முன்னிட்டு யாழின் கில்லாடி யார் என்னும் மென்பந்து துடுப்பாட்ட போட்டி ஒன்றை புற்றளை இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்துகின்றது.

குறித்த போட்டிகள் மாவில் மைதானத்தில் இடம் பெறுகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் கரணவாய் விளையாட்டு க்கழகம் (97/5) தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தை (43/7) என்ற ரீதியில் வெற்றி கொண்டது.

ஆட்ட நாயகனாக கரணவாய் விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த செல்வன் நிரோசன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்-2016 சென்றலைட்ஸ் கீழ்ப்பிரிவு இறுதிக்கு தெரிவு

கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 1991ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்திவரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 3வது கால் இறுதிப் போட்டி கடந்த 10 ஆம் திகதி காலை 8.30மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது சென்றலைட்ஸ் அணி, யாழ்.ஜொனியன்ஸ் அணியை 99 ஓட்டங்களால் வெற்றி பெற்று கீழ்ப்பிரிவு இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. முதலில் துடுப் பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 29.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 185 ஓட்டங்களை பெற்றது.

வினோத் குமார்-14, கனிஸ்ரன்-26, செல் ரன்-26, யனோஸன்-18, கிருபா-30, டார்வின்-31, வதுஸன்-12 ஓட்டங்களை பெற்றனர். சண்சயன்-01, அகிலன்-04, லவேந்திரா-02, கஜீபன்-01, பிருந்தாபன்-01, லோகதீஸன்-01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தா டிய யாழ். ஜொனியன்ஸ் அணி 19.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களை பெற்றது. அன்புஜன்-23, கஜீபன்-18 ஓட்டங்களை பெற்றனர். டார் வின்-03, வதுஸன்-03, கிருபா-02 இலக்குகளை கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற சென்றலைட்ஸ் அணி 17.04.16 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1மணிக்கு நடைபெற இருக்கும் கீழ் பிரிவுக்கான இறுதிப்போட்டியில் திருநெல்வேலி சி.சி.அணியை எதிர்கொள்ளும்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 7 வது ஆண்டாக நடத்திவரும் தரவரிசை பட்டியலுக்கு சென்றலைட்ஸ் அணி 6.85 புள்ளிகளையும் யாழ். ஜொனியன்ஸ் அணி 1.86 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. (க)

## ரதன் சிறப்பாட்டம் யங்கம்பன்ஸ் வெற்றி



திக்கம் இளைஞர் வி.கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைப்பந்தாட்ட தொடரில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற போட்டியில் யங்கம்பன்ஸ் வி.க.எதிர் மனோகரா வி.க மோதிய பரபரப்பான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் வி.கழகம் கடின ஆட்டத்தின் மத்தியில் வெற்றியீட்டியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணியும் கோல் போடாதிருந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் பிரகாஷின் உதவியுடன் ரதன் அதிரடியான கோலைப் போட்டார். போட்டி முடிவில் 1.0 என்ற அடிப்படையில் வெற்றியை தன்வசப்படுத்தியது கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.கழகம். (க)

## ஞானமுருகன் வெற்றி

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நாமகள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் காற்பந்தாட்டத் தொடரில் இடம் பெற்ற ஆட்டமொன்றில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்றுள்ளது.

நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து கரணவாய் மத்திய அணி மோதிக் கொண்டது. இதில் ஞான முருகன் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

## புத்தாண்டை முன்னிட்டு துடுப்பாட்டத் தொடர்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடமராட்சி அருளொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடர் இன்று வெள்ளிக்கிழமை 15 ஆம் திகதி, நாளை 16 ஆம் திகதி, நாளை மறுதினம் 17 ஆம் திகதிகளில் குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான தொடர், திறந்த வயதுப் பிரிவினருக்கான ஆண்களுக்கான தொடர், திறந்த வயதுப் பிரிவினருக்கான பெண்களுக்கான தொடர் என மூன்று பிரிவாக நடைபெறவுள்ள இந்தத் தொடர்களில் பங்கு பற்ற விரும்பும் அணிகள் ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொள் வதன் மூலம் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)

# குடும்ப மோதல்; நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரு குடும்பஸ்தருக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு மோதலில் முடிந்ததில் இரு குடும்பத்தினைச் சேர்ந்த 4 பேர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் உரும்பிராய் தெற்கு செல்வபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினைச் சேர்ந்த ஜெயசீலன் (வயது 43), சந்திரகலா (வயது 43), தினேஷ் (வயது 18) மற்றும் மற்றைய குடும்பத்தைச் சேர்ந்த தம்பிராசா சுயந்தன் (வயது 30) என்ற நான்கு பேருமே படுகாயம் அடைந்தவர்கள் ஆவர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-30)

# மின்கம்பத்துடன்...

கட்டுப்படுத்த முடியாது அருகில் இருந்த மின் கம்பத்துடன் மோதுண்டுள்ளனர். இதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

உந்துருளியில் பயணித்த இரு மாணவர்களில் ஒருவர் மட்டுமே தலைக்கவசம் அணிந்திருந்ததாகவும் அதிக வேகமாக பயணித்த அவர்கள் கிருஸ்ணபுரம் அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள வீதி வளைவில் திருப்ப முற்பட்ட போது அவர்களால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாது போய்விட்டது என்று சம்பவத்தை பார்த்த பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சம்பவத்தில் பாரதிபுரத்தைச் சேர்ந்த ஜோன் கந்தசாமி டிலக்சன் (வயது 17) மற்றும் மலையாளபுரம் வட்க்கைச் சேர்ந்த விஸ்வநாதன் ஜனார்த்தன் (வயது 17) ஆகிய மாணவர்களே உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மற்றும் பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் இறுதியாக இடம்பெற்ற க.பொ.த சாதாரண தரம் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருவரது உடல்களும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-277)

# 800றக்கும்...

பட்ட பிரதேச செயலகத்தில் பயனாளிகள் விபரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டதன் பின்னர் வலி, வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்டிருந்த ஒரு தொகுதி மக்களுடைய நிலம் மக்களிடமே மீள்குடியேற்றத்திற்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் மக்களுடைய வீடுகள் போரினால் அழிக்கப்பட்டமை மற்றும் படையினர் அழித்தமை போன்றவற்றினால் மீள்குடியேற்ற பகுதிகளில் மக்கள் உடனடியாக குடியேறுவதற்கு வீடுகள் இல்லாத நிலை காணப்படடிருந்தமையினால் மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் உடனடியாக மீள்குடியேற முடியாத நிலை காணப்பட்டிருந்தது.

மேலும் உடனடியாக குடியேறிய மக்கள் தற்காலிக கொட்டில்களை அமைத்துக் கொண்டு தங்கியிருந்தார்கள்.

இந்நிலையிலேயே மீள்குடியேற்ற அமைச்சினால் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் தலா 8 லட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுத் திட்டங்கள் வலி, வடக்கு பிரதேச செயலகத்திற்கு முதலாம் கட்டமாக 800 வரையானவை வழங்கப்பட்டிருக்கின்றது.

குறித்த வீட்டுத்திட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடைய பெயர் விபரங்கள் பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த பயனாளிகள் தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் 14 நாட்களுக்குள் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் பயனாளிகளும் தங்கள் இருப்பிடம் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தி தமக்கு வேறு பகுதிகளில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்த வேண்டுமென பிரதேச செயலகம் அறிவுறுத்தியிருக்கின்றது.

இந்நிலையில் குறித்த வீட்டுத் திட்டங்கள் மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்படுவதுடன் ஒவ்வொன்றினதும் பெறுமதி 8 லட்சம் ரூபாய் என தெரியவருகின்றது.

இந்த வீடுகள் காங்கேசன்துறை, மயிலிட்டி, வசாவிளான், கட்டுவன் போன்ற 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீள்குடியேற்றத்திற்காக அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேறும மக்களுக்காக வழங்கப்படுகின்றது.(செ-12)

# பட்டிமன்ற புகழ் ராஜா திருமதி பாரதி பாஸ்கர் பங்கேற்ற சிறப்பு பட்டிமன்றம்





இந்தியாவின் சட்டம் மற்றும் நீதித்துறைக்கான முதலாவது அமைச்சர் கலாநிதி பி.ஆர்.அம்பேதகார் அவர்களது 125ஆவது பிறந்த தின நினைவு நாளை முன்னிட்டும் தமிழ் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் மகிழ்ச்சிகரமான வாழ்கைக்கு அவசியமானவை தொன்றுதொட்டுவரும் பழமைகளா? மாறிவரும் புதுமைகளா? எனும் தலைப்பில் சிறப்புபட்டி மன்றம் நேற்றைய தினம் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9.30 மணிவரை நல்லூர் சங்கிலியன் தோப்பில் நடைபெற்றது.

யாழ்.இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடத்திய இச் சிறப்பு நிகழ்சியில் பட்டிமன்றத்தின் நடுவர்களாக தமிழகத்திலிருந்து இருந்து வருகை தந்த பட்டிமன்ற புகழ் ராஜா மற்றும் திருமதி பாரதிபாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். மகிழ்சிகரமான வாழ்கைக்கு அவசியமானவை தொன்று தொட்டுவரும் பழமைகளே எனும் தலைப்பில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், ச.லலீசன், இ.சர்வேஸ்வராவும் மாறிவரும் புதுமைகளே எனும் தலைப்பில் பேராசிரியர் தி.வேல்நம்பி, ந.விஜயசுந்தரம், செல்வி.ப. கதிர்தர்சினி ஆகியோர் கலந்துகொண்டு தமது வாதங்களை முன்வைத்தனர்.

மேலும் நிகழ்வின் மங்கல கரமான ஆரம்பமாக நாதஸ்வர தவில் வாத்தியங்களுடன் தபேலா வயலின் இசைக் கருவிகளுடன் இணைத்து சிறப்பான இசை நிகழ்வு நடத்தப்பட்டிருந்ததுடன் அதில் பங்கேற்ற கலைஞர்கள் அனைவரும் பொன்னாடைகள் போர்த்தி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்வின் இறுதியாக யாழ்.இந்திய துணைத் தூதுவர் ஆர்.நடராஜனினால் பட்டிமன்றம் புகழ்ராஜா மற்றும் திருமதி பாரதி பாஸ்கர் ஆகியோர் சிறப்பான முறையில் கௌரவிப்புச் செய்யப்பட்டிருந்தனர். (செ-9)

# கேப்பாப்பிலவு...

ட்டத்தின் ஐந்து பிரதேச செயலகபிரிவிலுமுள்ள மக்களுக்கும் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா சம்பந்தனுக்கும் இடையில் சந்திப்பொன்றுநேற்றையதினம் மாங்குளத்தில் நடைபெற்றது.

அதன்போதுமக்கள் தமதுகுறைகளை முன்வைத்த பின்னர் மக்கள் மத்தியில் உரையாற்றும் போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

காணிப் பிரச்சினை என்பது ஒருமுக்கியமான பிரச்சினை ஆகும். வடகிழக்கு மாகாணங்களில் உள்ளமாவட்டங்களில் நமது கிராமங்களில் நாங்கள் தொடர்ந்து வாழ்ந்து வருகிறோம் இந்தநாடு சுதந்திரமடைந்த பின்னர் பல மாவட்டங்களில் பல்வேறுவிதங்கஎல் பல்வேறு குடியேற்றங்கள் நடைபெற்றன.

இவ்வாறான குடியேற்றங்களை நிறுத்துவதற்காகத்தான் 1957ஆம் ஆண்டில் தந்தை செல்வநாயகம் அவர்கள் பண்டாரநாயக-செல்வநாயகம் ஒப்பந்தத்தை உருவாக்கினார். அதனைத்தொடர்ந்து 1965ஆம் ஆண்டு செல்வநாயகம் அவர்கள் டட்லி சேனநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தை உருவாக்கினார்.

பிரதமர் பண்டாரநாயக்க, பிரதமர் டட்லி சேனா நாயக்க ஆகியோர் இந்தநாட்டில் வாழ்ந்து வந்த விசேடமாக பெரும்பான்மை மக்களின் பெரும் நன்மதிப்பை பெற்றவர்கள். அவர்கள் செய்துகொண்ட இந்த ஒப்பந்தங்களில் வடகிழக்கிலிருக்கின்ற விசேடமாக தமிழ் பேசும் மக்களின் காணி உரிமை மற்றும் அவர்களுக்குரிய உரித்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர்தான் அந்த ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக அந்த ஒப்பந்தங்கள் நிறைவேற்றப் பட வில்லை.

ஆனால் நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு இந்தநாட்டில் ஏற்படுகின்போது மேற்குறி த்த ஒப்பந்தங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை விதி முறைகளின் படி அதாவது தமிழ் மக்களுக்குள்ள உரிமைகளின் அடிப்படையில் ஒருதீர்வு வர வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு. அதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருப்போம். இராணுவத்தை பொறுத்த வரையில் இராணுவத்தின் செயற்பாடுகள் காரணமாக எமது மக்களுக்கு பல்வேறு அசௌகரியங்களுக்கு உட்பட்டு வருகிறார்கள். அதை எவரும் மறுக்க முடியாது விசேடமாக பெண்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்

இராணுவத்தினர் எமது மக்களுக்கு சொந்தமான காணிகளில் வாழ்ந்து வருவதோடு அந்த காணிகளை தம்வசம் வைத்துக்கொண்டு விவசாயம் உள்ளிட்ட பல தொழில்களை செய்து வருகிறார்கள். அது மட்டு மல்லாது எமது மக்களுக்கு பாதகமான வகையில் பெரும்பான்மை இனத்தவர்களது தொழில் நடவடிக்கைகளுக்கு உதவி வருகிறார்கள்

அந்தவகையில் அண்மையில் கொக்கிளாய் பகுதியில் இராணுவத்தால் கிராம சேவையாளார்கள் தாக்கப்பட்டமை என்பது இங்கு இராணுவத்தின் செயற்பாட்டை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

கேப்பாப்பிலவை பொறுத்தவரையில் நான் பாராளுமன்றத்தில் பல தடவை கதைத்துள்ளேன் தனியாருக்கு சொந்த மான காணிகளில் இராணுவத்தினர் குடியிருப்பார்களேயானால் அதனை உரியவரிடம் கையளிக்க வேண்டும். இதனடிப்படையில் தான் யாழ்ப்பாணம் மற்றும் சம்பூரில் காணிகள் விடுவிக்கப்பட்டன

259 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள அந்த பகுதியில் வேலாயுதம்பிள்ளை என்பவர் உண்ணா விரதமிருந்தார். இந்தவிடயம் தொடர்பாக நான் யாருடன் பேசவேண்டுமோ அவர்களுடனெல்லாம் பேசி பாராளுமன்ற உறுப்பினர் சாந்தியிடம் தேவையான விபரங்களை பெற்று தேவையேற்பட்டால் நான் கேப்பாபிலவுக்கு வந்து வெகுவிரைவில் உங்கள் காணியை பெற்றுக் கொடுப்பேன் என தெரிவித்தார். (செ-281)

# மோ.சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் வாகனத்தைச் செலுத்தி வந்த இருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணிளவில் வட்டக்கச்சி புதுக்காட்டுச் சந்திப் பகுதில் இடம்பெற்றுள்ளது.

இதில் வட்டக்கட்சியைச் சேர்ந்த தெய்வேநதிரராஜா (வயது 29) மற்றும் ரத்தினபுரத்தைச் சேர்ந்த ரதன்ராஜா (வயது 27) என்ற இருவருமே படுகாயம் அடைந்தவர்களாவர்.

மேற்படி சம்பவத்தில் படுகாயம் அடைந்த இருவரையும் அவ் வழியே பயணித்துக் கொண்டிருந்த வட்டக்கச்சி படையினர் மீட்டுள்ளதுடன் தமது வாகனம் மூலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அவர்களை சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இதேவேளை இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் முறைப்பாட்டினை பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். (செ-277)

# பாக்.மரக்கறி...

இஸ்லாமாபாத்தில் இருந்து உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட மரக்கறிகளை அதிகளவில் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் ம்ரக்கறிகளுக்கு தீர்வைகளில் இருந்து விலக்களிப்பது தொடர்பாக அமைச்சரவையின் அடுத்த கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதாகவும், அமைச்சர் ரிசாத பதியுதீன் தெரிவித்துள்ளார். (செ-12)

# வாகன சாரதி...

பயணித்தவர்களே அதிகமானவர்கள் என பொலிஸ் ஊடக பேச்சாளர் காரியாலயம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒச-12)

# கரையொதுங்கி...

த்துள்ளனர்.

தனுஷ்கோடியை அண்மித்துள்ள அரிச்சல் முனை பகுதியில் நேற்று முன்தினம் இரவு சந்தேகத்திற்கிடமான இலங்கைப் படகொன்று கரையொதுங்கியுள்ளதாக பிரதேச மீனவர்கள் வழங்கிய தகவலின் பிரகாரம் தமிழக சுங்க அதிகாரிகள் அதனை மீட்டுள்ளனர்.

படகில் வந்தவர்கள் அங்கிருந்து ஏதேனும் பொருட்களை ஏற்றிச்செல்ல அல்லது இறக்கிச் செல்வதற்காக வந்துள்ளனரா எனவும் அல்லது அங்கிருந்து நபர்களை ஏற்றிச் செல்ல அல்லது இறக்கிவிட்டுச் செல்லும் நோக்கில் வந்துள்ளனரா என்ற கோணங்களில் உளவுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பிட்ட படகில் 25 குதிரை வலுகொண்ட எஞ்சின் பொருத்தப்பட்டிருந்ததுடன், 30 லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் மீன்பிடி வலைகளும் காணப்பட்டதாக தமிழகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயம் குறித்து கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி கூறுகையில்,

சம்பவம் குறித்து இதுவரை கடற்படைக்கு தகவல் பதிவாகவில்லை என்றும், அதுகுறித்து ஆராய்ந்து பார்ப்பதாகவும் கூறினார்.

இந்திய அதிகாரிகளால் உத்தியோகபூர்வமாக அறிவித்தல் விடுக்கப்படும் பட்சத்தில் தனுஷ்கோடியில் கரையொதுங்கிய மர்மப் படகு தொடர்பில் கடற்படைத் தரப்பினால் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

# இலங்கையில் முத...

அப்துல் மஜீத் அஸ் சவூதை ஜித்தாவில் அமைந்துள்ள அவரது மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் போது குறிப்பாக சர்வதேச ரீதியிலே பல்வேறுபட்ட அபிவிருத்தி பணிகளிலே ஈடுபாடு கொண்ட இளவரசர் அப்துல் அஸீஸ் பின் பைசலை இலங்கையிலும் முதலீடு செய்யுமாறும், இலங்கையினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யுமாறும் இராஜாங்க அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட இளவரசர் உடனடியாக இலங்கைக்கு விஜயம் செய்வதற்கும் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தன்னுடைய முழுப் பங்களிப்பை செய்வதாக உறுதியளித்தார்.

அதேபோன்று, அமைக்கபட்டுவரும் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் தொடர்பாகவும் இளவரசருக்கு இராஜாங்க அமைச்சர் விளக்கமளித்திருந்ததுடன், அதற்கு முழு ஒத்துழைப்பை வழங்குவதாக இளவரசர் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பு தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கருத்துத் தெரிவிக்கையில்,

சவுதி இளவரசர்கள் சர்வதேச ரீதியில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே தங்களது பாரிய பொருளாதார பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கையில் முதலீடு செய்யுமாறு நாங்கள் முன்வைத்த கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட அவர், இது தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவதாகவும் எம்மிடம் வாக்குறுதி வழங்கினார் என்றார். (செ-12)

# அரச சேவைக்கா...

ல்லை தற்போது 35 ஆக காணப்படுகின்றது.

வேலையற்ற பட்டதாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்த பின்னரே இந்த பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயினும், தங்களின் கோரிக்கைகளுக்கு இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லை என வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் தம்மிக்க முனசிங்க தெரிவித்தார்.

பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படுதல், பட்டதாரிகளை அரச தொழிலில் இணைத்துக்கொள்வதற்கான வயதெல்லையை 45 ஆக உயர்த்துதல் மற்றும் அரசியல் நலனுக்கான ஆட்சேர்ப்புகளை நிறுத்துதல், மாகாண சபைகளில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வேலையற்ற பட்டதாரிகள் முன்வைத்துள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரால் தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படும் என கடந்த காலத்தில் தெரிவிக்கப்பட்டபோதிலும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் கூறினார். (செ-12)

# குற்றமிழைத்த...

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ள உலக நாடுகளின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பான 2015 ஆம் ஆண்டுக்கான மனிதவுரிமை நடைமுறைகள் என்ற அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன கெரியால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில், இல்ங்கையின் மனிதவுரிமைகள் தொடர்பில் கடந்த ஆண்டு சுட்டிக்காட்டப்பட்ட முக்கியமான மனிதவுரிமை விவகாரங்களில் சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்படுதல், விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் எனக் கருதப்படுவோர் பரவலாக கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுதல், வல்லுறவுக்கு உட்படுத்தப்படுதல் மற்றும் இலங்கை படைத்தரப்பினரால் பாலியல் மற்றும் பாலின அடிப்படையில் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுதல் என்பனவும் அடங்கியுள்ளன.

அத்துடன், இலங்கையின் சிறைச்சாலைகளில் அதிகளவிலானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி, இடம்பெயர்ந்த மக்களின் மனிதவுரிமைகள் மற்றும் பெண்களும் குழந்தைகளும் பாலியல துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவது போன்ற மனிதவுரிமை பிரச்சினைகள் பரவலாகக் காணப்படுகின்றது.

அதேபோன்று, இலங்கையில் இடம்பெற்ற போரின் போதும், போருக்குப் பின்னரும் ஊழல், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் தொடர்பில் குற்றமிழைத்தவர்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொலைகள், கடத்தல்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கொலைகள் உள்ளிட்டவற்றுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கை அரசாங்கம் படைத்தரப்பு மற்றும் அதிகாரிகளை பலரைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளது என்று இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஓமந்தை சோதனைச்சாவடி மூடப்பட்டமை, ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டமை, ஐ.நா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை, ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர்கள் மற்றும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளரை வரவேற்றமை, தேசிய நல்லிணக்கத்துக்கான செயலகம் அமைக்கப்பட்டமை, தேசிய கலந்துரையாடல் அமைச்சை உருவாக்கியமை, காணாமற்போனோருக்கு காணாமற்போனவர் சான்றிதழ் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்தமை, பல புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் மீதான தடையை நீக்கியமை உள்ளிட்ட விடயங்களில் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை இந்த அறிக்கை பாராட்டியுள்ளது.

இதனிடையில், மக்களின் அடிப்படை உரிமைகளும், சுதந்திரமும் மறுக்கப்படும் போது என்ன நடக்கும் என்பதை இலங்கையில் காணமுடிந்தது என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி இந்த அறிக்கையின் முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், சுதந்திரமாகவும் கட்டுப்பாடுகளின்றியும் வாழ விரும்பும் மக்களுக்கான அடிப்படை உரிமைகள் மற்றும் கௌரவம் மறுக்கப்படும் போது அவர்கள் கடைசி முடிவாக அதனை எதிர்த்து நிற்பார்கள். இதனை இலங்கை உள்ளிட்ட சிரியா, பர்மா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் நாம் காணமுடிந்தது. சுதந்திரம் என்பது நிலையான சமாதானத்துக்கான அடித்தளம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில் உலகிலுள்ள 199 நாடுகள் மற்றும் பிராந்தியங்களின் மனிதவுரிமை நிலைமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக நாடுகளின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிடும் 40ஆவது அறிக்கை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# குளத்து நீரில்...

குளத்து நீரில் மூழ்கியுள்ளான்.

இதனைக் கண்ட ஏனைய சிறுவர்கள் அச் சிறுவனை தம்மால் மீட்க முடியாத நிலையில் இத்தகவலைச் சொல்வதற்காக கனகராயன்குளம் நகரிற்கு சென்று பொதுமக்களை அழைத்து வந்த போதிலும் குறித்த சிறுவன் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் மரண விசாரணைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# சமஷ்டியை பிரி...

மொழிவுகள் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள பொது எதிரணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன,

கடந்த காலத்தில் வடகிழக்கு ம்ாகாண முதலமைச்சர் வரதராஜபெருமாளுக்கு நடந்ததே முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் நடக்கும் என தெரிவித்திருக்கின்றார்.

குறித்த கருத்து தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

குறித்த விடயம் தொடர்பாக முதலமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

தினேஸ் குணவர்த்தன அவருடைய தந்தை பிலிப் குணவர்த்தன போன்றே மிகவும் படித்த ஒருவர்.

அதனால் எங்களால் மதிக்கப்படும் ஒருவராகவும் அவர் இருந்திருக்கின்றார். நான் கொழும்பு றோயல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது பிலிப் குணவர்த்தன எமது பாடசாலைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அப்போது எங்கள் பாடசாலையில் இடதுசாரிகளை நிகழ்வுகளுக்கு அழைப்பதில்லை. நானே அவரை நிகழ்வுக்கு அழைத்திருந்தேன். அப்போது மாணவர்களுடைய கேள்வி நேரத்தில் மாணவன் ஒருவன் கேட்டிருந்தான் சமஷ்டி என்பது தவறானதா என? அதற்கு பதிலளித்த பிலிப் குணவர்த்த சமஷ்டி சிறந்த தீர்வு என பிரதமரே கூறியிருக்கின்றார்.

பின்னர் எப்படி பிழையாக முடியும் என தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது அவருடைய மகனே சமஷ்டி பிரிவினைவாதம் என கூறிக் கொண்டிருக்கின்றார்.

மேலும் வரதராஜபெருமாளுக்கு நடந்ததே எனக்கும் நடக் கும் என தினேஸ் குணவர்த்தன கூறியிருக்கின்றார். வரதராஜபெருமாள் வடகிழக்கு மாகாணங்களை தனி அலகாக அறிவித்தார். ஆனால் நாங்கள் கேட்டிருப்பது சம்ஷ்டி.

சமஷ்டி என்பது நாட்டை பிரிக்காமல் அந்த நாட்டுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தங்கள் அடையாளங்களை பாதுகாத்துக் கொண்டு வாழ்வதற்கான ஒரு தீர்வு முறையாகவே இருக்கின்றது.

குறிப்பாக இந்தியாவில் மாநிலங்கள் தங்கள் மொழிகள் அடிப்படையில் சமஷ்டி அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இதற்குமேல் பிரிட்டனிடம் இருந்து ஸ்கொட்லாந்து, பிரான்ஸிடமிருந்து கியூபெக் போன்றன பிரிந்து தனியே போக விரும்பாமல் ஒன்றாக சமஷ்டி அடிப்படையில் இணைந்து வாழ்கின்றன.

மேலும் தினேஷ் குணவர்த்தன கூறியிருக்கின்றார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமை இருக்கின்றபோது வடமாகாண சபை தனியாக தீர்வுதிட்ட முன்மொழிவுகளை முன்வைப்பதாக, இந்தக் கருத்து ஒரு படித்த மனிதர் கூறும் பதிலா என கேட்க நினைக்கிறேன்.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் அந்த உரித்து உள்ளது. மேலும் நாங்கள் கட்சியுடன் ஆராய்ந்த பின்னதாகவே இந்த முன்மொழிவுகளை தயாரித்துள்ளோம். கட்சியின் கடப்பாடுகளுக்கு வெளியே செல்லவில்லை.

இதேபோல் வடமாகாண சபை மே மாதத்தில் பிரிந்து தனியாக செல்வதற்கான பிரேரணைகளை முன்வைக்கவுள்ளதாக் கூறப்படுகின்றது.

இது தொடர்ச்சியாக நடந்துவரும் விடயம். இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கு சாதகமான தீர்வு திட்டங்கள் வருகின்றபோது எதிர்கட்சிகள் தமிழர்களை பிரிவினைவாதிகளாக காட்டி தங்களுடைய நலன்களை பெற்றுக் கொண்டு விடுவார்கள்.

இதனையே ஒன்றிணைந்த பொது எதிரணியும் செய்ய நினைக்கிறார்கள். இவ்வாறான பேச்சுக்களினாலேயே 1983ம் ஆண்டு இனக்கலவரம் போன்ற சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

எனவே வடமாகாண சபையில் நாங்கள் விடுகின்ற சில பிழைகளை சுட்டிக்காட்டுங்கள். அதை விடுத்து தமிழர்களை பிரிவினைவாதிகளாக சித்தரித்து உங்கள் சுயலாபங்களை பெற்றுக்கொள்ள விரும்பாதீர்கள் என முதலமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வெற்றிடங்கள்
வீட்டுப்பணிப்பெண்கள், வெல்டர், கார்பென்டர்,
AC டெக்னீசியன், சுத்திகரிப்பாளர் (ஆண், பெண்)
உங்கள் விருப்பத்துக்குகேற்ப தொழில்
எம்மிடம் கிடைக்கப்படும்
IKEA Travels & Tours Pvt (Ltd) LLC3097
Contact : 021 222 4220 / 077 773 2022
62/34, Stanley Link Old Post Office Road, Jaffna.
www.ikeatourslk.com
(C-4295)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-06

**பகுதி-II** | **தமிழ்க் கல்விக் கழகம்** | **நேரம்:- 1 மணி 15 நிமிடங்கள்**

01.பின்வரும் பாடலை வாசிக்க

இறைவன் நம்மை அழைக்கின்றார்
விரைந்து வாருங்கள்
புதிய உலகம் படைத்திடவே
மகிழ்ந்து கூடுங்கள்...
பொய்மை நீங்க வேண்டும்
வாய்மை மலர வேண்டும்
தீமை ஒழிய வேண்டும்
தர்மம் ஓங்க வேண்டும்
தெளிந்த நீரைப்போல் மானிடம் மாறவேண்டும்...

மேற்குறித்த பாடல்களைப் பயன்படுத்தி 01 தொடக்கம் 08 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

1.இறைவன் ஏன் நம்மை அழைக்கின்றார்..............................

2.அழைக்கின்றார் என்பதன் எதிர்கால வடிவம் யாது?..............................

3.இந்த உலகத்திலே எவை உருவாக வேண்டும் என்று கவிஞர் கூறுகின்றார்?..............................

4.பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்தினை எழுதுக?

1.வாய்மை ..............................

2.மகிழ்ச்சி..............................

5.பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்தினை தருக?

1.தர்மம்..............................

2.புதிய..............................

6.இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள நீங்குதல் என்பதன் பொருள் யாது?..............................

7.பாடலில் அதிகளவு பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லை எழுதுக?..............................

8.இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக..............................

02.பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக

1.பேராசை பெரும் தரித்திரம்..............................

2.அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு..............................

03.பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் எழுதுக

இனிய/கூழல்/குரலால்/பறவைகளின்/அழகு பெற்றது/சிறிய..............................

04.கறுப்பு/ மேய்ந்து/ கட்டியிருந்த/புல்/ கொண்டிருந்தது/தூணில்/மாடு

..............................

05.கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.

1.நீரிழிவு நோயாளிக்கு.............................. (பாவக்காய், பாகற்காய்) சிறந்த உணவாகும்.

2.............................. முடியாதது ஒன்றுமில்லை (முயட்சித்தால், முயற்சித்தால், முயர்ச்சித்தால்)

பின்வரும் மரபுத் தொடரின் கருத்தினை எழுதுக

06.பூசி மெழுகுதல்..............................

07.வயிற்றெரிச்சல்..............................

08.காது குத்துதல்..............................

09.சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1.மளைவீழ்ச்சி | 2.மழைவீழ்ச்சி | 3.மலைவீழ்ச்சி | 4.மழைவீள்ச்சி |
| 2.சுகவீனம் | 2.சுகயீனம் | 3.சுவையீனம் | 4.சுகையீனம் |
| 3.மலைதொடர் | 2.மழைத்தொடர் | 3.மலைத்தொடர் | 4.மளைத்தொடர் |

10.பின்வரும் ஒருமை வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக்கி எழுதுக

1.பட்டம் வானில் ஆடி அசைந்து பறக்கிறது..............................

2.நான் வீட்டுக்குச் சென்றேன்..............................

11.பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக?

1.நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன்..........

2.எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா..........

3.காட்டு விலங்குகளின் பாதுகாப்பிற்கு ஒதுக்கிய பகுதி..........

12.பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக

1.Now cross the road..........

2.I can hear you ..........

13.பின்வரும் படங்களுக்குரிய பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக

1. 

2. 

14.பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக

1.அம்மே மட்ட படகினிய..........

15.பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக

1.கைகளை உயர்த்துங்கள்..........

2.வாருங்கள் மகள் சோறு சாப்பிடுங்கள்..........

16.பின்வரும் உரைப்பகுதியை வாசிக்குக..........

1.வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. திடீரென மரங்கள் அசைந்தாடின. சாதாரணமாக வீசிய காற்று பலமாக வீசத் தொடங்கியது. மரங்கள் சரிந்து........

பின்னர் நடந்திருக்கக் கூடுமென நீங்கள் கருதும் விடயங்கள் பற்றி கட்டுக்கோப்பான மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களுக்கு மேல்இடம் பெறுதல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக அமைதல் வேண்டும்.


..........

..........

..........

17.8 △ 6 ○ 4= 12 எனின் .......... △ , ○ இற்குள் இடவேண்டிய கணிதச் செய்கை அடையாளத்தை இடுக

18.முப்பதாயிரத்து தொளாயிரம் என்பதை இலக்கத்தில் எழுதுக..........


19. 

இத்திண்ம உருவின்

1.உச்சிகளின் எண்ணிக்கை?..........

2.விளிம்புகளின் எண்ணிக்கை?..........

20.200 ml பாலின் விலை ரூபா 25.00 எனின் 2.5 ml பாலின் விலை யாது?..........




வட்ட வரைபில் நிழற்றியுள்ள பகுதி 2014 ஆம் ஆண்டு பாடசாலை ஒன்றில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 8 மாணவர்களைக் காட்டுகின்றது. இதன்படி 21, 22ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

21.சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை யாது?..........

22.புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?..........


23.ஒரு பென்சில் பெட்டியில் 6 டசின் பென்சில்கள் உள்ளன. அவ்வாறான 7 பெட்டிகளில் உள்ள பென்சில்கள் எத்தனை?..........

24.சதுர வடிவப் பூம்பாத்தி ஒன்றின் பரப்பளவு 81 $cm^2$ எனின் அச்சதுரத்தின் சுற்றளவு யாது?..........


25. 


அருகிலுள்ள A பென்சிலினதும் B பென்சிலினதும் மொத்த நீளம் யாது?

26.என்னிடம் ரூபா 1000.00 உள்ளது. அதில் 0.65 பங்கைச் செலவு செய்தபின் மீதியாகவுள்ள பணம் எவ்வளவு?

27. 

காட்டப்பட்டுள்ள உருவில் எத்தனை செங்கோணங்கள் உள்ளன.?

28. 

உருவில் தரப்பட்ட கடதாசித் துண்டில் அகலப் பக்கத்தில் ஒரு பக்கம் 1cm நீளத்தையுடைய சமபக்க முக்கோணத்துண்டு வெட்டி அகற்றப்பட்டது. அகற்றிய பின்னர் அக்கடதாசித் துண்டின் சுற்றளவு எத்தனை cm என எழுதுக?

29. 

1.இவ்வுருவில் நிழற்றிய பகுதியை பின்னத்தில் எழுதுக..............................................................

2.அப்பின்னத்தின் சமவலுப்பின்னத்தை எழுதுக?....................................................................

30.ஒவ்வொன்றும் 500 ml கொள்ளளவு கொண்ட ஒன்பது போத்தல்களில் உள்ள பானம் 5l கொள்ளளவு கொண்ட வேறொரு பாத்திரத்தில் ஊற்றப்பட்டது. பாத்திரத்தில் உள்ள பானத்தின் கனவளவு யாது?

31.மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டில் பிரார்த்தனை எத்தனையாவது படிமுறையாகும்?

1.படிமுறை 1 2.படிமுறை 2 3.படிமுறை 3 4.படிமுறை 4

32.கரப்பந்தாட்ட குழு ஒன்றுக்குரிய வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

1. ஆறு 2.ஏழு 3.பத்து 4.பன்னிரெண்டு

33. தேசப்படத்தில் புகையிரதப் பாதையைக் குறிக்கப் பயன்படுத்தும் நிறம் யாது?

1.கறுப்பு 2.சிவப்பு 3.கபிலம் 4.நீலம்

34.தரப்பட்டுள்ளவற்றில் விசப் பிராணி எது?

1.தும்பி 2.எறும்பு 3.கரப்பொத்தான் 4.தேள்

35.  மஞ்சள் நிற பின்னணியில் தரப்பட்டுள்ள குறியீடு குறிப்பது

1.முன்னால் பாதசாரிகள் கடவை 2.பாதசாரிகள் கடவை

3.சிறுவர் கடவை 4.நடந்து செல்லக்கூடாது

36.5 இன் மடங்காக அமையாதது எது?

1) 10 2) 25 3) 32 4) 40

37.செப்புத்துண்டொன்றின் அருகே காந்தமொன்றைக் கொண்டு செல்லும் போது நடைபெறும் மாற்றமாக இருக்கக்கூடியது

1.செப்புத் துண்டு முதலில் கவரப்பட்டு பின்னர் தள்ளப்படும் 2.செப்புத்துண்டு காந்தத்தால் தள்ளப்படும்

3.செப்புத்துண்டு காந்தத்தால் கவரப்படுவதும் தள்ளப்படுவதும் இல்லை 4.செப்புத்துண்டு காந்தத்தால் கவரப்படும்

38.அலவாங்கு ஒன்றினால் பெரிய கல்லொன்றைப் புரட்டும் போது கவனிக்க வேண்டிய அம்சம் எது?

1.அலவாங்கு குறுகியதாக இருத்தல் 2.அலவாங்கு கூர்மையாக இருத்தல்

3.அலவாங்கு நீளமானதாக இருத்தல் 4.அலவாங்கு தடிப்புடையதாக இருத்தல்

39.உணவுப் பொருட்களை பொதி செய்யப் பயன்படுத்தப்படாத தாவர இலை

1.வாழையிலை 2.வட்டக்கண்ணி இலை 3.திப்பிலி இலை 4.தாமரை இலை

40.தெறியோட்டை தைக்கப் பயன்படுத்தப்படும் தையல் முறையானது

1.சங்கிலித்தையல் 2.நரம்புத்தையல்




3.கம்பளித் தையல் 4. அடைப்புத் தையல்

41.வீட்டுத் தோட்டமொன்றில் பூச்சிகளின் வருகையைக் கட்டுப்படுத்துவதற்குக் கையாளப்படும் மிகப் பொருத்தமான முறையானது?

1.செடிகளுக்கிடையே இடைவெளிஎய அதிகரித்தல் 2.செவ்வந்திச் செடிக்ளை நாட்டுதல்

3. சூரிய வெளிச்சம் குறைவாகக் கிடைக்கச் செய்தல் 4.நன்றாக இயற்கைப் பசளையிடல்

42. காற்றுத் தட்டு ஒன்றை அமைத்துக் கொள்ளப் பயன்படுத்தும் கடதாசியின் வடிவம் எத்தகையதாக இருக்கவேண்டும்?

1.  2.  3.  4. 

43.பின்வருவனவற்றுள் பெரிய உடலமைப்பைக் கொண்ட பிராணி

1.காட்டுக்கோழி 2.தீக்கோழி 3.பென்குயின் 4.வாத்து

44.நாற்றுமேடை அமைக்காது பாத்திகளில் நேரடியாக நடக்கூடிய வித்தொன்று

1.மிளகாய் 2.வெண்டி 3.தக்காளி 4. கத்தரி

பின்வரும் பெரியார்களை அவதானித்து அவர்களின் பெயர்களை கோட்டினுள் எழுதுக

45.  ____________

46.  ____________

47.  ____________

48.  ____________

49.மீனவக் கைத்தொழிலில் வலை இழுத்த பின் மீன்கள் ஒன்றுசேரும் பகுதியைக் குறிக்கும் சொல்

1.தீதாள் 2.பட்டடை 3.மடி 4.நாம்புவ

50.  இவ்வுருவில் காட்டப்படும் விலங்கு எது?

1.நீர்யானை 2.காண்டாமிருகம் 3.பண்டா 4.பனிக்கரடி

51.தனது உடலின் நிறத்தை தேவைப்படும்போது மாற்றிக்கொள்ளக்கூடிய பிராணி

1.உடும்பு 2.பல்லி 3.பூரான் 4.ஓணான்

52.தவளை முட்டையிடுவது

1.மண்ணினுள் 2.நீரில் 3.தாவர இலையின் மேல் 4.கல்லுக்குக்கீழ்

53.இந்தியா அமைந்துள்ளது இலங்கைக்கு

1.வடக்கில் 2.தெற்கில் 3.கிழக்கில் 4.மேற்கில்

54.மண்ணை வளப்படுத்தி விவசாயிக்கு உதவும் பிராணியாகக் கருதக்கூடியது

1.நத்தை 2.எலி 3.ஓணான் 4.மண்புழு

55.வித்துக்கள் பரம்பலடைவதற்கு உதவும் பிராணி

1.தேனீ 2.புறா 3.வண்ணத்துப்பூச்சி 4.வெளவால்

56.நிலம் நீர் ஆகிய இரண்டு இடங்களிலும் வசிக்கும் பிராணி

1.தவளை 2.மீன் 3.அணில் 4.ஓணான்

57.  இவ்வுருவில் காணப்படும் கால்களையுடைய பறவை

1.வாத்து 2.கோழி 3.காகம் 4.பருந்து

58. 

அருகில் காணப்படுவது மோட்டார் சைக்கிளின் வாகனத் தகட்டிலக்கம். இவ்வாகனம் பதிவு செய்யப்பட்ட மாகாணம் எது?

1.வடமாகாணம் 2.தென்மாகாணம் 3.மேல்மாகாணம் 4.கிழக்கு மாகாணம்

59.வீட்டில் வாழும் பல்லி ஓர்

1.மாமிச உண்ணியாகும் 2.தாவர உண்ணியாகும்

3.அனைத்து உண்ணியாகும் 4.அனைத்து விடைகளும் தவறானவை

60.  இப்புராதன கலையாக்கம் காண்பது

1.தலதாமாளிகையில் 2.சிகிரியாவில் 3.இசுறு முனியாவில் 4.மிகுந்தலையில்

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை சனிக்கிழமை (15.04.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆


**தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்**

★யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)

★அ.நிமலகாந்தன் (யா/இனுவில் மத்திய கல்லூரி)

★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)

★G.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)

★K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)

★I.முபாரக் (பொ/அல்றிபாய் முஸ்லிம் மகா வித்தியாலயம், பொலநறுவை)